


# குறள் நெறி

# சித்த நெறி




04703
...nal Library. Thanjavur

சித்த சமாஜ நிறுவகர் - சுவாமி சிவானந்த வள்ளல்.

# குறள் நெறியும்
# சித்த நெறியும்

ஆராய்ச்சிக்
கட்டுரை

ஆக்கியோன்:
புலவர் நா. பசும்பொற்கிழார்



வெளியீடு:
சிவானந்தா சித்தநெறிப் பயிற்சிக் கழகம்,
பசும்பொன்.
இராமநாதபுரம் மாவட்டம். தமிழ்நாடு.

முதற் பதிப்பு—1974. 1000 நூல்கள்.

உரிமை — ஆசிரியர்க்கே.

ஆசிரியர்:
புலவர் நா. பசும்பொற்கிழார்
பணியாற்றல்—பாலையம்பட்டி பி. பி வி. சாலை
இனம்—மாந்தரினம் (தமிழர்)

விலை ரூ. 2-00

அச்சிட்டவர்:
R. சுந்தரராசன்
இனம்—மாந்தரினம்—(தமிழர்)
சுந்தர் அச்சகம்
அருப்புக்கோட்டை.
இராமநாதபுர மாவட்டம்.

வெளியீடு:
கு. நடராசனார். (தலைவர்)
இனம்—மாந்தரினம்—(தமிழர்)
சிவானந்தா சித்தநெறிப் பயிற்சிக் கழகம்
பசும்பொன் (அஞ்சல்)
இராமநாதபுர மாவட்டம்.

# உள்ளே உள்ளன....


| | | பக்கம் |
| --- | --- | --- |
| | உளமுவந்து கொடையளித்த உயர்திரு நல்லார்கள்! | iv |
| | முன்னுரை | v |
| | ஆசிரியர் கருத்து | ix |
| 1. | கற்றல் | 1 |
| 2. | இடும்பையும் அறிவுடையானும் | 4 |
| 3. | கொல்லாமை | 8 |
| 4. | அறமும் அன்பும் | 12 |
| 5. | அறமும் ஆக்கமும் | 17 |
| 6. | கனவிலும் துன்பமே | 22 |
| 7. | தவத்திற்கு அடையாளம் | 25 |
| 8. | தகைமைகண் தங்கும் உலகு | 30 |
| 9. | உண்டியும் மருந்தும் | 36 |
| 10. | வினைத் திட்பம் | 41 |
| 11. | சா(கா)ப்பாடு | 45 |
| 12. | ஒழுக்கம் | 48 |
| 13. | எது பழி? | 52 |
| 14. | உயிர்நிலை | 54 |
| 15. | அறமும் இல்லறமும் | 56 |
| 16. | அமரருள் உய்க்கும் | 59 |
| 17. | கேடில்லாச் செல்வம் | 63 |
| 18. | உயிர்க்கு | 67 |
| 19 | வருமுன் காப்போம் | 71 |
| 20. | வாழ்வாங்கு வாழ்தல் | 77 |
| 21. | உண்மை வழிபாடு எது? | 80 |
| 22. | வாழும் உயிர்க்கு? | 86 |

# உளமுவந்து கொடையளித்த உயர்திரு நல்லார்கள்!

பிரம்மஸ்ரீ சுவாமி சாந்தானந்தர், மலேசியா, ரூ. 300. மதுரை, ஸ்ரீதோசிரம சுவாமி கிருஷ்ணமாச்சாரியார் ரூ. 100. டாக்டர் பிரம்மஸ்ரீ S. சங்கரனார், சென்னை ரூ. 30. திரு. இராம. அருணாசலம், கரூர், ரூ. 23. பிரம்மஸ்ரீ கணபதி சுவாமிகள், சிவானந்தபுரம், கோவை, ரூ. 15. பிரம்மஸ்ரீ குளத்துமணிசாமி, சிவானந்த தபோவனம், கோவில் பட்டி ரூ 14. திரு. R. பாரதி, மேலப்பாளையம், நெல்லை ரூ. 11.

ஆளுக்குப் பத்து ரூபா மேனி வழங்கியவர்கள்:-

பிரம்மஸ்ரீ— பா. சு. அச்சுதன், பாலையம்பட்டி. வே. வேங்கட சாமி, பாலையம்பட்டி. நா. சிவ. வேல்சாமி, அனுப்பானடி, மதுரை. இரா. முத்துக்கிருஷ்ணன், எம்.ஏ., திருநகர், மதுரை. இராம. குப்புசாமி ஆசிரியர், பாண்டிச்சேரி. அஞ்சல் நிலையம் (தலைவர் சிவசாமி முலமாக) பாலையம்பட்டி. பெயர் விரும்பாப் பெருந்தொண்டர் கார்த்திகை விழாக் குழுவாளர், இராஜபாளையம். கோவிந்தசிவம், பி. ஏ., திருவில்லிபுத்தூர் பெரி. நாகு. சிவகங்கை. கு. நடராசன், பசும்பொன். முருகேசன், காரைக்குடி. திரு. மொட்டைய ரெட்டியார், திருவண்ணாமலை. பிரம்மஸ்ரீ லலிதா தங்கராஜ் ரூபா 7 .கோவில்பட்டி

ஆளுக்கு ரூபா 5 மேனி வழங்கியவர்கள்:-

பிரம்மஸ்ரீ— புனுகாண்டி, செல்லூர் ஆலயம், மதுரை. B. R. கிருஷ்ணராம், ஜீவா நிலையம், மதுரை. S. பெருமாள், திருச்சி-2. N. மாணிக்கம, குற்றாலம். மேன்மையுள்ள சோதிமயானந்தசாமி, கோவில்பட்டி. P R. பாலசுப்பிரமணி, காரைக்குடி. திரு. புலவர். வை. கண்ணையன், அருப்புக்கோட்டை. திரு. எல். சுந்தரம், கழுகுமலை. திரு. சி. ஆறுமுகம், தேவபண்டலம், தெ. ஆ மாவட்டம்.

பிரம்மஸ்ரீ சிவானந்த பக்தன், சிம்லா, இமயம் ரூ. 15. பிரம்மஸ்ரீ S. N. லட்சுமி அம்மாள், சென்னை ரூ. 15. திரு. வள்ளியூர் சுப்பிரமணிய பாண்டியன் ரூ. 30.

**நன்கொடை நல்கிய நல்லார் பலர்க்கும்**
**நன்றியைக் கூறுகிறேன்; நன்று.**

பசும்பொன்,
1--1--74.

நன்றியுள்ள,
**பசும்பொற்கிழார் நா. இராசாராம்**

# முன்னுரை.

பசும்பொன்! மண்ணைப் பொன்னுக்கிக் காட்டிய சித்தர்கள் வாழ்ந்த சிறப்பிடமே பசும்பொன். தவசிகள் தங்கியிருந்த இடப் பகுதியாகக் குறிக்கப் பட்டதே "தவசிக்குறிச்சி". பசும்பொன் சிற்றூரே எனினும் தவசிகள் வதிந்ததால் தவசிக் குறிச்சி யென்னும் தெருப் பெயர் அமைந்த திருப்புகழ் பெற்றுள்ளது பசும்பொன்.

பாரெல்லாம் போற்றும் பசும்பொன் உ. முத்து ராமலிங்கத் தேவரின பாட்டனுர் மரபில் தோன்றி யவரும், தேவர் தம் இளமைக் காலத்தும், வழக்குகள் சிலவற்ருல் சிறைப்பட்ட காலத்தும் தேவர்க்கு உறுதுணையாகவும், பொறுப்பாளராகவும் பெரிதும உதவி புரிந்துவந்த மருத்துவ மேதை குழந்தைச்சாமி வைத்தியர் என்பாருமான எம் தந்தைக்குப் பேத்தி ஞானக்கலையப்மையின் இரண்டாம் திருமகளுகத் தோன்றியவர் புலவர் நா. பசும்பொற்கிழார் (நா. இராசாராம்)

இவர் 1932-ஆம் ஆண்டு நாகலிங்கம், ஞானக் கலையம்மை ஆகியோர்க்கு இரண்டாம் மகளுகப் பிறந்தார். இளமையில் தந்தையை இழந்து மதுரை யம்பதியில் உயர் நிலைப்பள்ளிக் கல்வியைமுடிக்காமல் சூழ்நிலைக்கேற்ற சுற்றத்தின் மாற்றத்தால் சில தொழில்கள் புரிந்து, சில கட்சிகளில் ஈடுபட்டுப் பின் தன்னையுணர்ந்து தமிழ்ப் பணி புரிய விழைந்து தக்கார் பலர் கூட்டுறவால் தமிழ்ப் புலவர்க்குப் பயின்று புலவரானுர்.

இலக்கிய வளஞ் சார்ந்த நெஞ்சுடைய இவர் திங்கள் இதழ்கள் சிலவற்றில் (செந்தமிழ்ச் செல்வி,

# உளமுவந்து கொடையளித்த உயர்திரு நல்லார்கள்!

பிரம்மஸ்ரீ சுவாமி சாந்தானந்தர், மலேசியா, ரு. 300. மதுரை, கீதாசிரம சுவாமி கிருஷ்ணமாச்சாரியார் ரு. 100. டாக்டர் பிரம்மஸ்ரீ S. சங்கரனர், சென்னை ரு. 30. திரு. இராம. அருணாசலம், கரூர், ரு. 23. பிரம்மஸ்ரீ கணபதி சுவாமிகள், சிவானந்தபுரம், கோவை, ரு. 15. பிரம்மஸ்ரீ குளத்துமணிசாமி, சிவானந்த தபோவனம், கோவில் பட்டி ரு 14. திரு. R. பாரதி, மேலப்பாளையம், நெல்லை ரு. 11.

ஆளுக்குப் பத்து ருபா மேனி வழங்கியவர்கள்:-

பிரம்மஸ்ரீ— பா. சு. அச்சுதன், பாலையம்பட்டி. வே. வேங்கட சாமி, பாலையம்பட்டி. நா. சிவ. வேல்சாமி, அனுப்பானடி, மதுரை. இரா. முத்துக்கிருஷ்ணன், எம்.ஏ., திருநகர், மதுரை. இராம. குப்புசாமி ஆசிரியர், பாண்டிச்சேரி. அஞ்சல் நிலையம் (தலைவர் சிவசாமி மூலமாக) பாலையம்பட்டி. பெயர் விரும்பாப் பெருந்தொண்டர் கார்த்திகை விழாக் குழுவாளர், இராஜபாளையம். கோவிந்தசிவம், பி. ஏ., திருவில்லிபுத்தூர் பெரி. நாகு. சிவகங்கை. கு. நடராசன், பசும்பொன். முருகேசன், காரைக்குடி. திரு. மொட்டைய ரெட்டியார், திருவண்ணமலை. பிரம்மஸ்ரீ லலிதா தங்கராஜ் ருபா 7 .கோவில்பட்டி

ஆளுக்கு ருபா 5 மேனி வழங்கியவர்கள்:-

பிரம்மஸ்ரீ— புனுகாண்டி, செல்லூர் ஆலயம், மதுரை. B. R. கிருஷ்ணராம், ஜீவா நிலையம், மதுரை. S. பெருமாள், திருச்சி-2. N. மாணிக்கம, குற்றலம். மேன்மையுள்ள சோதிமயானந்தசாமி, கோவில்பட்டி. P R. பாலசுப்பிரமணி, காரைக்குடி. திரு. புலவர். வை. கண்ணையன், அருப்புக்கோட்டை. திரு. எல். சுந்தரம், கழுகுமலை, திரு. சி. ஆறுமுகம், தேவபண்டலம், தெ. ஆ மாவட்டம்.

பிரம்மஸ்ரீ சிவானந்த பக்தன், சிம்லா, இமயம் ரு. 15. பிரம்மஸ்ரீ S. N. லட்சுமி அம்மாள், சென்னை ரு. 15. திரு. வள்ளியூர் சுப்பிரமணிய பாண்டியன் ரு. 30.

**நன்கொடை நல்கிய நல்லார் பலர்க்கும் நன்றியைக் கூறுகிறேன்; நன்று.**

பசும்பொன்,
1--1--74,

நன்றியுள்ள,
**பசும்பொற்கிழார் நா. இராசாராம்**

# முன்னுரை.

பசும்பொன்! மண்ணைப் பொன்னாக்கிக் காட்டிய சித்தர்கள் வாழ்ந்த சிறப்பிடமே பசும்பொன். தவசிகள் தங்கியிருந்த இடப் பகுதியாகக் குறிக்கப் பட்டதே "தவசிக்குறிச்சி". பசும்பொன் சிற்றூரே எனினும் தவசிகள் வதிந்ததால் தவசிக் குறிச்சி யென்னும் தெருப் பெயர் அமைந்த திருப்புகழ் பெற்றுள்ளது பசும்பொன்.

பாரெல்லாம் போற்றும் பசும்பொன் உ. முத்து ராமலிங்கத் தேவரின பாட்டனார் மரபில் தோன்றி யவரும், தேவர்தம் இளமைக் காலத்தும், வழக்குகள் சிலவற்றால் சிறைப்பட்ட காலத்தும் தேவர்க்கு உறுதுணையாகவும், பொறுப்பாளராகவும் பெரிதும உதவி புரிந்துவந்த மருத்துவ மேதை குழந்தைச்சாமி வைத்தியர் என்பாருமான எம் தந்தைக்குப் பேத்தி ஞானக்கலையம்மையின் இரண்டாம் திருமகனாகத் தோன்றியவர் புலவர் நா. பசும்பொற்கிழார் (நா. இராசாராம்)

இவர் 1932-ஆம் ஆண்டு நாகலிங்கம், ஞானக் கலையம்மை ஆகியோர்க்கு இரண்டாம் மகனாகப் பிறந்தார். இளமையில் தந்தையை இழந்து மதுரை யம்பதியில் உயர்நிலைப்பள்ளிக் கல்வியைமுடிக்காமல் சூழ்நிலைக்கேற்ற சுற்றத்தின் மாற்றத்தால் சில தொழில்கள் புரிந்து, சில கட்சிகளில் ஈடுபட்டுப் பின் தன்னையுணர்ந்து தமிழ்ப் பணி புரிய விழைந்து தக்கார் பலர் கூட்டுறவால் தமிழ்ப் புலவர்க்குப் பயின்று புலவரானார்.

இலக்கிய வளஞ் சார்ந்த நெஞ்சுடைய இவர் திங்கள் இதழ்கள் சிலவற்றில் (செந்தமிழ்ச் செல்வி,

மன்றம், ஆனந்த போதினி, மகாசனம், கண்ணகி, தென்மொழி, தமிழ்ச் சிட்டு, தமிழ்நாடு வார இதழ், திருவள்ளுவர்) பாடல்கள் எழுதிவந்தார். மலேசியாவில் நடந்துவரும் 'தமிழ் நேச'னிலும் இலக்கியப் பாக்கள் எழுதி வந்தார். சித்தர் சொக்கையா சாமியைச் சார்ந்தொழுகிய எம் தந்தை குழந்தைச் சாமி வைத்தியரையா அவர்களின் ஆன்மிக உணர்வு அவர் பேத்தியின் மகனான பசும்பொற்கிழார்க்கு 35-ம் வயதில் அரும்பியது! அவர்தம் குணங்களும் நேரிய கூரிய சீரிய வழியான சித்தர் நெறிக்குத் திருப்பியது. கேரளா, வடகரைச் சித்த சமாஜ நிறுவகர் சுவாமி சிவானந்த வள்ளலின் சித்த வித்தை உபதேசத்தைப் பெற்று இன்றைய உலகியல்படி பொருளீட்டும் வழிகளை விரும்பாமல் சில வேளைகளில் வறுமையைத் துய்த்தாலும் சித்த நெறியே செல்வமெனச் சீரிய முறையில் பயிற்சி செய்து தான் துய்க்கும் இன்பப் பேற்றை, தன்னை நம்பிய பலர்க்கும் சொல்லாலும் எழுத்தாலும் வேண்டும் போதெல்லாம் விளக்கியும் தன்னைப் புதுக்கியும் வருகிறார்.

கேரளம், வடகரைச் சித்த சமாஜத்திலிருந்து வெளிவரும் 'உலக க்ஷேமம்' திங்களிதழிலும், சென்னையிலிருந்து வரும் 'அருட்பெருஞ்சோதி', பத்ம சோதி', 'நந்தி'—முதலிய இதழ்களில் எழுதிவந்த "குறள்நெறியும் சித்தநெறியும்" கட்டுரைகளை எங்களைப் போன்றவர் பலர் தனி நூல் வடிவில் ஆக்கித்தர வேண்டியமையால் புலவர் ஒப்புக்கொண்டு சித்த வித்தியார்த்தி சிலர்க்கு நன்கொடை வேண்டி மடல் விடுத்து அச்சுக்கூலியில் பாதியைப் பெற்று மேலும் வேண்டிய பொருட்குக் கடன்பட்டும் அச்சிட்டார்.

சித்தநெறி வளர்ச்சிக்கு அவர் செய்யும் தொண்டு கண்டுதான் நாங்களும் சித்தவித்தியார்த்தியானோம். அவர் தம் ஆற்றலைப் பல வடிவிலும் கண்டு அவரன்னையார் பிரம்மஸ்ரீ ஞானக்கலையம்மாளும் அவரிடமே உபதேசம் பெற்றார். கைப் பொருள் மதியாது மெய்ப்பொருள் நாட்டங் கொண்டவராய் உலக சித்த வித்தியார்த்திகளின் தொடர்பாளராக விளங்கிக்கொண்டு தமது குறுகிய வருவாயிலும் கூடுமானவரை இலவச மருத்துவமும், வயிற்றுப் பசி என்று வந்தோர்க்கும், அறிவுப் பசி என்று வந்தோர்க்கும், கூடுமான பொருளும், புலனும், பொழுதும் அவர்கட்கு அளித்து வருவது இற்றைய நாளில் அரிதான ஒன்றாகும்.

குறுகிய வருவாய் உடைய ஆசிரியப் பணியில் உள்ள இவர்தம் புறவாழ்க்கை நான்கு குழந்தைகளும் இல்லாளுமுடைய குடும்பமாகவுள்ளது எனினும், இவர்தம் ஊக்கமுடைமை, அஞ்சாமைக்குக் காரணியமான சித்த வித்தையின் பயனாது, கடல் கடந்து வாழும் பிரம்ம ஸ்ரீ சாந்தானந்தசாமி (மலேசியா) இவர் மனம் வாடும்போது உணர்வு வழி தெரிந்து அஞ்சல் வழி போதிய பொருளனுப்புகிறார். நேர்முகம் காணாதவர். உணர்வு வித்தை ஓர்முகத்தால் உணர்ந்து உதவுகிறார் எனின் வித்தையின் ஆற்றலை வியக்காமலிருக்க முடியாதன்றோ!

இன்னவர் தம் தொண்டு சிறக்கவும், இவராலும் பலர் வித்தியார்த்திகளாகவும் இவர் நூலைப் பெரிதும் போற்ற வேண்டும். இவர் போன்றார்க்கு வித்தியார்த்தி உலகமாவது ஆக்கமளிக்க வேண்டும். சித்த வித்தியார்த்தி பலர்க்கு கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றல் இல்லாமல் எழுதும் ஆற்றல் மட்டுமே இருக்கும். எழுதமட்டும் முடியும் சிலர்க்கு.

இன்னும் சிலர்க்கு தாமுண்டு தம் வித்தைத் துய்ப் புண்டு என்று தன்னலத்துடன் மட்டுமே இருந்து பிறரை அணுகவும் விடாமலிருப்பார். இன்னும் பலர் வித்தியார்த்தி என்ற போர்வையில் மட்டுமே இருப் பர். பசும்பொற்கிழாரைப் பொறுத்தளவில், எண் ணம், சொல், செயல் இம்மூன்றும் பெரும்பாலும் சித்தவித்தைஉணர்விலே உள்ளதாகஇருக்கிறார். சித் தவித்தைச் சொற்பொழிவும்,சித்தவித்தை கட்டுரை எழுத்தும், சித்த வித்தைப் பயிற்சியும் தனித்தனி ஆற்றல் பெற்றவையாகக் காணும்படியும் பிறரை ஈர்க்கும்படியும் அருள் பெற்றவராகத் திகழ்கிறார்.

உலகக்ஷேம இதழ்க்கும், இராஜபாளையம் கார்த் திகை விழாக்குழுவுக்கும், ஐந்தருவி ஆசிரமம், மதுரை செல்லூர் ஆலயம், பாலையம்பட்டி சி. சி. ப. கழகத் திற்கும் தொடர்ந்த தொண்டாற்றிக் கொண்டும், முடிந்தவரை புலால், புகை, புண்மைப் பொருள் துய்ப்பு-என்னும் பேய்கட்கு அடிமைப்பட்டவர் பலரைத் தம் விளக்கங்களால் விடுதலைபெற வைத்து வருகிறார். இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள கல் லல், பாலையம்பட்டி, அருப்புக்கோட்டை, பசும் பொன் ஆகிய ஊர்களில் சித்தவித்தைப் பயிற்சி யைத் தொடர்ந்து செய்துவரும் குழுவாக ஆங் காங்கே அமைத்து "சிவானந்தா சித்தநெறிப் பயிற் சிக்கழகம்" என்னும் தலைப்புமிட்டுக் கிளையாகத் தொண்டு புரிந்து வருகிறார்.

இன்னும் அரியதொரு ஆராய்ச்சியுடைய திருக் குறள் நெறியை சித்த நெறிக்குப் பொருத்தமாக இலக்கியம்—இலக்கணம்—ஆன்மிகம்--இம்மூன்றின் சார்பைக் கொண்டுமே வினு விடையமைப்பில் தனி நூலாக்க எழுதுகிறார். பலரும் இவரை ஊக்குவிப் போமாக.

இன்னணம்,

**கு. நடராசன்**, தலைவர்,
சிவானந்தா சித்தநெறிப் பயிற்சிக் கழகம்,
1—1—74. பசும்பொன் (அஞ்சல்)
இராமநாதபுர மாவட்டம்.

# ஆசிரியர் கருத்து.

நன்றி! வணக்கம். மாந்தராகப் பிறந்தார் தம் உடல் நலம், உயிர் நலம் நிலையாக இருக்க சித்தர்களாலும் உயிர்நெறிப் பெரியார்களாலும் அவற்றிற்கான ஒழுக்கப் பயிற்சி கற்பிக்கப்பட்டது.

அப்பயிற்சியை நேராகக் கற்பிப்பதைவிட பல கலையமைப்பு முறைகளையும் சாத்திர சடங்குகளையும் இணைத்துத் தத்தம் மதங்களுக்கு ஏற்பப் பல்வேறு பெயர்களால் விளக்கப்பட்டன.

மாந்தன் நலமாக வாழத் தகுதியான வழிமுறைகளைத் தெரிந்த மாந்தர்களால் உண்டாக்கப் பட்டவையே எல்லாம். அவற்றைப் பின்னர் அறிய வரும் மாந்தர், தத்தமது கால நிலைகளுக்கு ஏற்பத் திரித்தும், மாறுபடுத்தியும் மொழி வாரியாகவும், பண்பாட்டு வாரியாகவும் ஏற்படுத்திக்கொண்டு "எங்கள் வழிதான் சிறந்தது" என்று சொற்போர் செய்தும் விழாக்கள் நடாத்தியும் வேடிக்கை வழிபாட்டுமட்டில் நிறைவடைவதே இன்று மலிவாகி வருகிறது.

தெள்ளத் தெளிந்தவர்கள் "சீவனே சிவலிங்கம்" என்றதை எண்ணிப்பார்த்து அவரவர் உயிரும் உடலும் நலமாக இருக்க என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும். அதைச் செய்ய இன்ன மதம், இன்ன இனம், இன்ன வழிபாட்டுத் துறை முறை என்றெல்லாம் வேண்டியதில்லை. உயிரெல்லாம் உயிரே! என்றபடி மாந்தரெல்லாரும் மாந்தரே! என்று மன ஒருமைப்பாட்டை வளர்த்து அதனால் நல்ல ஆற்றல்களைப் பெற்று நீடு வாழ்வதே மாந்தர் குறிக்கோள்.

மாந்தர் வாழ்க்கையில் குறிக்கோள் இருக்க வேண்டும். எப்படியும் வாழலாம் எப்பொழுதும் சாகலாம் என்பதுகூடக் குறிக்கோள் தான்! அது பயனற்றது. நம் உயிர் நலத்திற்கும் உடல் நலத்திற்கும் இடையூறாக உள்ள பழக்க வழக்கப் பற்றுக்களைத் துறந்து விடுபேறே வீடுபேறு . அவ்வீடு பேற்றை யடைவதே குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

அவ்வீடு பேற்றை யடையச் செலவு செய்ய வேண்டா. புலனடக்கத் திட்பமே போதும். அவ்வடக்கம் செய்யப் பல பயிற்சிகள் இருக்கலாம். ஆனால் 'சுவாமி சிவானந்த பரமஹம்சா' என்னும் வடகரைச் சித்த சமாஜ நிறுவகர் காட்டிக்கொடுத்த சித்த வித்தையைப் போல எளிதான வலிதான அமைப்புடைய பயிற்சி முறை வேறு முறைகளில் காணலரிதே. இதைத் துய்த்தவரே யறிவர். .

இப்பயிற்சியால் உடல் நலம் உயிர் நலம் பெறலாம் என்பது எமது துணிபு. இப்பயிற்சி பற்றி விளக்கவே திருக்குறளைத் துணையாகக் கொண்டு பல வேளைகளில் தோன்றிய கருத்துக்களைத் திங்களிதழ்களில் எழுதி வருகிறேன். போற்றுபவர் போற்றுங்கள்.

என் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்ட பசும்பொன் தாத்தா கு. நடராசனார்க்கும், இந்நூல் அச்சாக உதவிய அன்பர்கட்கும், சுந்தர் அச்சகத்தார்க்கும் உளங் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பசும்பொற்கிழார் நா. இராசாராம்

# 1. கற்றல்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக." திருக்குறள் (391)

இந்தக் குறளைப் பலமுறை படித்திருக்கலாம். பிறர்க்கும் எடுத்துச் சொல்லிப் பாடமும் நடத்தியிருக்கலாம். ஆனால், இக்குறட்பாவின் மெய்ப் பொருளைத் தெரிந்து கொள்வதுதான் கடினம். மெய்யுணர்வால் செய்த பாட்டிற்குப் பொய்ப் பொருளும் பொருந்தா உரையும் கூறிப் புலமை பாராட்டும் நிலைமை மலிந்த இக்காலத்தில் மெய்யுரை நோக்கு அமைவது அரிதே. கற்க கசடு அற, அதாவது கசடு அறக் கற்க. கசடு—இழிவு. தன்னிடம் உள்ள இழிவு நீங்கும்படி செய்வதே கல்வி. 'கற்றல்' என்றால் இழிவைப் போக்க வேண்டும். இழிவை வைத்துக்கொண்டும், அதைப் போக்க முயலாமலும் இருப்போர் யாராயிருந்தாலும்—பெரிய பெரிய பட்டதாரிகளாயினும் கற்றவராகார். "ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையின் பேதையார் இல்." என்றபடியாகும்.

'கல்வி' என்றால் அது கசடாகிய இழிவைப் போக்க வேண்டும். தன்னிடம் இழிவை அறியாமல் இருக்கும்வரை கல்வியறியாதவரே; பொதுவாக அறியாமையாளரே! "அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார் அஃதறி கல்லாதவர்" ஆவது-என்பது எதிர்காலம். எதிர்காலம் அறிந்து செயல்படுபவரே அறிவுடையார்; கற்றவர். மற்றவர் கல்லாதவரே. எதிர்காலம் எப்பொழுது தெரியும்? மெய்யுணர்வுக்கு வந்தால்தான் தெரியும். 'ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வு இலாதவர்க்கு' என்றார். மெய் - வாய் - கண் - மூக்கு - செவி - ஆகிய

ஐந்து பொறிகளின் உணர்வில் ஒழுக்கம் எய்தினும் மெய்யுணர்விற்குரியவற்றைப் பாடுபட்டுத் தெரியவில்லையானால், எதிர்காலமும் தெரியாது. கசடும் தெரியாது. இனி, கற்பவை என்பதை ஆய்வோம். உலகில் கற்பவை பலவென்று கருதி வருவதால்தான் திருவள்ளுவனார் "கற்பவை கற்றபின்" என்று சொல்ல வேண்டியதாயிற்று. கசடைப் போக்குவது மெய்யுணர்வுக் கல்வி ஒன்றால்தான் முடியும். அதற்குப் பாடுபடும் செயலே சித்த வித்தை. இதற்குத் தமிழிலும் வடமொழியிலும் பல்வேறு பெயர்கள் கூட இருக்கலாம். உயிர் நெறிப் பெரியார்கள் எல்லாரும் சித்த வித்தை வழியாகவே தத்தம் கசடை நீக்கியே தூயோரானார்கள். உயர இருந்த புத்தனும், கணிகையர் தம் கடைக் காலில் கிடந்த அருணகிரியும் கூட சித்த வித்தையாற்றான் கசடைத் துடைத்தனர். இன்று எத்தனையோ வகைப் படிப்புகளை 'கல்வி' என்றும் கற்பவை என்றும் கூறுவது பொருந்தாது. கசடை அறுப்பதே கல்வி. அதனாற்றான், மற்றவை கற்பவையாக இருப்பினும், கல்விகளாகக் கருதப்பட்டாலும், கசடை அறுப்பது ஒன்றே கல்வி என்றார். ஒரே ஒரு முறைக் கல்விதான் கசடை அறுக்க முடியும் என்னும் கருத்தால் கற்பவை என்னும் பன்மைச் சொல்லைச் சொல்லி அவைக்குத் தக என்று பன்மையிலேயே கூறாமல் அதற்குத் தக என்று ஒருமையில் கூறிய உட்பொருளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பயன்இல் சொல் பகர்பவரா வள்ளுவனார்? கற்பவை பலவாக இருக்கலாம். எல்லாவற்றையும் நீங்கள் கல்வி என்றும் கூறலாம். ஆனால், திருவள்ளுவரோ கல்வி என்று ஒன்றுதான் இருக்க முடியும். அதன் பொருள் இழிவை அகற்றும் செயல்பாடே.

அவைக்குத் தக—என்னுமல் அதற்குத் தக நிற்க வேண்டும் என்பதிலிருந்து கல்வி ஒன்ருகத் தான் இருக்க முடியுமென்பதை மீண்டும் நினைவிற்கொள்க கசடை அறுத்தவர்களால் கற்பிக்கப்பட்டதே கல்வி. மற்றவரால் எழுதப்பட்டனவும், பயிற்றப்படுவன வும் வெறும் வெளிப்படிப்பே. வெளிப்படிப்பில் இருந்து உள்படிப்பாகிய மெய்யுணர்வைத் தெரியும் போது தான் தத்தம் கசடு நன்கு தெரியும்.

## வடமொழியில் வழிபாடு!

''சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரசன்ன வதனம் தயாயேத்
ஸர்வ விக்னேப சாந்தயே.''

**தமிழாக்கம்:-**

சுக்கிலம் —வீரியம் (விந்து)
அம்பரம் —ஆகாயம்
விஷ்ணு —மனம்
சசி —சந்திரன்
வர்ணம் —நிறம்
சதுர்புஜம் (சதுர்—நான்கு; புஜம்—கைகள்)

**விளக்கம்:-**

சுக்கிலம் ஆகாயமாகிய தலையில் ஸ்திதி செய்கின்றது. சந்திரனைப் போல் வெண்ணிறமுடைய அதற்கு நான்கு குணங்கள். அதுவே சதுர்புஜம்-1 மனம், 2. புத்தி, 3. சித்தம், 4. ஆங்காரம் இவை சேர்ந்தே உடலில் ஒளியைப் பிரசன்னப்படுத்தி வதனம் (முகம்) பொலிவாகிறது. இதற்குக் காரணமாக இருப்பது சுக்கிலமே. அதைக் கட்டிக் காத்தால் சர்வ வல்லமையும் குறையாத தன்னிறைவையும் பெறலாம்.

-பிரம்மஸ்ரீ டாக்டர் S. சங்கரனர், சென்னை-5

## 2. இடும்பையும் அறிவுடையானும்

''வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தில் உள்ளக் கெடும்.'' —குறள் (622)

இடும்பை—துன்பம். துன்பமானது பல வடிவங்களில் வருவது. பல அளவாகவும் வருவது. உயர்ந்தோரையும் தாழ்ந்தோரையும் பாகுபாடு பார்க்காமல் பிடித்தாட்ட வல்லது.

அவரவர் தகுதிக்கேற்ப துன்பம் வேலை செய்யும். தத்தம் கருமம் (செயல்) எந்த அளவில் நிகழ்கிறதோ அந்த அளவிற்கு ஏற்ற இன்ப துன்பம் உண்டு.

''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.'' —என்றார்.

இதிலிருந்து அவரவர் துன்பத்திற்கும் காரணமானவை அவரவர் செயற்பாடுகளே எனத் தெரிகிறோம்.

இனி, அத்துன்பம் வந்தபின் தடுத்தல்-வருமுன் தடுத்தல் என இருவகைப்படும். வருமுன் தடுத்தலைச் செய்வது, வள்ளலார் போன்றவரால்தான் முடியும். வந்தபின் தடுத்தல் தூய அறிவுடையார்க்கே முடியும். அறிவுடையாரின் இலக்கணத்தைத் திருவள்ளுவரே சொல்கிறார்.

''அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லாதவர்.''

அறிவுடையவர் என்றால் அவர் 'ஆவது' எதிர்காலம் அறிபவராக இருத்தல் வேண்டுமென்கிறார். எதிர்காலம் தெரிந்து செயல்பட வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? என்பார் பலர். எதிர்காலம் தெரிந்துகொள்ளும் படிப்பு, அச்சடித்த நூல்களிலோ ஓலைச்சுவடிகளிலோ மந்திரங்கள் சொல்லப்

படும் செப்புத்தகடுகளிலோ அறிய முடியாது; பெற முடியாது.

உள்ளத்தின் ஒருமைப்பாட்டு உணர்வால்தான் தெரிந்துகொள்ளமுடியும். அதற்கு உள்ளத்தை அலைக்காத வழிபாட்டு முறை தேவை.

அவ்வழிபாட்டு முறைதான் வள்ளலார் கூறும் ஒளி வழிபாட்டு முறை. மற்றச் சித்தர் வழிபாட்டு முறைகளும் அதுவே. உள்ளத்தை ஒருமுகப்படுத்தப் பல பயிற்சிகள் செய்யப்படுகின்றன. அவற்றில் தவறானவை பல. அப்பயிற்சியில் தெளிவுறாமல் பலர் தொடங்கி இடர்ப்பட்டு இடையிடையே விட்டு விடுவார்கள்.

''தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பைத் தரும்.''

என்பார் திருவள்ளுவர்.

தெளிந்த பயிற்சி வாசி யோகப் பயிற்சிதான். கடயோகப் பயிற்சியும் வாசியோகம்போல் தோன்றினாலும் மாறுபட்டது. ஏற்றி இறக்கி இருகாலும் (காற்றும்) பூரிக்கச் சொல்லும் திருமூலர் சொல்லும் பயிற்சியும் வள்ளலார் சொல்லும் "ஆடேடி பந்து"ப் பயிற்சியும் ஒன்றுதான். வெளியில் ஓடும் காற்றை உள்முகமாக மூக்கை அடைக்காமல் மூச்சை நிறுத்தி விடாமல் நேராக ஏற்றி நேராக இறக்கவேண்டும். இப்பயிற்சி செய்யச் செய்ய வீணே கழியும் உயிர்க் காற்று கழியாமல் சேமிப்பாகிறது. அவ்வாறு செய்யும்போதுதான் வாழ்நாள் கூடுகிறது. இவ்விடத்தைத்தான் திருவள்ளுவர்,

''வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.'' என்கிறார்.

இதையே சிலர் "சிவராசயோகம்" என்பர். இப் பயிற்சியைச் செய்யும்போதுதான் வீணே கழியும் பன்னிரண்டு விரற்கடைக் காற்றில் நான்கு விரற் கடை சேமிப்பாகும். இப்பயிற்சி பற்றியே மாணிக்க வாசகரும் ஞானத்தாழிசையில் பாடியுள்ளார்.

''பத்தோடிரு கலையாகிய பனிரெண்டினில் நாலும்
பாழ்போகிட மீண்டேவரும் பதியின் கலை நாலும்''
(ஞானத்தாழிசை 5-ஆம் பாட்டு)

பத்து + இருகலை = பன்னிரண்டு கலை (பன்னிரண்டங் குலக் காற்று)

இப்படிப்பட்ட சித்த நெறிப் பயிற்சியைத் தக்கவர்களைக் கொண்டுதான் தெரிந்து பயிலவேண் டும். வெறும் நூற்பயிற்சிகளால் தெரிந்து செயல் பட முடியாது. இதுபற்றி மாணிக்கவாசகரும் தம் ஞானத் தாழிசை பத்தாவது பாட்டில் கூறுகிருர்.

''ஆயும்பல நூல்சாத்திர வேதத்தொடு, புராணம் ஆய்வந்திடு வழி கண்டறி யார்கள் அது தானும், பாயுங்கலை பனிரெண்டினில் உண்டாகிய பருவம், பாரும் அறி யாது பனி ரெண்டின் செயல் கண்டு, நாயின்கடை கெட்டாய் வழிபாடும் முதற்பெற்ருய், நாள் கோள் பலவற்ருய் கொலைகளவென்றது மற்ருய், வாயும்வல தற்ருய் உயிர் வீடும்நெறி யற்ருய், மண்ணின் வரவற்ருய் இனி பொன் னம்பலம் மனமே.''

இவ்வாறு பாடப்பட்ட நூல் திருவாசகத்தில் முன்பு இணைந்தே இருந்தது. பிற்காலத்தில் எவரோ நீக்கிவிட்டார். ஆயினும் உண்மை வெளியாகாமல் இல்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குற்ரு லம் ஐந்தருவியில்உள்ள சங்கராசிரமத்தின் தவத்திரு சுவாமி சங்கரானந்தா அவர்களிடம் உள்ளது. விளக்கம் வேண்டுவோர் அவரிடம் பெற்றுக்கொள்

ளலாம். சித்த வித்தைப் பயிற்சியும் அவரிடம் பெற லாம். அப்பயிற்சிக்குரியவர்கள் புலால், கள், இலாகிரிப் பொருள்கள் முதலியன உட்கொள்ளாதவராகவும், உயிர்க்குத் துன்பம் இழைக்காதவராகவும் இருத்தல் வேண்டும்.

அழுக்கைச் சுரண்டியபின் தான் உண்கலத்தில் ஈயம் பூசவேண்டும். அப்போது தான் ஈயம் பிடிக்கும். அழுக்கு நிறைந்த உண்கலத்தில் நல்ல ஆவின் பாலை ஊற்றினாலும் அது கெட்டுவிடும். அதுபோல உயிர் நெறி கூட்டும் (அவ்வாசியோகம்) உயிர்ப்படக்கப் பயிற்சி பெறுவார் கட்டுப்பாடுகட்கு உட்பட்ட வராக இருத்தல் வேண்டும்.

இவ்வாறுள்ள பயிற்சியில் முதிர்ச்சியடைய அடைய மனம் ஒருமைப்பாடுறும். அப்பொழுதே எதிர்காலமும் புலப்படும் என்பார்கள். அவர்களே அறிவுடையார். மேலும் மெய்ப்பொருளைக் காணக் கூடியவரும் அறிவுடையவரே! மனம் சென்றவிடத் தால் செலவிடாது நன்றின்பால் உய்ப்பதும் அறி வின் இலக்கணமே. இத்தகைய அறிவுடையவர்க்கு இடும்பை வந்தாலும் அவர் உள்ளத்தில் உள்ள (நினைக்க) அவ்விடும்பை கெட்டுவிடுமாம்.

எனவே மாந்தராகப் பிறந்த நாம் விலங்குகளைக் காட்டிலும் சில செயல்களால் உயர்ந்து விளங்கலாம். ஆனால் அறிவுடையவராக விளங்குகிறோமா? வள்ளு வனார் சொல்லும் வழியான அறிவைப் பெற்றால் தானே முழு மாந்தனாக முடியும். எனவே, நாம் மாந் தர் வடிவங்களை வளர்க்கிறோம்! பெருக்கியும் வருகி றோம். ஆனால் உண்மையான மாந்தர்க்குரிய தன்மை யைப்பெற முயலவில்லை. முயல்வோமாக.

''முயற்சி மெய்வருந்தக் கூலிதரும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.''

# 3. கொல்லாமை-உயிர்க்காப்பு

''அறவினை யாதுஎனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.''

(கோறல்—கொலை செய்தல்)

இந்தக் குறட்பா, வள்ளலார் ஐயாவின் சீவ காருணிய அருட்பாவை ஒத்தே கொல்லாமையைப் பற்றி வலியுறுத்துகிறது.

'அறம்' என்றால் என்ன? தருமமா? மனத்துக் கண் சில வேளைகளில் மட்டும் மாசில்லாமல் இருத்தலா? வள்ளுவர் எவ்வாறு அறத்திற்கு விளக்கம் தருகிறார்? என்றெல்லாம் சற்று எண்ணிப் பார்த்தால் மெய்ப் பொருள் புலனாகும்.

அறம்—உயிர்க்காப்பு
அறம் + வினை = அறவினை
அறவினை-அறச்செயல். (வினை-செயல்)
அறச் செயல்-உயிர்க்காப்புச் செயல்.

''அறம்'' என்பதற்கு உயிர்க்காப்பு என்று பொருள் சொல்வது பொருந்துமா? என்று வினவலாம். பொருந்தும். மேற்கண்ட குறளில் உள்ள முதல் அடியே போதுமான விடை கூறும்.

''அறவினை யாது? எனில், கொல்லாமை.'' கொல்லாமையில் இரண்டு வகையுள்ளன. ஒன்று தானே கொலை செய்வது. அதாவது அறிந்து செய்வது. பிறரை அல்லது பிறவற்றைத் திட்டமிட்டே கொலை செய்வது. அல்லது கொலை செய்விப்பது. அது போலவே தன்னையும்கூட திட்டமிட்டே (தன் + கொலை) தற்கொலை செய்து கொள்வது. அல்லது பிறரால் தான் கொலை செய்யப்படுவோம் என்றறிந்தும் தக்க வழியில் தடுக்க முயலாமலும், அல்லது கவனம் இல்லாமலும் இருந்து கொலைபடுதல்.

இதுவும் கொலை செய்தலேயாம். இன்னுமொரு வகை உண்டு. அதுதான் மறைவாக நிகழ்வது. ஒவ்வொருவருக்கும் மூச்சுக் காற்று (உயிர்க் காற்று) மேலே இழுப்பதைவிட கீழே விடுவது மிகுதியாகும் மாந்தர் திகழும் பல நிலைகளுக்கு ஏற்றவாறு (கழியும்) மூச்சுக் காற்றில் மாற்றம் ஏற்படும். அதாவது, மாந்தர் விழித்து அமர்ந்திருக்கும்பொழுது மேலே இழுக்கும் காற்றின் அளவு எட்டு விரற்கடை (அங்குலம்) அளவென்ப. கீழே இறங்கும் காற்றின் அளவு பன்னிரெண்டு விரற்கடை(அங்குலம்) என்ப. எனவே ஒவ்வொரு தடவையும் மேலும் கீழுமாக இயங்கும் காற்றுக் கணக்கில் வெளியே கழிவது ஏறிய காற்றின் அளவைவிட இறங்கும் காற்றின் அளவு நான்கு விரற்கடையளவு வீணுகிறது. இது அமர்ந்திருந்து மூச்சு விடும் அளவு.

இனி, நடக்கும்போதும், ஓடும்போதும், பெருஞ் சுமை சுமக்கும்போதும், மாதர்பால் புணர்ச்சி நேருபபோதும், வெளியேறும் உயிர்க்காற்று நான்கு விரற்கடைக்கும் மேலாகவே சென்று உயிராற்றலைக் குறைக்கும்.

இம்முறை அறியாமல்-உயிர் கழிவதைத் தெரியாமல் இருப்பதும் தற்கொலைக்கு ஒப்பாகும். இது பற்றித் திருவள்ளுவர் சொல்கிறுர், ஒவ்வொரு நாளும். உனக்கு நாள் போன்று தோன்றினுலும், அது உண்மையில் நாளாகமாட்டாது. உன் உயிரைக் குறைத்துக்கொண்டே செல்லும் வாளாகும் என்கிறுர்.

''நாளென ஒன்றுபோல காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.''

இன்னும் "நீ வாழும் நாள் எல்லாம் வாணுள் அல்ல. வாழும் நாள் பயன் தெரிந்தால் தான் வாணுளாகும். இல்லையேல் வீணுளாகும். அவ்வாறு வீண் நாளாக ஆக்காமல் தடுத்தால் வாழ்நாள் நீடிக்கும். வாழும் நாளுக்கு முடிவே இல்லை" என்கிருர்.

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்."

மேலும்,

"கொல்லாமை மேற்கொண்(டு) ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா(து) உயிருண்ணுங் கூற்று."

என்கிருர். இப்பாடல்களை ஆராயுங்கள்.

கொல்லாமை - பிறரை - பிறவற்றை- தன்னைக் கொல்லாமை.

இதையறிந்து வாழ்ந்தால் அதுதான் அறவாழ்வாகும்.

அறம் + வினை = அறவினை (அறச் செயல்) எவ்வுயிர்க்கும் (தன்னுயிர்க்கும்) செந்தண்மை பூண்டு ஒழுகலான் அந்தணன் என்போன் அறவோனுவான் அறத்தைச் செய்பவனுக்கு மற்ருெரு பெயர்தான் அந்தணன். "எவ்வுயிர்க்கும் செந்தண்மை" — இச் சொல்லை ஆராயுங்கள்.

எவ்வுயிர்க்கும் எனின் தன்னுயிர்க்கும் என்றே பொருள் கொள்ளவேண்டும். செந்தண்மை-பாது காப்பு. அல்லது துன்பம் செய்யாமை. நம் வீட்டு வேலைக்காரனை நமக்குப் பிடிக்கவில்லை என்றல் அவனைத் தகுந்தபடி தண்டிக்கவும் வாய்ப்பில்லை. அப்படியிருக்கும்போது அவன் பிறரால் கொலை செய்யப்படப்போகிருன் என்று தெரிந்திருந்தும் தடுக்காமல் வாளா இருந்தாலும் அக்கொலைக்கு நாமுந்தாம் காரணம் செந்தண்மை பூண்டு ஒழுகு

தல் என்பதில், ஒழுகுதலுக்குச் செயல்படுதல் என்பதாம். செந்தண்மை - பாதுகாப்பு. எவ்வுயிர்க்கும் முடிந்த அளவு நலம் செய்தல், அல்லது துன்பம் தவிர்த்தல் என்பதாம்.

எனவே இவ்வாறு உயிர் காக்கும் தன்மைதாம் செந்தண்மை இச் செந்தண்மை பூண்டு ஒழுகுதல் தான் அறவினை. இவ்வறவினை செய்பவர்தான் அறவோர். அவர்க்கு மறுபெயர்தான் அந்தணன். பிறப்பால் அந்தணர் என்பது இல்லை.

இதுகாறும் கூறியவற்றை மீண்டும் ஒருமுறை திரும்பப் படித்துப் பாருங்கள்.

அறவினை யாது? எனில் கொல்லாமையாகும்.
கோறல்—கொலை செய்தல்.
பிறவினை—அறவினை அல்லாத மற்ற வினைகள் எல்லாம்.
தரும்— தந்தே துன்பப்படுத்தும்.

பதினெண் சித்தர்கள் நெறிகளும் அருட்பெரும் வள்ளலார் நெறியும் திருக்குறட்பா நெறியும் ஒன்றேயாகும்.

இவற்றை ஏன் ஒப்பிட்டுக் காட்டுகிறோம் என்றால், இன்னும் மாந்தர் தாம் உண்மை வாழ்வு வாழத் தெரியாமல் எதைஎதையோ வாழ்வெனக் கருதி மயங்கி மாய்ந்து வருகிறார்கள். எனவேதான் நிலமிசை நீடு வாழும் நெறிமுறைகள் பற்றிப் பாடற் சான்றுகளும், சொல் ஆராய்ச்சி விளக்கங்களும் தரவேண்டியதாகின்றன.

இவ்விளக்கங்களைத் தெரிவதுடன் நில்லாமல், செயற்பாட்டில் இறங்கித் தூய்மையடைய வேண்டும்.

*

# 4. அறமும் அன்பும்!

**சித்தம் - உள்ளம்.**

உள்ளம் தெளிவாக இருந்தால்தான், பேச்சிலும் பார்வையிலும் தெளிவு புலப்படும். எண்ணமும் சொல்லும் தெளிவாக அமைந்த நிலையில் செயல் பட்டால் அச்செயலும் தெளிவாகவேயிருக்கும்.

முகம் பார்க்க உதவும் கண்ணாடி தெளிவாக இருந்தால் தான் முகம் தெளிவாகத் தெரியும். அது போல உள்ளம் தெளிவாக இருந்தால்தான் நல்லது. உடல் தெளிவாக இருக்க, நாம் என்ன என்ன செய்கிறோம்! எவ்வாறெல்லாம் முயல்கிறோம்! எத்தனை ஆயிரம் மருந்துகளின் உதவி தேவையாகிறது! எப்படித்தான் உடலைப் பேணினாலும், மருத்துவர்க்கும் சில வேளைகளில் உடல் தெளிவில்லாமல் மருந்தின் உதவி தேவையாகிறது. மருத்துவர்க்கே அப்படியானால் மற்றவர்க்குச் சொல்ல வேண்டுமா? ஆக உடல் தெளிவு செய்ய முயற்சிப்பதிலும் அத் தெளிவை நிலையாக அமைக்க முடிவதில்லை! அப்படியே நிலையாக உடல் தெளிவைப் பெற வேண்டுமானால் உளத் தெளிவைப் பெற்றால் போதுமென்கிறார் உயர் திருவள்ளுவப் பெருமானார்.

உளத் தெளிவுகூட சில வேளைகளில் தான் சிலர்க்கு வாய்க்கிறது. எப்பொழுதும் உளத் தெளிவைப் பெறமுடியுமா? எனில் பெறலாம். அதற்கேற்ற வழி வகையைத் திருக்குறளில் காணலாம். சிலர் சில வேளைகளில் உடல் மினுக்காலும், வலிமையாலும், உடற்கலைப் பயிற்சியாலும், உடை மினுக்காலும், உரையாற்றல் ஈர்ப்பாலும் தம் தெளிவைக் காட்டலாம். ஆனால் அத் தெளிவு நிலையாக அமை

வது அரிது! இளமையையும், நூலறிவுப் புலமையையும், புறப்பொருள் வளமையையும் கட்டும் கண்டு தெளிவுடையோர் என்றும் சொல்லிவிடக் கூடாது. போட்டிகளில், வழக்குகளில் வெற்றியடைந்து விட்டால் தெளிவானவர் எனவும் முடிவுசெய்யக்கூடாது எப்படி நிலையான தெளிவைப் பெறுவது? வள்ளுவர் எப்படிச் சொல்கிறார்? என்று அறிய விருப்பம் எழுகிறதன்றோ! இதோ! படியுங்கள்.

"அன்பறிவு தேற்றம் அவாயின்மைஇந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு." —என்றார்.

அன்பு வேண்டும்; அனால் போலியன்பு கூடாது அறிவு வேண்டும்; ஆனால் மெய்ப்பொருள் காணும் அறிவு வேண்டும்.

தேற்றம்—தேர்ச்சித்தன்மை வேண்டும். ஆனால் தேர்ந்தவர்போல் நடிப்புக் கூடாது

அவா—தீமை பயக்க ஏதுவான எண்ணம்! அது இன்மை—இல்லாதிருக்கும் தன்மை வேண்டும் இந் நான்கு நற்குணங்களை நன்கு உடையவரே தெளிவைப் பெற்றவராவார்! என்பது மறைதிரு பாதானுபங்கியாரின் மாண்புரை.

இங்கே ஒரு சொல்லாய்வைப் பாருங்கள்! "இந் நான்கும் உடையான்" என்னுமல், "நன்குடையான்" என்று ஏன் சொல்லவேண்டும்? 'நன்கு' என்ற சொல்லின் பொருள் எல்லாருக்கும் தெரிந்ததே! அந் நான்கு குணங்களும் வாய்ப்பதரிது! அப்படி வாய்த்தாலும் நிலையாக (நன்கு) அமைவது அதனினும் அரிது! என்பதால்தான் அப்படி "நன்குடையான்"

என்றார் என்றறிய வேண்டியிருக்கிறது. இன்றைய மாந்தர் வாழ்வில் அறிவியல்—பொறியியக்க நெறியமைந்த குறிமலிந்த வாழ்க்கையில் எல்லாம் புறத்தில் தெளிவாகவே செயல்படுவதுபோல தோற்றம்! ஆனால், இயற்கைச் சார்பு குறைந்தும், செயற்கைச் சார்பு மலிந்தும் வருவதைத் தெளிவுடைய வாழ்க்கையைக் கருதுவதும், போற்றுவதும், குறள் நெறியறியாத் தன்மையே என்பேன்!

"செயற்கையறிந்தக் கடைத்தும் உலகத்(து) இயற்கையறிந்து செயல்" என்பதை ஆராய வேண்டும்! செயற்கை வாழ்க்கை மலியும் இக்காலத்தில், முப்பாலில் காணும் தெளிவைப் பெற முடியுமா? எனில் பெரும்பாலோர்க்கு முடியாதுதான்! ஆனால் நல்வழி கூறுவோரும், இறைவழிபாடு நடத்துநரும், மதம் பரப்புவோரும், அறச்சாலை நடத்துநரும், மடத் தலைவர்களும், அறநிலையத் தலைப்பில் இயங்கும் கோவில் அடியார்களும், இறைவழிச் சொற்பொழிவாளர்களும் பிறர்க்கு எடுத்துக்காட்டாக குறள் கூறும் தெளிவு பெற முயல்வது நல்லது!

அன்பு: "அன்பு வழிதான் உயிர்நிலை!" இது குறட் கருத்து. உயிர்நெறிச் சார்பில் செயல்படும் அன்பே அன்பு. உயிர்க்கொலை செய்யும் அன்பு! அதை அன்பு போன்றது என்றுகூடக் கூறமுடியாது.

"அறத்திற்கே அன்பு சார்பென்ப! அறியார்
மறத்திற்கும் அஃதே துணை!" —என்றும்

திருவள்ளுவர் கூறுகிறாரே! என்றும் வினவலாம். ஒருநாட்டு மக்கள் உயிரைக் காக்க மற்றொரு நாட்டை அழிப்பதுதான் தன்னாட்டின் மீது கொண்ட அன்பைக்காட்டுவது! என்பர். ஆனால் அது

உயிர்காக்கும் அன்பாகாது! துணையாண பற்றுகும்! அதனால்தான் 'மறத்திற்கும் அஃதே (அன்பே) துணை" என்றார். அமைச்சர் பணியெல்லாம் செய்வான் துணைவன். ஆனால் அவனை அமைச்சன் என்பதில்லை. அழித்தல் எப்போதும் நடைபெறுவதில்லை! சில வேளைகளில் மட்டுமே போருக்கு—அழித்தல் வினைக்கு உதவியாக அமையும் அன்பு. அப்படிச் சில வேளைகளில் மட்டும் உதவும் அன்பு, நிலையாக உயிர் காக்கும் தன்மைசால் அன்புக்கு ஒப்பாக முடியாது.

சில வேளைகளில் மட்டும் உதவும் ஒருவனைப் பொதுவாக நண்பனாக கருதலாம்! ஆனால், இடுக்கண் கண்டபோதெல்லாம், உடுக்கை இழந்தவனின் கை போல உதவும் ஒருவனைத் தான் உண்மையன்பன் எனலாம். எனவே, உண்மை அன்பு கொண்டும், அதனுடன் மெய்ப்பொருள் காணும் அறிவைக் கொண்டும், இவ்விரண்டாலும் தேர்ச்சியான தன்மை கொண்டும், தீமையே பயக்க உதவும் எண்ணம்(அவா) இல்லாமையும் பெற்று வாழ்வதே தெளிவான வாழ்க்கை.

அத்தெளிவை, தனக்குத் தானே உழைத்துப் பெற வேண்டுமே தவிர, மற்றவர்களால் பெறுவதாகாது! அத்தெளிவு மன ஒருமைப்பாட்டால் தான் பெறமுடியும்! அந்த மன ஒருமைப்பாட்டை சித்தர்கள் சொல்லிவைத்த வழியறிந்து செய்யவேண்டும். அப்படிச் செய்துவருபவர்கள் இன்றும் "சித்த வித்தியார்த்திகள்" என்ற பெயரால் விளங்கி வருகின்றனர் அவர்களை நாடி விளக்கமறிந்து செயல்பட்டால் தெளிவைப் பெறலாம். சித்த வித்தை முயற்சியில் தொடக்க நிலையாளரைப் பார்த்து முழுத்

தகுதியும் உடையோராய் மதிப்பிடுவதும் தவறு. முழுத் தகுதி பெருத சித்த வித்தியார்த்திகளும் தம்மை நிறை நிலைத் தக்காராய்க் காட்டலும் விரும் பலும் தவருகவே முடியும்!

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பைத் தரும்." —என்பது குறள்மறைச் சட்டம்.

எனவே, தெளிவு பெற முயல்பவர், சமன் செய்து சீர் தூக்கி, முதற்கண்ணே குற்றத்தை ஆரா யாமல் குணம் நாடி, குற்றம் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொண்டு, நிறை நிலையுடையோரிடம் சித்த வித்தையாகிய அகமருந்தைப் பெற்றுக் கற்று, அவா இன்மை யடைந்துவரின் நம்மை நமக்கு முதற் கண் தெரியும்! தெளிவு விளங்கும்! முயற்சி செய்து பாருங்கள். முயற்சி மெய்வருந்தக் கூலி தருமன்றே!

## நாமே பாண்டவர்!

பொறுமையே — தருமன்
துணிவே — பீமன்
இரக்கமே — அர்ச்சுனன்
சக்தியே — சகாதேவன்
மகிழ்ச்சியே — நகுலன்

ஐம்பெரும் குணங்களுக்கும் துணைவியே (பாஞ்சாலி) பேரின்பமாகும்.

—பா. சு. அச்சுதன்

# 5. அறமும் ஆக்கமும்.

## அறங் கூறும் ஆக்கம்!

அறம் என்பதற்குப் பொருள், திருவள்ளுவர் குறள் நூலுக்குள்ளேயே இருப்பதை அறியலாம். அதை அறிந்தபின், அதன் ஆக்கத்தையும் அதன் நோக்கத்தையும் பொருள் தேக்கத்தையும் விளங் கலாம்.

அறத்திற்குப் பொருள் சொல்லப்பட்ட குறள் "அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்ற(து) அறம்."

"முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும
இன்சொல் இனிதே அறம்."

"அறவினை யா(து)எனில் கொல்லாமை கோறல்
பிறவினை ஒல்லாம் தரும்."

கொல்லாமையே அறமாகும். அதாவது உயிர்க் காப்பே அறமாகும். உயிர்க்காப்பு அகத்தும் புறத் தும் சார்பாக நடைபெறுபவை.

உயிரைக் காக்க—என்கின்றபொழுது, தன் னுயிர் பிறவுயிர் பிறர்உயிர் என்றெல்லாம் எண்ணிக் காக்கப்படுவதைத் தெரிகிறோம்.

உயிரானது அவரவர் ஈடுபாட்டிற்கு ஏற்ப உடலை விட்டு சன்னஞ் சன்னமாய் வெளியேறிக் கொண்டேயிருக்கிறது. அப்படி நசித்துப் போகாத படி அதைக் காக்கும் வகையறிந்து (வள்ளலார் போன்றோரும்) பெரியார்கள் வழி காட்டியபடி செய்

வது உயிர்க்காப்பாகும். அப்படித் தன்னுயிரையும் காத்துப் பிறர் உயிரையும் காக்கப் பயிற்றிக் காப்பதும் அகக் காப்பாகும்.

புறக் காப்பு: அப்படிச் செய்யத் தெரியாதவர், அன்றி செய்யத் தெரிந்திருந்தும் செய்யாமல் புறக் காப்பான உணவு முதலிய காப்பால் உயிர் காக்கப் படுவதாகும்.

புற நலத்தால் உயிர் காப்பது என்பது அறியாமையே. முன்னர்க் கண்டபடி அக நலத்தால் உயிர் காப்பதே அறிவுடைமையாகும். அதற்குத் தெளிவான வழி முறைகளைச் சித்தர்களின் கருத்துக்களில் தெரியலாம். விளக்குவதற்குப் பலராமய்யா போன்றவர்கள் இருக்கவே இருக்கிறார்கள்.

அக நலத்தால் உயிர் காக்கத் தெரியாதார் எல்லாருமே தற்கொலையாளர்களே எனலாம். தன் + கொலை = தற்கொலை.

ஒருவன் ஒரே வேளையில் தன் உயிரைப் பிரித்து விடும் செயலைச்செய்கிறான் என்றால் அது குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்த தற்கொலை.

கண்மாய் நீர் வயல்களுக்குப் பெரும்பாலும் பலராலும் பாய்ச்சித் தீர்க்கப்பட்டால் அது குறிப்பிட்ட காலத்தில் தீர்க்கப்பட்டதாகும். ஆனால், யாருமே கண்மாய்நீரை வெளியேற்றாமல் இருந்தும் சில காலங் கழித்து அந்நீர் வற்றி வரண்டு கிடந்தால் அது சன்னஞ் சன்னமாகி ஆவியாகித் தீர்ந்து விடுகிறது.

அதுபோலவே, மாந்தர் உடலிலும் விலங்குகளின் உடலிலும் உள்ள உயிர்க்காற்று (பிராண வாயு) சன்னஞ் சன்னமாகத் தீர்ந்து விடுகிறது. தீர்ந்து முடியும்போது "இறப்பு, சாவு" என்கிறோம்.

கண்மாய் நீர் ஆவியாகி மேலே சென்று தீரத் தீர குறைந்து கொண்டேயிருக்கும். ஆனால் அந்தக் கண்மாய்க் கரைகளை மட்டும் வலிமைப் படுத்திக் கொண்டேயிருப்பதால் மட்டும் ஆவியாகித் தீர்வதைத் தடுக்க முடியாது. வேண்டுமானால் கண்மாய் உடைப்பெடுத்து ஓடாதபடி தடுத்து நிறுத்தலாம்.

கண்மாய் நீர் இருந்த அளவே இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? இயல்பான ஊற்றுமணலைப் பெற்றதாக இருக்க வேண்டும். சில தெப்பக் குளங்கள் அப்படியிருக்கின்றன. அல்லது மழை நீர் அடிக்கடி வாய்க்கப் பெறவேண்டும். அப்படியமைந்தால் கண்மாய் நீர் இருந்து கொண்டேயிருக்கும்.

அதுபோல, கரைபோட்டுக் கண்மாய் நீரைக் காப்பது போன்றதாகும் உணவு முதலியவற்றால் உயிர் காப்பது. இயல்பான ஊற்றாலோ, மேல் மழையாலோ கண்மாய் நீர் இருந்தபடியே இருப்பது போன்றதாகும் அகக்காப்பு, அதாவது, உயிர்நெறிப் பயிற்சியால் விளையும் பயனே ஊற்றாக உதவும், தலையில் உள்ள அமிழ்தே மழையாக உதவும். இப்படித்தான் பெரியார்கள் விளக்கி உள்ளார்கள்.

அவ்வழியைப் பெறுவது தான் அறவழி. அவ்வழிக்கு முயல்வது தான் அறவழி. அவ்வறத்தான் வருவதே இன்பம். மற்றெல்லாம் புறஅறப் (புறத்த)

புகழும் இல்லாத அறங்கள். அவ்வறத்தின் ஆக்கமே உயிர்க்காப்பு. உண்மையாக உயிர்வாழும் வாழ்க்கை அதுவேயாகும்.

"அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு" —என்றார்.

அவ்வற வழியில் முயலத் தெரிந்த மாந்தர் அதைச் செய்துவந்தால் அதைவிட வேறு ஆக்கமும் வேண்டியதில்லை. அதைச் செய்யத் தெரிந்த பின் அதை மறப்பதைக் காட்டிலும் ஒரு கேடும் வேறு இல்லை! என்கிறார்.

அடுத்து ஒரு கருத்தைப் பார்த்து முடிப்போம் அப்பேர்ப்பட்ட அறத்தின் ஆக்கம் அச் செயலாய் அன்றி பிற நல்ல செயல்களைச் செய்தாலும் வரும் என்கிறார். அதாவது நல்ல காரியங்களையே செய்வது மாந்தர் சிறப்பு என்பதைக் காட்ட அவ்வாறு பாடியதாகத் தெரிகிறது.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்" —என்றார்

இங்கே 'சாதல்' என்பது புறங் கூறுவர் சாக வேண்டும் என்பதன்று. அவர் செத்துவிட்டால், எப்படி அறம் (உயிர்க் காப்பு) ஆக்கம் தர முடியும்? எனவே, உயர் திருவள்ளுவப் பெரியார் கருத்து என்னவாக இருக்க வேண்டும் என்றால், புறங்கூறித் திரிகின்ற செயலைச் சாகடிக்க வேண்டும். அச்செயல் செத்தால்—சாகடித்தால் அறம் கூறுகின்ற ஆக்கம் உனக்கும் உண்டு என்று மிகுத்து கூறுகிறார் என்றே கருத வேண்டும். இவ்வாறு அறங்கூறும் ஆக்கத்தை மேலாகக் கருதி, புறங்கூறுவார் திருந்தச் சொன்னது

தவிர அவர் சாக வருந்தச் சொன்னதன்று.

“அறங்கூ றுக்கம் பெற்றிடுவோம்
அதற்கு முப்பால் கற்றிடுவோம்
புறத்தைத் துணையாய் அமைத்திடுவோம்
புகுந்து அகத்தைச் சமைத்திடுவோம்
திறத்தை அறத்தில் காட்டிடுவோம்
தீய எண்ணம் ஓட்டிடுவோம்
நிறத்தை மிதித்தே செய்யாமல்
நேர்மைச் செயலில் உய்வோமே.

## மாங்காய்ப் பால் - தேங்காய்ப் பால்

“மங்காப் பாலுண்டு
மலைமேல் இருப்பார்க்குத்
தேங்காப்பால் ஏதுக்கடி—குதம்பாய்
தேங்காப்பால் ஏதுக்கடி?”

— இப்பாடல் நாட்டு வழக்கிலே —

“மாங்காய்ப்பாலுண்டு..........
..........தேங்காய்ப்பால் ஏதுக்கடி.”

மங்காப்பால்—தலை உச்சியில் சுரப்பது
தேங்கா—தேங்காத
தேங்காப் பால்—தலைப் பாலைப் போல மற்ற பால்கள் தேங்கி நில்லா. எனவே ‘தேங்காப் பால்’ எனப்பட்டது

# 6. கனவிலும் துன்பமே!

"கனவிலும் இன்னாது, மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு." —(819)

இந்தத் திருக்குறளுக்கு உரிய பொருளைப் பாருங்கள்.

சொல்வேறு—சொல்லும் சொல் வேறாகவும்

வினைவேறு பட்டார்—சொல்லுக்குப்பொருந்தாத செயல் வேறாகவும் செய்யப்பட்டவரின் தொடர்பானது.

கனவிலும்—கனவில் கூட

இன்னாது—துன்பம் தருவதாகும்.

மன்னோ—அசை நிலை.

(பொதுப் பொருள்)

சொல்வது ஒன்றும், செய்வது ஒன்றுமாக உள்ளவர்தம் குணத்தை ஆராயாமல் தொடர்பு கொண்டவர் (இடையில் அன்றி இறுதியில்) துன்பமே அடைவர். மேற்சொல்லப்பட்டார் தொடர்பைக் கனவிற் கண்டாலும் துன்பமே தரும் என்று சொல்வதை எண்ணினால், நேரில் தொடர்பு கொண்டவர்க்குத் துன்பம் தப்பவே முடியாது என்பது தெளிவாகத் தெரியும்.

வண்டமிழ் மொழியில் வழங்கிய வள்ளுவனாரைப் போலவே வள்ளலாரும் "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்றார். இன்றைய தொடர்புகளில் குடும்பத்திலிருந்து கணக்கிட்டுப் பார்த்தால் முதற்கண், குடும்பத்திலேயே பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும், கணவர்க்கும் மனைவியர்க்கும் கூட சொல் வேறு

செயல் வேருகக் காண முடிகிறது. உதிரக் கலப்புடைய குடும்பத்திலேயே இப்படி என்ருல்; மற்றபடி வெளியே பழகும் இடங்களில் உள்ள தொடர்புகளை பற்றி உறுதியாகச் சொல்லமுடியாது. அந்த அளவிற்கு சொல்லுக்கும் உள்ள வேறுபாட்டை அறியாமையால் வளர்த்துவரும் நிலையில் சொல்லுக்கும் செயலுக்கும் ஒருமைப்பாட்டை —பொருத்தப்பாட்டைச் செய்து வாழ்பவர் யார் யார்? எனத் தேடினுல் விஞ்ஞானிகளில்கூட அரிதாகஇருக்கலாம்! மெய்ஞ்ஞானிகளே (மெய்யறிவாளர்களே)அவ்வாறு சொல்லுக்கும் செயலுக்கும் பொருந்த நடப்பவர்கள் பொய்ஞானம் (போலியறிவு) பெருத்து மலிந்து மதிப்புப் பெற்று ஓங்கித் திகழும் இந்நாளில் மெய்யறிவு எங்கோ ஒரு மூலையில் தான் பதுங்கியிருக்க முடியும். அப்படிப்பட்ட மெய்யறிவாளர் தாம் உலகநாடுகளுக்கே உயர் நெறியான உயிர் நெறியை இந்திய நாட்டிலிருந்து சென்று பரப்பிக் கற்றுத் தந்தவர்கள்.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வுஇலா தவர்க்கு. —குறள்.

என்ருர் முப்பாவலர். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய உறுப்புக்களால் ஏற்படும் உணர்வுகளை நன்றின்பால் உய்த்துவரும் உணர்வை (எய்திய கண்ணும்) அடைந்த இடத்தும் (பயமின்றே) பயன் இல்லை. ஏன் என்ருல், உள்நோய் உடையவர்க்கு வெளி மருந்தால் பயனே இல்லையன்றே! அதுபோல உள்ளத்து அறியாமையை அகற்றும் மெய்யுணர்வு இல்லாமல், அதற்குப் பாடுபடாமல், பாடுபடும் வழியும் வகையும் தெரியாமல், மேலே சில வேளைகளில்

மட்டும் தூய நிலை நின்று பிறகு மாறுபடவும் செய்கின்ற ஐயுணர்வு பெற்றதால் பயனே இல்லைதான் என்பது முற்றும் உண்மைதான்.

எனவே, இன்று நாம் தொடர்பு கொண்டவர் அனைவரையும் நம்மையும் சற்று எண்ணிப் பார்த்தால் எத்தனை பேர் எத்தனை முறை சொன்னபடி செய்திருக்கிறோம் என்பது தெரியும். சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபட்ட உடனேயே மாறுபட்ட அன்பு கூறுபட்டுப் பிரிந்து ஆறுபட்ட மணல் போல கரைகிறது; கவலையால் உறைகிறது; நட்பும் குறைகிறது. தொடர்பும் மறைகிறது.

இனி, சொன்னபடியே செய்யவும் செய்ய முடிந்ததையே சொல்லவும் யாருக்கு வாய்க்கும் என்று பார்த்தால் மெய்யுணர்விற்காகப் பாடுபடுவர்க்கும் பாடுபட்டு வென்றவர்க்கும் தாம் முடியும். அப்படிப் பட்ட சித்தத்தை (உள்ளத்தை) நெறியாக அமைத்து இயங்கியவர் தாம் சித்தர்கள். மக்கள் பிரித்துவைத்த பல மதங்களிலும் அவர்கள் தோன்றி இந்த உண்மையைத்தான் அவரவர் பகுதி மொழியில் கூறி கடைப்பிடிக்கச் செய்துள்ளனர். மெய்யுணர்வைப் பெறும் வழிபாட்டை பலர் பல வழிகளில் செய்கிறார்கள். அவற்றில் தேர்ச்சி பெறுபவர் சிலராகவே அமைகிறார்கள். அவர்கள் பலராக ஆக வேண்டுமென்பதற்காகத்தான் மெய்யுணர்வாளர்களின் மொழி வழி விளக்கங்களை நம் உயிர்நெறித் தொண்டர் உயர்திரு. வி. பலராமய்யா போன்றவர் எழுதியும் எழுதுவித்தும் வருகின்றனர்.

மெய்யுணர்வை மன ஒருமைப்பாட்டால்தான் பெற முடியும். தெளிந்த நீரில் தான் முகம் காண முடியும். அதுபோல மனத்தை அலைய விடாமல், ஒரே அமைப்பில் பழக்கி வந்தால் மெய்யுணர்வு தோன்றும். இப்பயிற்சிக்குச் சித்த வித்தை பெற்ற பெரியார்களை நாடினால் தெளிவாகக் கற்றுக் கொடுப்பார்கள். முயல்வோமாக.

# 7. தவத்திற்கு அடையாளம்?

## தவத்திற் குரு?

“உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.”

தவத்திற்கு—தவம் செய்யும் (அடையாளமாக)
உரு—தோற்றம் (தெரிய வேண்டுமானுல்)
உற்றநோய்—தனக்கு ஏற்பட்ட துன்பத்தை
நோன்றல்—பொறுத்துக் கொள்வதும் (அதனுல் சோர்வுருமையும்
உயிர்க்கு—எவ்வுயிர்க்கும் (தன்னுயிர்க்கும்)
உறுகண்—எப்படிப்பட்ட துன்பமும்
செய்யாமை—செய்யாமலிருப்பதேயாம்
அற்றே—அவ்வளவில் உள்ளதே அடையாளம்

தவம், நோன்பு, நோற்றல், விரதம் எனவெல்லாம் பேசப்படுகின்றன; எவ்வாறெல்லாமோ செய்யப்படுகின்றன. அவை மதங்களுக்கும், குடும்ப மரபினுக்கும் ஏற்பவே நடைபெறுகின்றன.

விரதம்—நோன்பு என்று சொல்லிக்கொண்டு, ஏதோ சில குறிப்பிட்ட நாட்கள் மட்டும் முடி வளர்த்துக் கொண்டும், வெற்றிலை பாக்கு, பீடி, சுருட்டு, புகையிலை, புலால், கள்ளருந்தல் முதலிய பழக்கங்களைக் குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் நிறுத்தி நோன்பும், வழிபாடும் முடிந்ததும் பழைய படி அத்தீய பழக்கத்தையே தம்செயலில் தொடர்ந்தும், அவற்ருல் சிலர் உடல்நிலை இழிவடைந்தும் வரக் காண்கின்றேன்.

இன்னும் சிலர், தாடிமுடி சடைகளை வளர்த்தும் காவியாடை அல்லது வெள்ளாடையணிந்தும் தாம்

தவம் செய்பவர் என்றும் பல இடங்களில் சிற்சில வியத்தகு வினைகள் காட்டி, மக்களை வியப்பில் ஆழ்த்தித் தம்முயிர்க்கும் தீமை ஏற்படுவதை அறியாமலும், அல்லது தம்முயிர் கழிவதை—பிறரால் கொல்லப்படுவோமென்றறிந்தும் தற்காப்புச் செய்யாமலும் (தன்னுயிர்க்கு உறுகண் செய்தும்) பிற—பிறர் உயிர்கள் துன்பப்படுமாறு நடந்து கொள்வதும் அதனால் தம் புகழ்—உடல்—சில வேளைகளில் பாதிக்கப்படுவதும் ஆக இப்படிப்பட்ட நிலை இன்று மலிவாகி வருகின்றது. ஒழிவாகி வரவில்லை! ஆயின் உண்மைத் தவம் தெளிவாகி வரும் காலம் வந்துள்ளது. போலித் தவப் போர்வை எல்லாம் கிழிவாகத் தொடங்கி விட்டது.

இனித் திருவள்ளுவப் பெருந்தகையாரின் கருத்தை எண்ணிப் பார்ப்போம். உண்ண்மயான தவம் செய்பவராக இருந்தால், அவர்க்கு—பிறர்க்கு நேரும் துன்பங்கள் போல் துன்பங்கள் நேர்ந்தால் அவற்றைப் பொருட்படுத்தாதவராக—அதாவது (சம நிலை) செஞ்சாந்து எறியுனும் செவ்வேல் எறியுனும் நெஞ்சங்கோடாமல் இருக்கும் நிலை—இன்னும் விரித்துச் சொல்ல வேண்டுமானால் காய்தல் உவத்தல் இன்றியும் சமன் செய்யும் கோல் போலும் இருத்தல் வேண்டும் சுருக்கமாகச் சொன்னால் தவஞ் செய்வார் தங்கருமம் செய்வார். வேறு கருமவினைகளைப் பற்றி உணர்வினராகார்.

உற்ற நோய் நோன்றல்—உற்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவராக இருக்க வேண்டும். ஆனால் திருப்பித்துன்பம் செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர் கூற்றுப்படி துன்பம் நேர்ந்தால்

தான் பொறுத்துக்கொள்ள வேண்டும். இன்பம் நேர்ந்தால் துய்க்கலாமல்லவா? (அனுபவிக்க) பிறர் வந்து தவம் செய்வார்க்குப் பல நலன்களும் செய்கிறார்கள் என்றால் அவற்றைத் தவம்செய்வபர் ஏற்றுக் கொள்ளலாம் அல்லவா?

இப்படி வினவலாம். ஆனால் தவம் செய்வார் தங்கருமந்தாம் செய்வார். மாந்தர் மகிழும் பொருள்களை அவர்க்கு வழங்குவதாலும், நாமைப் போலவே புற இன்பம் துய்ப்பாரென வலியுறுத்துவதாலும் உண்மைத் தவமுடையார் ஏற்க இசையார் பிறர் வந்து தவஞ் செய்வார் வாயில் அமிழ்தூட்டினாலும் உண்ணாமல் இருக்கும் தவமும் உண்டு.

தவத்தின் தன்மையறியா மாந்தர் பலர் ஏதோ இறைப்பற்றின் சார்பாகப் பலவாறாக வணங்கி நலஞ்செய்யலாம். ஆயின் அந்நலத்தால் தவ வேலையும் தவ உணர்வும் கெடுதற்கும் வாய்ப்புண்டு. ஆதலால் அந்நலத்தால் விளையும் புற இன்பத்திற்கும் இடம் கொடார்.

## உயிர்க்கு உறுகண்.

உயிர்க்கு—என்கிறபொழுது எவ்வுயிர்க்கும் — என்றே பொருள் கொள்ளவேண்டும். உறுகண் — துன்பம். எவ்வுயிர்க்கும் எப்படிப்பட்ட துன்பத்தையும் கூட செய்யாத நிலையில் இருக்க வேண்டும். பிற உயிர்கட்கு மட்டும்தாம் துன்பஞ் செய்யக் கூடாதெனப் பொருள் கொள்வார் பலர். அன்று! அன்று! தன்னுயிரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். தவம் செய்யும் களத்தில் இறங்கியவரின் நோக்கமே உயிர்க் காப்புச் செய்து உடலாற்றலை நீட்டித்து வீடுபேறு

(விடுபேறு—பற்று விடுபேறு) கிடைக்கும் தன்னல நோக்கமே தலை நோக்கமாக உள்ளது. தன்னலம் தெரிந்தபின்—பெற்றபின்—தக்கார்க்கு ஈய வேண்டும் என்பதே ஆன்றோர் வாக்கு.

**"கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்**
**எற்று விழுமந் தரும்."** —என்றார்.

ஏதோ தவத்தில் செயல்பட இறங்கித் தொடக்கத்திலோ அன்றி இடையிலோ எதை எதையோ பெற்றவர் போலவும்—முதிர்ந்தவர் போலவும்—தன்னிலையறியாதாராய் பலர்க்கும் பல முறைகளில் வித்தைகளை கற்பிப்பார் பலர். கற்பித்தவரின் ஆற்றலில் காற்கூறு கூட எய்தாமலே போவார் கற்றவர். ஏன் தெரியுமா? சொல்லிக்கொடுத்தவர் இடையிலேயே தவத் திறனைப் பெருதவராகி—மாயை வழியியங்கும் மாந்தர் தம் இன்ப துன்பங்களில் பங்கெடுக்கத் தொடங்கி விடுவார். இவரிடம் தவப் பயிற்சி கற்றவரும் குருவை ஒத்துப்பார்ப்பார். சிலர் ஆய்வாளர்களாக இருந்தால் சற்று உற்றுப் பார்ப்பார்கள். உள்ளது தெரியத் தொடங்கும். பின்னர் என்ன எற்று விழுமம்தானே!

கடைக்கொட்க—கடைசியில் வெளிப்படுமாறு
செய்தக்கது—செயலைச் செய்யத்தக்கதே
ஆண்மை—ஆண்மையாகும் (அதைவிடுத்து)
இடைக் கொட்கின்—இடையிலேயே (தேர்ந்தவர்போல வெளிப்படுத்தினுல்)
எற்று விழுமம் தரும்—நீங்காத துன்பமே தரும்

எனவே, தான் தவநலத்தை முதலில் தேடிப் பெற்றுக்கொண்டபின் தான் தன்னுயிர் கழிவதைக் கழியாமல் தவநோற்றலால் செய்துகொண்டபின் தான் பிற நலம் செய்யவேண்டும் தவத்துறையில்.

இதிலிருந்து தவஞ்செய்வார்க்கு உரிய அடையாளம் என்ன என்பதைத் திருவள்ளுவர் வழிநின்று சித்த நெறியை அறிந்தோம்.

உற்றநோய்—துன்பம் யாரை விட்டது? தவக் களத்தில் இறங்கியவர்க்குமா துன்பம் வரும்? என்றும் வினவலாம். தவக்களத்தில் இறங்கியவர்க்குத் தான் துன்பம் வந்தாக வேண்டும். ஏன் தெரியுமா? அவர் தவ உண்மையையும் வலிமையையும் ஆய்வு செய்யவேண்டுமல்லவா!

உண்மையான தவமுடையார் துன்பங்கள் வர வேற்பர். எம் வலிமையைக் காட்ட வாய்ப்புக் கிடைத்ததெனு மகிழ்வார்கள்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு." (267)

அருட்டிரு வள்ளற் பெருமான் போன்றவர் தாம் உண்மைத் தவமுடையார்.

இனமும், இடமும், தகுதியும், காட்சிகளும், பதவிகளும், தம்மைப் பேய்போல் பிடித்திருக்கப்பட்டவர்கள் தவம் செய்பவரா? அவம் செய்பவரே! அவத்தைத் தொலைத்துத் தவத்தைத் தெரிய முயல்வோம்! செயற்கரிய செயலைச் செய்து உய்வோமாக.

---

## வாழ்வார் யார்? நீடு வாழ்வார் யார்?

"வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்"
—குறள் (240)

"மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்?" —குறள் (3)

## 8. தகைமைக் கண் தங்கும் உலகு!

மாணவர்: ஐயா, உயிர்நெறிச் செயற்பாட்டில் இறங்கிச்செயல்படுவார்க்குப் பகைவர் இருக்கலாமா? பகைக் குணம் இருக்கலாமா? இதுபற்றி உயர் திருவள்ளுவர் ஏதாவது சொல்லியுள்ளாரா?

ஆசிரியர்: சொல்லியிருக்கிறாரே! உயிர்நெறிப்பயிற்சியில்-தொண்டில் இறங்கியவரின் உண்மையான நடவடிக்கைகளில் எவ்வித பகைக்குரிய தோற்றமும் இராதே. அப்படியே ஒருவர் அறியாமையால் அவரைப் பகைக்க நேர்ந்தால் அவர்கள் அதை ஆய்வாக (சோதனை) எண்ணி, அப்பகையைத் தமது சான்றாண்மையால்-பொறுமையால்-நோற்றலின் ஆற்றலால் பகைவரையும் தம் அன்பராக ஆக்கிக்கொள்ளும் படியே நடந்து கொள்வார்கள். அப்படிச் செய்கின்ற உள்ளங்கள் தாம் மன்னிக்கும் மனப்பான்மையான உள்ளங்கள். அப்படிப்பட்ட தகுதியுடையவர்களால் தான் இப்புற உலகம் இன்னும் நடைபெற்று வருகிறது.

இல்லையென்றால், சிறு சிறு சினத்திற்கெல்லாம் தண்டனைகளை உடனுக்குடன் செய்து பகை பெருக்கி பெரும் போர்க்கும் காரணமாகி வந்தால் விரைவில் மக்கட் சுருக்கம் ஏற்பட வாய்ப்பாகும். "கண்ணோட்டத்தில் உள்ளது உலகியல்." இது பற்றித் திருவள்ளுவப் பெருந்தகை பகை—அதிகாரத்தில் கூறிய திருக்குறள் மறையைக் காண்க.

"பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற்(று) உலகு" (874)

மாணவர்: இக்குறளுக்கு ஏதாவது ஒரு எடுத்துக் காட்டுத் தந்து விளக்கினால் நல்லது.

ஆசிரியர்: புத்தரைப்பற்றிய கவிதை ஒன்று படித்தேன். அதாவது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் எழுதியது. அதில் ஒரு காட்சியை சொல்கிறேன். பித்தம் அகற்றிப் பேரொளியாய் விளங்கியவன்! சித்தார்த்தன் தவநிலையில் சிகரமென இருக்கையிலே, அவனுடைய பொறுமைதனை ஆய்வு செய வானவருள் தேவர் ஒருவர் தேர்ந்தெடுத்தார் அரக்கன் உரு. கண்டார் குலைநடுங்கக் காட்சிதரும் அரக்கணவன், பேரிடியை ஒத்த பெருங்குரலை முன்னனுப்பி, புத்தமுனி முன் தோன்றி புகன்றான் சில மொழிகள்,

"ஏடா புத்தா! அன்பாகிய உலகைச் சமைக்கவா வந்தாய்? உன்னை அழிக்கவே நான் வந்தேன். இவ்வுலகில் அன்பையும் அறத்தையும் தவத்தையும் பயிற்றுபவர்களே எனக்குப் பகைவர்கள்! அப்படிப்பட்ட பகைவர்களில் நீயும் ஒருவன். உன்னை அழித்துவிடவே வந்திருக்கிறேன்!."

என்றான் அரக்கணவன். இடி ஓசை பல கொடுத்தான். படமெடுத்த பாம்பு முன்னே பாப்பா கிடந்ததைப்போல், விளையாட்டுப் பொருளேபோல், விரலால் தழுவுதல்போல், அமைதிக் குன்றான அன்பரசன் புத்தமுனி, சிறிதும் அசையாமல், சிந்தை தளராமல், புன்னகை முன்னிறுத்தி பொலிவுமிக்கப் பார்வையினால் அரக்கண் உருவு கண்டும் அன்னவனை நண்பனென்றான்!

"நான் உன்னை என் நண்பனாகவே கருதுகிறேன். உண்மை நட்பின் இலக்கணப்படி நட்புக்காக எந்த உரிமையையும் கொடுக்கவேண்டும் (தியாகம் செய்ய வேண்டும்). அப்படியே யானும் உன் விருப்பத்திற்கு

ஏற்றவாறே நடக்கக் கடமைப்பட்டவன். எனவே உன் விருப்பம் போல் என்னை என்ன செய்தாவது நிறைவடைய வழி இதுதான் என்றால் விரைவாக உன் வேட்கையைத் தீர்த்துக்கொள்!”

எனமொழிந்தான் புத்தமுனி!
என்னசெய்யும் அரக்கண்கை!
குணமுடைய புத்தர்குணம்
குறையாமல் வளர்கவென
வாழ்த்தி மறைந்தான்
வந்துநின்ற தேவவரக்கண்!

**மாணவர்:** நல்ல விளக்கம்தான். இப்படித்தான் கவிமணி பாடியுள்ளாரா?

**ஆசிரியர்:** அவர் பாடிய பாட்டின் வடிவம் வேறு. அப்பாடற்கருத்தை எம் பாடல் நடையில் கூறினேன்.

**மாணவர்:** எல்லாரும் புத்தரைப்போல் இருக்க முடியுமா?

**ஆசிரியர்:** எல்லோரும் முடியாதுதான். உயிர் நெறிக்கு (ஆன்மிக ஒழுக்கத்திற்கு) பாடுபடுவார்—அதற்காக விளம்பரத்தைப் பல வழிகளிலும் செய்பவர்கள்—அறத்தின் தலைப்பில், மடத்தின் தலைப்பில் இயங்குபவர்—இயக்குபவர்களாவது உயர் திருவள்ளுவர் சொன்ன-புத்தர் செய்து காட்டிய நெறியைக் கடைப்பிடிக்கலாமல்லவா? முயன்றால் முடியும்.

**மாணவர்:** முயல்வார் எல்லாரும் தேர்ச்சியடைய முடிவதில்லையே!

**ஆசிரியர்:** எல்லாரும் தேராவிடினும் ஊருக்கு ஒருவர் தேர்ந்தாலும் போதும். மக்கள் அறியாமையால்

பிரிவினைகளை உண்டாக்கி விட்டதால் பல மதங்களி லும் உயிர்நெறிச் சான்றோர்கள் தோன்றிச் செயல் படுத்திக் காட்டினார்கள். அவர்கள் தரும் மெய்ப் பொருளை நன்குஉணராதார் பலர்தாம் "ஏசு வேறு, புத்தர் வேறு, நபிகள் வேறு, சித்தர்கள் வேறு" என வீண் உரையாடுகின்றனர். எல்லாம் ஒன்றாகக் கண் டவர்கள் தோன்றிய இடங்கள் வேறு வேறாக இருக் கலாம். நிலை ஒன்றுதான் என்றுணரத் தலைப்பட் டாலே முயற்சி வெற்றி பெறும். அதை விடுத்து வேறுபாட்டுணர்வுடன் (மத விகாரம்) செயல்பட் டால் எந்த இறைக்கும் அன்புடையராதல் அரிது. ஒரே குளம். பல துறைகள். ஆண்கள் குளிக்கும் துறை × பெண்கள் குளிக்குத் துறை என்று பெயரிட் டாலும் குளமும் நீர்நிலையும், குளிக்கும் நீர்நிலையும், குளிக்கும் பயனும் ஒன்றே. அதுபோலவே மதத் துறைகளும், இறைநிலையும்.

மாணவர்: தாங்கள் கருதுவது போல ஊருக்கு ஒரு வராக விளங்கா விட்டாலும், மாநிலத்திற்கு அல் லது மாவட்டத்திற்கு ஒருவராவது அமைந்தால் விரைவில் நாடு நலமடையும் அல்லவா? அக்காலம் எக்காலமோ?

ஆசிரியர்: அக்காலம் விரைவில் வரவிருக்கிறது. நீங் கள் எண்ணுவதுபோல், அன்று அசோகர் ஆணைவழி யாகவே உயிர்நெறியாளர்களை (ஆன்மிக ஒழுக்க முடையவர்களை) தனித்தனிப் பெயர்களும் தகுதியும் தந்து அலுவர்களாகவே அமைத்து வெளி நாடுகளி லும்கூட பரப்பிவரத் தம் மைந்தனையும் அனுப்பி நாடாண்டதாகப் படித்தோமே அதேநிலை மீண்டும் வரும்.

எதிர்கால அரசு, சித்தத்தை நெறிப்படுத்திய

வர்களால்தான் நிலமிசை நீடுவாழச் செய்யமுடியும். விரைவில் உயிர்நெறிக்குப் புறம்பான பல்வகை நெறிகளும்—அந் நெறிகளை வளர்ப்போரும், மாறவும் அன்றி இல்லாமல் போகவுமான முடிவை ஏற்கும் காலம் நெருங்குகிறது.

மாணவர்: இதற்கு என்ன சான்று?

ஆசிரியர்: ஒரு குடும்பத்தை எடுத்துக்கொள்ளுங்கள். குடும்பத்தில் உள்ளவர் வருமானத்தில் ஏற்படும் செலவுகளில்,

மருத்துவ மனைக்குக் கொடுக்கும் செலவும் வழக்குகளுக்குக் கொடுக்கும் செலவும் பகுத்தறிவை மாய்க்கும் ஒப்பனைக் கலைகளுக்குச் செய்யும் செலவும் மாதந்தோறும் அல்லது ஆண்டுதோறுமாவது குறைந்து வந்தால் அந்தக் குடும்ப நலம் வளர வாய்ப்பாகும்.

அதைவிடுத்து, மாதம் தோறும், மருத்துவச் செலவும், மற்றைய வழக்குமன்றச் செலவுகளும் கூடிக் கொண்டே போனால் அந்தக் குடும்பத்தில் தொடர்ந்த நலம் காண முடியுமா? அல்லது குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைதான் அப்படியே இருக்க முடியுமா? இதை எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டு நாட்டை அளந்து பாருங்கள்.

உயர் திருவள்ளுவரின் சட்டப்படி பார்த்தால்

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு." —என்பதாகும்.

இன்றைய நாட்டு வளர்ச்சியில் வளர்கின்ற, காவலர் நிலையங்களும், மருத்துவப் பெருமனைகளும்,

நடுவர் மன்றங்களும் அற மன்றங்களாக மாறுவிடினும் குறைந்து கொண்டே வரவேண்டும். அதற்கு மாறாக வளர்ந்துகொண்டே சென்றால் நாடு நலமுள்ளதாக ஒப்ப முடியாது.

மாணவர்: எப்படி?

ஆசிரியர்: உடலில், தொழுநோய் அல்லது ஈளை நோய் (காசம்) முதலிய பிணிகளை வைத்துக்கொண்டு உடல்மேல் மணி பொன்னும் சாந்தமும், மகிழ்வான உடைகளும் மாட்டி முக மினுக்கித் திரிவார் தம்மை "உடல்நலமும் எல்லா நலமும் உடையவர்" எனச் சொல்லி மகிழ்வது போலாகும்.

மாணவர்: நன்று. பகைவரையும் நண்பராகக் கருதும் பண்பு முதற்கண் ஆன்மிகவாதிகளுக்காவது ஏற்பட வேண்டுமென்கிறீர்கள்?

ஆசிரியர்: ஆம்! பகை எப்பொழுதும் மாறக்கூடியது நிலையற்றது; அதனால் அதை மதிக்கக் கூடாது. அன்பு—அறம்—நிலைக்கக்கூடியவை. பகையை அன்பால் வெல்லலாம்!

மாணவர்: நல்லது. வணக்கம்.

## பெருக்கத்திற்குத் தடை!

உங்களிடம் ஏதாவது பெருக வேண்டுமா? அந்தப் பெருக்கம் பெருமையுடையதாக இருக்க வேண்டுமா? அப்படியானால் அதற்குத் தடையாகவுள்ள செருக்கையும் சினத்தையும் சிறுமையையும் உள்ளே நுழைய விடாதீர்கள்.

"செறுக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து." —திருவள்ளுவர் (430)

# 9. உண்டியும் மருந்தும்!

ஆசிரியர்: உணவு உண்பதில் இன்பம் தோன்ற உண்ணும் உணவு பற்றி உனக்குத் தெரியுமா?

மாணவன்: ஓ தெரியுமே! வாய்க்குச் சுவையாகவும் வயிராறவும் உண்பதெல்லாம் இன்பமான உணவு தான். இந்தக் காலத்தில் எல்லார்க்கும் வாய்க்குச் சுவையானதும் வயிராறவும் எங்கே கிடைக்கின்றன!

ஆசி: நீ சொல்வது பொருத்தமில்லை. உண்ணும் போது மட்டும் நாவிற்கு இன்பம் போல் தோன்றலாம். ஆனால் வயிற்றுக்குப் பின்னால் நோயும் செய்யும் உணவுமுண்டு.

அதனால் இலவசமாகக் கிடைத்ததென்று வயிறு முட்ட எந்த உணவையும உண்பதாலும், மிக மலிவாகவும் அல்லது இலவசமாகவும் கிடைத்ததென்றும், வாய்க்கு ருசியாகக் கிடைத்ததென்றும் உண்பதாலும், வேளை தவறி உண்பதாலும் முன்னால் இன்பம் போல் தோன்றிப் பின்னால் துன்பமே தருபவையாம்.

அதனால் தன் உடல் நிலைக்கும் பசி நிலைக்கும் ஏற்றவாறு அளவறிந்து "ருசி" நோக்காது பசி நோக்கி உண்பவர்க்குத் தான் உண்ணலால் இன்பம் தோன்றுமாம். அதாவது தாம் உண்ணும் உணவால் வாத பித்த கபம் மாறுபாடுறுமல் செரிமான அளவில் வைத்திருக்கும் அளவறிந்த உணவே உடற்கு இன்பம் தருவதாகும். இதுவரை சொல்லப்பட்டவை புற உணவு. புற இன்பம் தான் அடைய முடியும். அதுவும் புற இன்பம் போக வரவிருப்பது. அக இன்பம் ஒன்றே நிலையாய் நிற்பதாகும். அந்த அக இன்பமும் அக உணவால் ஏற்படுவதேயாகும்.

மாண: அக உணவென்பதென்னவோ?

ஆசி: புற உணவின் துணைக்கொண்டு உடலை நலப் படுத்தியவாறே அக உணவாகிய (உள் அமிழ்தை) அதாவது தலையுச்சியில் உள்ள அமிழ்தை உள்நோக்கிச் செலுத்தும் வாசியோக (உயிர்ப் பழக்க பயிற்சியால்) முயற்சியால் கசிய வைத்து அந்த அமிழ்தை உண்ண உண்ணச் சொல்ல முடியாத இன்பம் நிலையாக அமையும்; இக்கருத்தைத் தெள்ளத்தெளிவாக சித்தர் தம் பாடல் பலவற்றுள் காணலாம். அத்தனையும் இங்கு சான்று காட்டலாம். ஆனால் கட்டுரை நீளும்.

இக்கட்டுரை நுண்மாண் நுழை புலத்தார்க்கே யன்றி ஏனையோர்க்கு எளிதில் புலனாகா? ஆகலான் தொட்டுக் காட்டியே சொல்லுதும்.

மாண: இன்னும் குறள் சான்றுக்கு வரவில்லையே தாங்கள்!

ஆசி: இதோ வந்துவிட்டேன். திருக்குறள் நூலில் மருந்து அதிகாரத்தில் ஒரு குறளில் இக்கருத்தைத் திருவள்ளுவர் குறித்திருக்கிறார் இதோ!

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்." —946.

இதன் பொருள் தான் உண்ணும் உணவால் உடலுக்கும் உயிருக்கும் இழிவு வந்துவிடக் கூடாதே என உணவு முறையை நன்கு அறிந்து, உடலில் நிற்கும் இன்பத்தைப் போல கழிபேர் இரையான் மிகுந்த அளவு பேருண்டியாகவும், எப்பொழுதும் உண்டுகொண்டும், சிறு தீனிகளைத் தின்றுகொண்டுமே இருக்கின்றவனிடத்தில் நோய் நிலையாக நிற்குமாம்.

இழிவறிந்து உண்பவனிடமும் இன்பம் நிலையாக இருக்கும். அதுபோல, இழிவறியாமல் உண்பவனிடம் நோய் நிலையாக நிற்கும். இது சுருக்கமான பொதுக் கருத்து,

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு."

மாண: இந்தக் குறளிலும் சித்தநெறி கருத்து உள்ளதா?

ஆசி: இந்தக் குறளில் தான் நிறையக் கருத்து உள்ளது. கவனித்துப்பார். மாறுபாடு இல்லாத உணவாக உண்ண வேண்டுமாம். அப்படி தன் உடல் நிலைக்கு மாறுபாடான உண்டி(உணவு)யாக இருந்தால் அதை எப்படியும் மறுத்து, உடல் நலத்துக்கான உணவாக அமையாவிட்டாலும், ஊறுபாடு (துன்பப்பாடு) இல்லாத உணவாக அமைத்து உண்டு வருவானேயானால் அவன் உயிர்க்குத் துன்பமில்லையாம்.

மாண: ஊறுபாடு இல்லை உடலுக்கு என்னுமல் உயிர்க்கு என்று அவர் சொன்னது ஏனோ?

ஆசி: அங்கேதான் சித்தநெறி விளக்கம் நிறைந்து கிடக்கிறது

திருவள்ளுவர் சொன்னபடியெல்லாம் எளிய மாந்தர்கள் நடப்பது அரிதாகும். அப்படியே ஒருவர் நடக்கிறுர் என்று வைத்துக்கொண்டாலும் அவர் அதிகார முறையில் சொன்ன முறைப்படியே உணவு உண்டு வந்தாலும் அவர் எல்லாரையும் போல்தான் செத்துப்போவார். (சத்து-உயிர். சத்துப் போதல். சத்து-செத்து என ஆயிற்று) "ஊறுபாடில்லை உயிர்க்கு" என்று ஆராய்ந்தால் எப்படிப்பட்ட உணவை உண்டால் உயிர்க்குத் துன்பம் வராது.

மாண: தாங்கள் முன்பு விளக்கினீர்களே அக உணவு அந்த அமிழ்தமான உணவை உண்டால்தான் உயிர்க்குத் துன்பமில்லே. சரிதானே?

ஆசி: சரிதான்; நினைவாகச் சொல்லிவிட்டாய். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று இன்றியமையாதது. அதாவது, நாம் ஒவ்வொரு நாளும் நாளைக்கு இருப்போம் என எண்ணியே பல திட்டங்களும் கணக்குகளும பார்த்துத் துயில் கொள்கிறோம். இப்படி இருந்துவருப் போதே இடையிடையே உயிர்க்கு ஊறுபாடு நேர்ந்து, நாளைக்குச் செய்யவேண்டியதைச் செய்துமுடிக்கு முன்பே செல்கிறோமே! என்ற ஏக்க உணர்விலேயே தன்னிறைவு பெறுநிலையிலேயே இறந்துவிடக் காண்கிறோம். திருவள்ளுவனார் சொன்னபடி எந்த உணவை உண்ண வேண்டுமோ அதைத் தெரியாமலும், உண்ணுமலும், வெளியுணவை மட்டுமே உண்டு இன்புற்றேமென வாழ்வதால்தான் உயிர்க்கு நேரும் ஊறுபாட்டைத் தடுக்க முடிவதில்லே.

எனவே, குறள்நெறியில் குறிக்கப்பட்ட கருத்து சித்தநெறிக் கருத்தேயாகும். சுருங்கச் சொல்லப்பட்டதால் உட்பொருள் தெரியாமலிருக்கலாம். ஆனுல் மெய்யுணர்விற்குப் பாடுபடுவார்க்குப் புலனுகாமற் போகாது. பொய்யுணர்வு புலமையாளர்களால் பொருந்தாக் கருத்துக்கள் பல விளங்கலாம். அவை ஏதும் செயற்பாட்டுக்கு ஒத்துவாராதவையேயாம். நாம் காட்டும் விளக்கத்திற்கு நேரடிச் சான்றுகளும் பயிற்சிகளும், பயன்களும் பயன்சால் சான்றேர்களும், அவர்தம் மெய்யுணர்வுப் பிழிவான நூல்களும் உள்ளன.

எனவே, மாந்தராகப் பிறந்த நாம் நாளைக்கும் நாம் உயிர் போகாவண்ணம் வாழவேண்டுமென உண்மையில் எண்ணுவோமானால் அகத்தில் உள்ள அமிழ்த உணவை உண்டாகவேண்டும். அவ்வுண வைப் பெற வாசியோகக் கலப்பை கொண்டு உயிர்க் காற்று நிலத்தில் வேளாண்மை செய்து அவ்வமிழ் தத்தைப் பெற வேண்டும். இதுபற்றிய விளக்கத் தைப் பயிற்சி மூலம் கற்றுத் தருகிறேன் வா!

மாண: மிக்க நன்றி ஐயா!

## எது உட்பகை?

சினத்தைக் காட்டிலும் வேறு வலிமையான பகை இல்லை. அந்தச் சினம் நம் உள்ளேயே இருந்து நம் பெருமை, பொறுமை, அருமை முதலியவற்றை அரம்பொருது பொன்போலச் சிறுகச் சிறுகத் தேய்த்து விடுகிறது. சில வேளைகளில் உயிரையும் பிரித்தே விடுகிறது! எனவே உட்பகையாக உள்ளது சினமே!

"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற."
—திருவள்ளுவர் (304)

# 10. வினைத் திட்பம்

ஆசிரியர்: இவ்வுலகில் வேண்டிய வலிமைகளில் முதலாவதாக வேண்டிய வலிமை யாது?

மாணவர்: பொருள் வலிமை.

ஆசி: இல்லை; மன வலிமை. மன வலிமை (மனத் திட்பம்) இல்லாமல், பிற வலிமைகளால் அன்றி பிறர் வலிமையால் வலிமையுடையவரைப் போல் விளங்கினாலும் நெடுங்காலமாக விளங்க முடியாது.

மாண: ஆம்; நிலையான வலிமையும் ஆகாது. ஆமாம் இது பற்றி (மன வலிமை) உயர்திரு வள்ளுவர் என்ன சொல்கிறார்?

ஆசி: ''வினைத் திட்பம்'' என்னும் அதிகாரத்தில் முதற் பாட்டாக உள்ளது இது.

> ''வினைத்திட்பம் என்ப(து) ஒருவன் மனத்திட்பம்
> மற்றைய எல்லாம் பிற.'' —(661)

வினை—செயல். தொடர்ந்து செய்யப்படும் செயல்—தொழிலாகும்.

வினை, செயல்—இவை ஒரே சார்புடையவையே. ஒருவன் செய்யும் செயல் வலிமையுடையதாக இருக்க வேண்டுமானால் முதற்கண் அதைச் செய்பவன் மனம் வலிமையாக (திட்பமாக) இருக்க வேண்டுமென்கிறார் உயர் திருவள்ளுவர். எனவே, எதற்கும் மன உறுதி—வலிமை இன்றியமையாததாகிறது.

மாண: அப்படியானால், பிற பொருள் வலிமைகள், உடல் வலிமை ஆகிய எல்லாம் மனத் திட்பத்திற்கு பிறகுதான் என்கிறீர்கள்?

ஆசி: நானா சொல்கிறேன்! உயர் திருக்குறளே சொல்வது தெரியவில்லையா?

மாண: தெரிகிறது! தனக்குத் தானே மன உறுதி கொண்டால்தான் எந்தக் காரியத்தையும் நன்ருகச் செய்யமுடியும். அப்படியாளுல் தீய செயல்களைச் செய்வதற்கும் இந்த மன வலிமைதானே காரணமாகிறது! அது எப்படி? அப்படிப்பட்ட வலிமை தேவைதாளு?

ஆசி: மனவலிமை இருவகையில் ஏற்படக்கூடியது. அறிவறிந்து ஏற்படும் மன வலிமை ஒன்று. மற்ருென்று அறியாமையால் ஏற்படும் மன வலிமையாகும். அறியாமையால் ஏற்படும் மனவலிமையால் தீமைகளும் நடைபெற வாய்ப்புண்டு. ஆராய்ந்தறிந்த மன வலிமையால் நன்மையும் புகழும் மட்டுமே ஏற்பட வாய்ப்புண்டு.

மாண: ஆமாம், எனக்குச் சில வேளைகளில் மட்டுமே மனத் திட்பம் ஏற்படுகிறது. மற்ற வேளைகளில் மனம் வலிமை யிழந்து சோர்வுற்று, சில தோல்விகளைக் கண்டதும் கோழையாகி விடுகிறது. உயர்திரு வள்ளுவர் சொல்கிறபடி மனத் திட்பத்தை ஒருவன் நிலையாகப் பெற முடியுமா? மாறிமாறித் தானே இயங்க முடிகிறது. இதைச் சற்று விளக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

ஆசி: மன வலிமையை உறுதியாக—நிலையாகப் பெறமுடியும். அதாவது, நம் மனத் திட்பத்தைக் குலைக்கக்கூடிய அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் போன்ற பகைவர்கள் நமக்குள்ளேயே இருந்துகொண்டு வலிமையை ஆய்வு (சோதனை) செய்வார்கள். அவர்கள் ஆய்வில் நாம் தேர்ச்சியடைந்துவிட்டால் உண்மையிலேயே நிலையான மனத் திட்பத்தைப் பெறலாம்.

மாண: அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் இவற்றில் ஏதாவது ஒன்றுதானே போகிறது. சில வேளைகளில் ஒன்றிரண்டு இல்லாமலிருக்கின்றன. எப்படியும் இவ்வாழ்க்கையில் ஒன்ருவது இருக்கத் தானே செய்கிறது. வழிபாட்டில் அமர்ந்தால் மன ஒருமைப்பாட்டிற்குப் பயிற்சி தரும்போது கூட கோழை மனம் வலிமையில்லாமல் எங்கெங்கோ சுற்றி—எதை எதையோ நினைத்து அலுத்துச் சலித்து இறுதியில் வந்து ஒன்றுகிறது. அப்போது மட்டும் ஒன்றுமில்லை. ஆனுல் வழிபாடு முடிந்ததும் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுகிறதே! என் செய்ய?

ஆசி: "மன நலம் நன்குடையரேனும் சான்ருேர்க்கு இன நலம் ஏமாப் புடைத்து" என்கிருர்.

எனவே, சான்ருேர் இணக்கத்தைத் தொடர்ந்து செயல்பட வேண்டும். மனத்தில் நிலையான வலிமை வர அதற்கான உயிர்நெறிப் பயிற்சி செய்யவேண்டும். அவ்வாறு செய்வதால் எப்படிப்பட்ட பகை வரும் எதுவும் செய்ய முடியாதபடி தடுக்கும் அரிய ஆற்றல்களை வாய்க்கப் பெறலாம். இதற்கு எடுத்துக் காட்டாகப் பதினெண் சித்தர்களின் பாடல்களே சான்று கூறும். திருவள்ளுவனுரும் "ஒன்னுர்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணின் தவத்தால் வரும்" என்கிருர்.

மாண: விளக்கம் வேண்டும்.

ஆசி: அதாவது ஒன்னுர்-பகைவர். பிறர் பகைத்து வந்தாலும் அவரை மனத்தால் எண்ணிய அளவில் (எண்ணின்) அவரைத் தண்டிக்கவும் முடியுமாம்.

(தெறலும்-தண்டித்தலும்) உவந்தாரை—தன்னைப் பணிந்து தனக்கு மகிழ்ச்சி ஏற்படும்படி நடப்பவர்க்கு ஆக்கம் தரவும் எண்ணிய அளவில் நடைபெறுமாம். எனவே, அப்படிப்பட்ட மனத்திட்பத்தையே தவம் செய்து (உயிர்நெறிப் பயிற்சி) பெற வேண்டுமென்பதே போதுமான விளக்கம்.

மாண: நன்றி ஐயா. இதோ சென்று தவத்தைத் தொடர்கிறேன்.

---

## அற்றவர் யார்?

அற்றவர்—என்ற சொல், வழக்கில் "திக்கற்றவர், கதியற்றவர், பொருளற்றவர், நாதியற்றவர், கல்வியற்றவர்" என்றெல்லாம் பொருள்பட விளங்குகிறது. ஆனால், எல்லாவற்றிற்கும் காரணமான 'அவா' அற்றவரே அற்றவராவார். அவர்தாம் ஒன்றுமே இல்லாதவர்.

"அற்றவர் என்பார் அவா அற்றார்; மற்றையார்
அற்றாக அற்ற திலர்." —திருவள்ளுவர் (369)

# 11. சா(கா)ப்பாடு!

சா—சாவு, சாதல், சத்துப் போதல் (செத்துப் போதல்) என்றெல்லாம் இறப்பைப் பற்றிக் கூறப் படுகின்றன. சா+பாடு=சாப்பாடு-எனப் பிரித்தால் இறந்துகொண்டே யிருப்பதற்கு வாழும் பாடா கிறது—என்பதே பொருளாகிறது.பாடு—தொழில், பாடு—பாட்டைப் பாடு-என்றும் இடங்கட்கேற்பப் பொருள் காணல் உண்டு. மேற்கண்ட தலைப்பைத் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்தாலும் தனித் தனிப் பொருளே தரும்.

சா—இறப்பு, கா—காப்பு, சோலை; பாடு—தொழில் (தொடர்வினை) கா+பாடு—காப்பாடு (காக்கும் பாடு).

இனிச் சாப்பாடு, சாகாப்பாடு என்பதைச் சற்று ஆராய வேண்டும். உடலுக்குத் துணையான உண வைச் சப்பி+இடுதல் சப்பிடுதல்—சாப்பிடுதல் என் றுயிற்று. உடலைக் காப்பாக வைத்திருக்க உணவை உண்பதைச் சாப்பாடு என வழங்குகின்றனர். ஆனல் அச் சாப்பாடு உடலை உயிரினின்றும் பிரியாமல் காக்க முடிகிறதா? எத்தனையோ பேர்க்கு சாப்பா டாகிய மாறுபாடான உணவே உயிர்க்கு சாகின்ற பாட்டைப் பாடி விடுகிறதே! அப்படியிருக்கப் புற நலத் துணைக்குரிய சாப்பாடு உயிர்க்குத் துணை செய் வதாக மன நிறைவடைவது அறியாமையின் பாற் பட்டதே எனின் மிகையாகாதன்றே!

“மாறுபாடான உண்டி மறுத்துணின் ஊறுபாடில்லை உயிர்க்கு” என்று உயர் திருவள்ளுவர் கூறியதை எண்ணிப் பார்த்தல் நல்லது.

உயிரை வளர்க்க—அல்லது உள்ள உயிர் மாய்வ தற்கு ஏதுவாகாத உண்டியே உயிர்க்கு துணை செய் யும் உண்டியாகும். அதாவது உயிர்நெறிக்கு

மாறுபாடு இல்லாத உண்டியாகும். அதையறியாமல் உயிர்க்கு ஊறுபாடு செய்யும் உண்டியும், குடி வகையும் இன்பம் பயப்பதென்று மூட மகிழ்ச்சிக்கு அடிமையாய்க் கிடந்து உழலும் நிலை, உண்மையிலேயே உயிர்க்குரிய உணவு (சாப்பாடு) எது என்று அறியா நிலையாகும்.

உடலைக் காப்பது போல், வளர்ப்பது போல், இன்பமூட்டுவது போல் தெரியினும் புறநல உணவுகளாலும் துன்பமும் உளது. சத்தை அதிகரிப்பது போல் காட்டி உயிர்க் காற்றின் வடிவாகிய விந்து வெளியேறச் செய்து—அவ்வினையையே தொடர்ந்தாற்றிப் பிணிகளுக் கிலக்காகிப் பெரு மருத்துவ நிலையிற் கிடத்தி இறுதியில் நாலாளுக்கு மேலாளாக பாட்டன் வழியேகிப் பல்லாக்கில் படுக்கப்பட்டு மல்லாக்கப் பாடை ஏற வேண்டியதுதான். இதைத்தான் உயிர் நெறியறியா மாந்தர் வாழையடி வாழையாகச் செய்து வருகின்றனர்! அப்படிப்பட்டவர்களுக்காகப் பெரிய பெரிய பிணிமனைகளும் பெருகி வருவதும் பெரிய அறியாமையின் பாற்பட்டதே. மாறுபாடு உடைய (உண்டி) சாப்பாடே மருத்துவக் கல்லூரியை வளர்த்து வருகின்றது; அறிவைத் தடுமாற்றம் கொள்ளவும் செய்கின்றது. இரண்டாயிரமாண்டுகட்கு முன்னரே முப்பால் நாவலர் கூறிய குறட் கருத்தை மெய்யுணர்வுடன் எண்ண வேண்டும்.

உடலுக்குப் புறக்காப்பாக உணவு போடல் எத்துணை இன்றியமையாததோ, அவ்வுணவு தேடியமைக்க எத்துணைப் பாடுகளோ, அவை ஒப்ப உயிர்க்குரிய உணவு எது? என ஆராய்ந்து அவ்வுண்டியே

மாறுபாடல்லாத உண்டியென நம்பி உண்ணவேண்டும். அப்போதுதான் காப்பான பாடாகும் (காப்பாடு). உயிர்க்குக் காப்பாடு இல்லையேல் (சா + பாடு) இறப்பில் கூப்பாடே யாகும்! பின்னர் வாழ்க்கையேது? மேம்பாடேது? எனவே, விலை கொடுத்து வாங்க முடியாத, வெளியில் அவித்தெடுக்காத உணவாகிய ஆவி வழியொழுகும் அமிழ்தத்தைத் தலை வழியுள்ளே இறக்கு முறையறிந்து இறக்கியுண்ணும் உணவே உயிர்க்கு மாறுபாடில்லாத உண்டி.

இவ்வுண்டியைப் பெறும்வரை புற உணவு தேவைதான். ஆயின் இறுதிவரை புறஉணவுச் சுவையிலும் அதையே தேடுவதிலுமே வாணாளைக் கழிப்பது அறியாமையையேயாம். எனவே சாகும் பாட்டை விட்டு, சாகாப்பாடு பெற முயல்வதே உண்மையாக வாழ முயல்வதாகும். மற்றபடி வாழ முயல்வதெல்லாம் ஏமாற்ற வாழ்வேயாகும். சித்த வித்தைக் கருவி கொண்டு மேல் நோக்கி எந்த அளவிற்குத் தோண்டுகிறோமோ அந்த அளவிற்கு அமிழ்துண்டி ஊறும்!

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு." —திருவள்ளுவர்

# 12. ஒழுக்கம்!

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.'' —உயர்திருக்குறள் (131)

இத்திருக்குறள், ஒழுக்கம் உடைமை அதிகாரத்தில் உள்ளது. 'ஒழுக்கம்' என்ற சொல், இடம் நோக்கிப் பொருள் மாறும் சொற்களில் ஒன்றாகும். 'ஒழுக்கம்' என்றால் நீரின் ஒழுக்கமாகவும் கொள்ளலாம். நன்னடத்தை என்றும் பொருள் கொள்ளலாம்.

ஆனால் பண்டைக் காலத்தில் அதாவது, அறவோரும், மெய்ப் பொருள் காணவல்ல மேலோரும், எதிரதாக் காக்கு' அறிவினரும், இகழ்வார்ப் பொறுக்கும் இயல்பினரும், சமன் செய்து சீர்தூக்கி, மிகை நாடி மிக்க கொள்ளும் மேலாரும், மலையினும் மாணப் பெரிய மதிநலம் வாய்ந்தாரும், மலர்மிசை ஏகியவரின் மாணடி சேர்ந்தாரும், தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தாரும், எனையும் பிறர்க்குரிமையாக்கும் பெற்றிமை பெற்றருமே பெரிதும் வாழ்ந்த அந்தக் காலத்தில் ஒழுக்கம் என்ற சொல்லுக்குக் "கற்பு" என்ற மறு பெயர்ச் சொல்லும், "கற்பு" என்ற சொல்லுக்கு "முல்லை" என்ற மறு பெயரும் வழங்கினவாம்.

"கற்பு" என்பதைப் பற்றித்தான் தெரியுமே. பெரும்பாலானவர்கள் 'கற்பு' என்பது பெண்களுக்கே உரியது என்றும் எண்ணுவார்கள். இரு பாலார்க்கும் கற்பு ஒன்றே இதை 'முல்லை' என்று ஏன் அழைத்தார்கள்? என்றால், மருதம்—வயலும் வயல் சார்ந்த இடமுமாகும். குறிஞ்சி—காடும் காடு சார்ந்த இடமுமாகும். இடையில் முல்லை—மலையும்

மலை சார்ந்த இடமுமாகும். முல்லை நிலப் பகுதி குளிர்ச்சியாகவே இருக்குமாம். அப்பகுதி மக்களும் குளிர்ச்சியுடையோராய் வாழ்ந்ததால், உடற்காமம் விரைவில் எழா நிலையில் இருக்குமாம். அந்நிலையிலும் ஒருவர் கற்பு மாறினுல், அதாவது முல்லை (ஒழுக்கம்) மாறினுல் அவர்க்குப் புனைப் பெயராக உடனே "முல்லைமாறி!" என்பார்களாம். அது திரிந்து தமிழக மெங்கும் வழக்குச் சொல்லில் இன்றும் "மொல்ல மாறி" என்றே வழங்கப்படுகின்றது.

ஆகவே முல்லை—கற்பு—ஒழுக்கம் இம் மூன்று பெயர்ச் சொற்களும் ஒரே பொருட் பெயரையே குறிக்கின்றது. அப் பொருட்பெயர் யாது? அது தான் உயிர்! அந்த உயிரின் சிறப்பைப் பற்றித்தான் தான் சற்று சிந்தித்தாலே தெரியும். என்றுலும் உயர்திரு வள்ளுவர் வழியே ஒரு சான்றைக் கண்டு சொல்லல் நன்றல்லவா?

ஊழைப் பற்றிச் சொல்லுகையில் "ஊழிற் பெரு வலியாவுள?" என்று வியந்து சொன்னவர். "ஊழையும் உப்பக்கம் காண்பர்!" என்று சொன்னது போல், உயிரையும் விடப் பாதுகாக்கக் கூடியது ஒழுக்கம்! என்ற கருத்தில் "உயிரினும் ஓம்பப்படும்" என்றுர்.

ஒழுக்கம் காக்கப்பட்டால்தான் உடல் நலமாக இருக்க வழியுண்டு. உடல் நலமாக இருந்தால் தான் உயிர் சிறப்பாக வாழ வழியுண்டு. அப்படியாலுல் ஒழுக்கம் கெடாமல் பாதுகாப்பது எப்படி? ஒழுக்கம் கெடுவதற்குரிய காரணங்கள் யாவை? எப்படி முயன்றுல் ஒழுக்கம் கெடாமல் பாதுகாக்கலாம்?

என்றெல்லாம் சிந்தித்து முயல வேண்டாமா? ஒழுக்கம் கெடுவதற்கும்—கெடாமல் காப்பதற்கும் முதற் காரணம் எண்ணம். எண்ணம் நேராகச் செல்ல வேண்டும். அது, மெய்—வாய்—கண்—மூக்கு--செவி ஆகிய ஐம்பொறி (உறுப்பு) வாயிலாகவே எண்ணம் செயல்படுகிறது. அதனால், ஆறும் அறிவாகிய பகுத்தறிவின் துணைக்கொண்டு முதலில் ஐம்பொறிகளையும், அவற்றின் போக்குக்கு ஏற்றபடி சென்ற விடத்தால் செலவிடாது தீது ஒரீஇ, நன்றின்பால் உய்க்க வேண்டும்.

அதற்கு, ஐம் புலக் கட்டுப்பாடு வேண்டும். உறுப்புக்களின் வெளிக் கட்டுப்பாட்டைக்கொண்டு தான் அகக் கட்டுப்பாட்டை உண்டாக்க முடியும். ஆக, புறத்தில் ஒழுக்கத்தை ஐம்பொறிகளில் கடைப்பிடிப்பதே முதல் வேலையாக இருக்க வேண்டும்.

மனக் குதிரையை, புறத்தில் விடாமல் இதயத் தடமாகிய கொட்டத்தில் கட்டி வைத்தாலும் துள்ளும். அதனால், அம் மனக்குதிரை உண்மையிலேயே கட்டுப்பட்டுப் படுக்க வேண்டுமாயின், குதிரையை களைப்பு ஏற்படும் வரை செலுத்த வேண்டும். எப்படி? வாசிப் பயிற்சியினால் செலுத்தினால் தன்னாலே புருவ நடுவிடமான கொட்டத்தில் அடங்கும். அப்போதுதான் உண்மையான அடக்க முடையவராக ஆகமுடிகிறது. அப்போதுதான் பொறிவாயில் ஐந்தவித்த, பொய் திர்ந்த ஒழுக்க நெறி நின்றாராகவும், நீடு வாழ்வாராகவும் ஆக முடிகிறது இந்தக் கருத்தின் முழுப் பயனை ஞானசித்தராகிதிருவள்ளுவனார்

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்." என்றார்.

ஐம்பொறி வாயிலாக அடக்க வேண்டுமென்றால் நிலையில் திரியாது தனியறையில் அடங்கித்தான் முயல வேண்டும்.

எனவே உயிரைவிட ஓம்பக் கூடியது (பாதுகாக்கக்கூடியது) ஒழுக்கமென்றால் மிகவும் உண்மையான தாகும். ஐம் பொறிகளின் அடக்கத்திற்குக் குறிப்பான வழிகள், உணவு-காட்சி-இவ்விரண்டுமே. சில வகை உணவுகள் — உறுப்புகளைக் கட்டுக்கு அடங்கா உணர்ச்சிக் காளாக்கி யியக்கிவிடும். சில வகைக் காட்சிகளும்—கட்டுப்பாட்டைத் தட்டுப் பாடாய் ஆக்கிப் பெரிய முட்டுப் பாட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்.

களிப்பு ஏறும் உண்கலங்கள் தூயதாகவும் ஒளி வீசவும் வேண்டுமானால் ஒவ்வொரு நாளும் துலக்க வேண்டும். அதுபோல, இழிவு என்ற களிம்பு ஏறும் படியான உடலுடைய மனிதர்கள் ஒவ்வொரு நாளும், அவ் விழி வுணர்வைத் துடைக்க வாசிப் பயிற்சி செய்ய வேண்டும். களிம்பைப் போக்கப் புளி வேண்டும். அதுபோல மனத்தின் அழுக்கைப் போக்க ஒரு மருந்து வேண்டும் அல்லவா? அந்த மருந்து தான் சித்த வேதம். சிவானந்தப் பெரியார் தந்த அருமருந்து—உயிரினும் ஓம்பப்படும் உயரிய ஒழுக்கம் காக்கும் மருந்து-சிவானந்தர் தந்த மருந்து. அதைப் பெற்றுக் கற்று—பயன் உற்று—உலகை நலப்படுத்துவோமாக.

# 13. எது பழி?

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. —(குறள் 618)

பொறி—உறுப்பு
இன்மை—இல்லாமை
யார்க்கும்—அறிஞர்க்கும் பேதையர்க்கும்
பழியன்று—பழியாகாது (ஆனால்)
அறிவு அறிந்து—அறிவு என்பது என்ன
வென்று அறிந்திருந்தும்
ஆள்வினை—முயற்சியான செயல்
இன்மை—இல்லாமலிருத்தலே
பழி—பழியாகும்.

பொறி—என்பது பல பொருள்களைக் காட்டலாம். அதாவது இயந்திரம்—விதி—தீப்பொறி எனவெல்லாம் குறிப்பிட ஏதுவாகிறதாம். ஆனால் உயர் திருவள்ளுவர் சொல்லப்படும் கருத்திற் கேற்ற பொருள் இங்கே பொறி—உறுப்பு (அவயவம்) என்றே கருத வேண்டும். சில குறட்பாக்களில்,

"பொறிவாயில் ஐந்தவித்தான் ... ......"

"கோளிற் பொறியில் குணமிலவே ..... "

பொறி என்ற சொற்கு உறுப்பு என்றே பொருளாகிறது.

மாந்தர் முயற்சித்துப் (ஆள்வினை) பெறவேண்டிய ஒன்று உண்டானால் அது அரிதான பயனைக் கொடுக்கக் கூடிய செயலாகத் தான் இருக்க வேண்டும். "செயற்கரிய செய்வர் பெரியார். சிறியார் செயற்கரிய செய்கலாதார்." அரிய செயல் யாதாக இருக்க முடியும்?

இற்றைப் பொழுதில் விஞ்ஞான விளையால் விண்ணையும் அளக்க முயற்சி நடைபெறுகிறது. விஞ்ஞானத்தால் எல்லாவற்றையும் செய்யலாம என்று பேரிகை கொட்டுகின்றனர் ஆனல் அவர் களை சொல்கிருர்கள் சாவைத் தடுப்பது விஞ்ஞானத் தால் ஆகக்கூடியதன்று. முயன்ருலும் அரிதேயாகும் என்கிருர்கள்.

எனவே அவ்வரிய செயலைச் (சாவைத் தடுக்கும் செயலை) செய்து பயன் பெற எல்லாரும் ஆள்வினை கொள்ள வேண்டும் (முயற்சியான செயலைத் தொட ரவேண்டும்). அம்முவற்சிக்குரிய உறுப்பு இல்லையே என்ருல் அதனுல் பழியில்லை. அவ்வுறுப்புப் பொருத் தம் இருந்தும், அரிய செயலைத் தெரிந்தும், அதன் பயனை அறிந்திருந்தும் அதைச் செய்ய முயலாமல் இருப்பதுதான் பழியாகும்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? என்ருல் மாந் தர் முயற்சிக்கும் பல செயல்களிலும் தேர்ச்சியும் நிறைவும் பெற்ருலும் நிலையான நிறைவைத் தாராது. ஏன்? இறுதியில் சாவு வரும்போது தடுக்க முடியாமல் ஆயிரமாயிரம் நிறைவுக்குரிய அவரே தீராத குறையுடையோராய் புழுங்குவார்—அழுங் குவார்—தேமுவார்—திக்குவார் — முக்குவார் — நை வார்—சலிப்பார்—புளிப்பார்—மேலும் கீழும் விழிப் பார்! இறப்பார். இந்நிலையைத் தெரிந்திருந்தும் அவரை அடக்கம் செய்தவர்களில் சிலர் அவ் விவரங் களை அறிந்திருந்தும், நமக்கும் பின்னுல் இந்த முடிவு தானே என்று தெரிந்தும் இறப்பை மறிக்கப் படிக் கும் கூட்டத்தில் இணைந்தும், விளங்கியும் கூட, அறிய வேண்டியதை அறிந்தும் கூட அதற்கு முய லாமல் இருப்பதுதான் பழி! பழி!! பழி!!! முயல்க! வெல்க!!

*

# 14. உயிர் நிலை!

உயிர் நிலையைப் பற்றித் திருவள்ளுவ நாயனரிடம் வினவலாம். அவர் சொல்லும் விடை யாது என அறியலாம். அவ் விடை எப்படி சித்த நெறிக்குச் சார்பாகும்? என்பதையும் பார்க்கலாம்.

உயிர் நிலை—என்பது என்ன? உயிர் நிலையாக இருக்க வேண்டுமானல் உயிரின் மேல் காட்டும் அன்பு தொடர்ந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் உயிர் நிலையாக அமைய வாய்ப்பு உண்டு. அவ்வாறு இல்லாமல் அதாவது அன்பும் ஆதரவும், உடை மீதும், உடல் மீதும், உணவு மீதும், வெளி உறவு மீதும் மட்டுமே அமையுமானல் அவ்வுடம்பு (உயிரின் மீது அன்பு செலுத்தாத) வெறும் எலும்பும் தோலும் போர்த்திய உடம்பே தவிர வேறில்லை!

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்
என்புதோல் போர்த்த உடம்பு."

இவ்வாறு திருவள்ளுவர் நெறி கூறுகிறது.

அன்பின் வழியது உயிர்நிலை! அன்பின் வழியிற்றான் உயிர் நிலைபெற முடியும். எந்த அன்பின்? உயிர் மீது (தன்னுயிர்—பிற உயிர்) காட்டும் அன்பின் வழியேதான் உயிர் உடலை விட்டகலாமல் நிலைபெற வழி உண்டு. உடலைத் திடப்படுத்தவும், உடலை அணிப்படுத்தவும், உடலில் நோய் வராமல் காக்கவும் அன்றி வந்தபின் போக்கவும் எடுத்துக்கொள்ளும் முயற்சியும், ஆர்வமும் படுகின்ற பாடும் எவ்வளவு? எவ்வளவு? அவ்வளவு அன்பு செலுத்துகிறோம் உடல் மீது.

இதற்கு மூலமாக உள்ள உயிர் பற்றி அன்பு செலுத்துகிறோமா? என்றால் பெரும்பாலும் உடல் நெறி தெரிந்த அளவிற்கு உயிர் நெறி தெரியாமை யால் உயிர்க்கு அன்பு செலுத்தல் இல்லை. இனி, உயிர்க்காக அன்பு செலுத்துவாரைத் தெரிந்தால் கழிந்து கழிந்து இல்லாமல் போகவிருக்கும் உயிரைத் தம் உற்ற நண்பனைப்போல் கூடவே இருக்கவைத்து விடலாம்! முடியும்! அப்படிக் காட்டுவதுதான் சித்த நெறி! நன்றாக எண்ணிப் பாருங்கள். சித்த வேத நூலைப் பன்முறை பாருங்கள். நன்முறையில் உள்ள சொன்முறைகள் தெளிவாக விளக்கத்லதக் காட்டும்! கலக்கத்தை ஓட்டும்! நல்ல பழக்கத்தைப் பூட்டும்! நெடு வாழ்வை யீட்டும்! புகழ் மேலும் நாட்டும்! முயல்வோமாக!

---

## தெய்வத்திற்கு ஒப்பானவர் யார்?

எதையும் எப்பொழுதும் எவ்வித ஐயமும் இல்லாமல் திட்டவட்டமாகத் தெரிவதே அகத்துணர்வின் பெருமையாகும். ஐயமே இல்லாத உணர்வுடையவரே தெய்வத்திற்கு ஒப்பானவராவர்.

—திருவள்ளுவர்

"ஐயப் படாஅ(து) அகத்த(து) உணர்வானைத்
தெய்வத்தோ(டு) ஒப்பக் கொளல்." (702)

# 15. அறமும் இல்லறமும்.

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று."

இந்தத் திருக்குறளை நன்றாக எண்ணிப் பாருங்கள். பலமுறை வாய்விட்டும் படித்தும் பாருங்கள். பிறகு கீழே விளக்கத்தையும் படியுங்கள்.

'அறன்' எனப்பட்டது என்றால், முதற்கண் அறன்(ம்) என்பதற்கு உரிய பொருளைத் தெரிய வேண்டும். அப்பொருளையும் உயர்திரு வள்ளுவரே சொன்னதாகத் தெரியவேண்டும். இதோ,

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற(து) அறம்."

இதுதான் அறத்தின் இலக்கணம்.

அழுக்காறு—பொறாமை (பொறுக்கமுடியாத குணம்)

அவா—பொருந்தாத ஆசை

வெகுளி—தீமை பயக்கும் கோபம்

இன்னாச்சொல்—துன்பத்தைத் தரவல்ல சொல்

இவை நான்கும் சேராமல் செயல்படுவதே அறச் செயலாம்.

அந் நான்கில் ஏதாவது ஒன்று இணைந்திருந்தாலும் மன மாசுடன் செய்யும் அறமாம். மனத்துக்கண் மாசு இலனாதல் தானே அறம்? எனவே மன மாசு கொண்டு செயல்பட்டால்--அச்செயலை 'அறம்' என்று சொன்னால் அஃது "அறம் இல்"; அதாவது இல் + அறம் = இல்லறம் என்பதாகும். இல் + அறம் இல்லாத அறம். எது இல்லாத அறம்? முன் கண்ட

இலக்கணம் (நாற் பண்பு) இல்லாத அறம். எனவே இல்லறம். இவ்வில்லறத்தை மேலும் விளக்கவேண்டுமானால், உயர்திணை அல்லாத அத்தனையும் அஃறிணையே; அதாவது (அல் + திணை = அஃறிணை); அல்லாத திணை என்பதைச் சுருக்கி அல்திணை என்ப அதுபோல இல்லாத அறம் இல்லறம். இவ்வில்லற வாழ்வே இல்வாழ்க்கை. எது இல்வாழ்க்கை? அறம் இல்வாழ்க்கை. அதாவது அற முறை இல்லாத வாழ்க்கையே இல் வாழ்க்கை! அறமுறைப்படி பிறர் பழி கூறுமல் இருந்தால் — திருத்திக்கொண்டால் அதாவது முன்கண்ட அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் இவை இல்லாத அறவாழ்க்கையாக மாற்றிக்கொண்டால் (பிறர் பழியாமல்) அப்போது அறன்(ம்) எனப்பட்டதாகும் இவ்வில் வாழ்க்கை.

இப்போதுள்ள—எல்லாத் தரமுடைய குடும்பங்களையும் ஆராய்ந்தாலும் பிறர் பழி கூருவண்ணம் நடைபெறும் இல்லறம் அரிதுதானே? பிறர் பழி கூறக் காரணம் என்ன? அழுக்காறு—அவா—வெகுளி—இன்னுச்சொல் தாமே! இவை தவிர்த்தால் தானே அறம் ஆகும். அப்போது தானே அறவோராவார்! அறவோர் வேலை? எவ்வுயிர்க்கும செந்தண்மை (தன்னுயிர்க்கும்) பூண்டு ஒழுகுவது தானே!

எனவே இல்லறம்—இல்வாழ்க்கை—என்பவை, அறமின்றி நடைபெறுபவை என்பது உயர்திருவள்ளுவர் பாக்களைக் கொண்டே தெளிய வந்தன.

சித்த வித்தை கற்பித்த—சாகாக் கலைத் தந்தையான சித்தர் சிவானந்தப் பேரிறைவன் காட்டிய சித்தவேத—சித்த நெறிப்படி ஆணும் பெண்ணும —அறமுறைப்படி அற வாழ்க்கை நடத்த வேண்டும்

என்பதே குறட் கருத்து. அவ்வாறு அறமில்லா வாழ்க்கையே மலிந்தமையால்தான் (அறம்) இல் வாழ்க்கை என்று தலைப்பிட வேண்டிவந்தது.

இதையாராயும் பொழுது ஒவ்வொரு குடும்பத்தினரும், எவ்வுயிர்க்கும் (தன்னுயிர்க்கும்) செந்தண்மை-அதாவது பாதுகாப்பு உதவி செய்து வாழ்வதே அறவாழ்வாகும். அவரே அறவோர் என்று புலனாகவில்லையா? எவ்வாறு உயிர்க்குப் பாதுகாப்புச் செய்வது? என்ற வினா எழலாம்! விளக்கம் முழுவதும் 'சித்த வேதம்' என்னும் தலைப்பில் உள்ள நூலில் உள்ளது. சித்த வித்தை செய்வதால் உயிர் அடக்கம் பெறுகிறது! உலைவெல்லாம் போகிறது! உண்மையான வாழ்வே அறவாழ்வு! ஒருபொழுது வாழ்ந்தாலும் உண்மையான அறவாழ்வு வாழத் தெரிக. இது பற்றித் திருவள்ளுவரும்

''ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல'' —என்றார்.

---

## அறம் செய்யாமல் இருப்பது நல்லது! எப்போது?

பொய்யான ஒன்றை எண்ணவோ, பேசவோ, செய்யவோ கூடாது. அதைப் போலியாக பொய்யாமை உடையவரைப் போல் நடக்காமல் செயல்பட்டால் அதுவே அறச் செயலாக மதிக்கப்படுகிறது வேறு அறங்கள் செய்ய வேண்டியதில்லை.

''பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.'' —குறள் (297)

# 16. அமரருள் உய்க்கும்?

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்."

இந்தத் திருக்குறள் அடக்கம் உடைமை அதிகாரத்தில் உள்ளது. இக்குறளின் மெய்க்கருத்தாவது:

அடக்கம்—உயிர்ப்படக்கம். உடலைவிட்டுக் கழியும் உயிரானது உடலுக்குள்ளேயே அடங்கப்படுவதாம். அடங்கல்—என்றால் தானாக அடங்குவதென்றும் பொருள்படும். அடக்கல், அடக்கப்—என்பது, அடங்காமல் செல்வதைக் கவனித்து அடக்கப்படுவதே அடக்கல் அல்லது அடக்கம் ஆகும் அதனால் தான் உயர் திரு வள்ளுவனார், "அடங்கல் அமரருள் உய்க்கும்" என்னாது "அடக்கம்"—என்று தொடங்கினார். அடங்கப்படுவது அடக்கம். அடக்கமாகியிருக்கும் நிலைக்கு அடங்கல் என்று பெயர். அப்படி அடக்கியும் நில்லாமல் செல்லுகிறபோது தான் அடங்காமை என்ற பெயர் வருகிறது. அடக்கும் செயல் நிகழ்ந்தால் தானே அடங்காமை என்பது தோன்றும். இதை இன்னும் விரிக்கவேண்டுமா? வேண்டாம்.

இவ்வாறு அடக்கம் செய்தால், எதை? கழியும் உயிர்க்காற்றை அடக்கினால் அவ்வடக்கத்தின் பயன் அமரருள்—சிறந்த சான்றோர் உலகில் செலுத்தும். சான்றோர்—என்பவர் வானுலகத்தில் இலர். எல்லாரும் நிலவுலகத்தில் தான் உள்ளார். சித்த அறிஞர் பலர் சான்றாண்மை எய்தி எல்லாரும் நிலத்துள் அடங்கித்தான் தம் ஆற்றல்களைப் புலப்படுத்து

கிறார்களே தவிர, வானரதத்தை வருவித்து யாரும் ஏறிச் சென்றதாக இல்லை. அதனால்தான் திருவள்ளுவனாரும் கூறுகிறார்: எங்கெங்கோ தெய்வம் இருப்பதாக எண்ணி வழிபடும் மாந்தனே! வானத்திலும் தெய்வம் இருப்பதாக எண்ணிக்கொண்டு இருப்பவனே! சற்று கவனி! எந்தப் பொருளையும் அல்லது யாரையும் பற்றிச் சிறிதும் ஐயப்படாமல் (சந்தேகப் படாமல்) அகத்தில் உணரும் ஆற்றல் உள்ளவனும் தெய்வத்திற்கு ஒப்பானவன்தான். நீ எதிர்பார்த்திருக்கும் வானத்தில் குடியிருக்கும் தெய்வத்திற்கும் கூட ஒப்பானவனாவான். எனவே அவனே சான்றோன்! அவனே அமரன். அப்படிப்பட்ட அமரர் இருக்கும் உயர்ந்த இடத்தில் உன்னைக் கொண்டு செல்லும் உயிர்ப் படக்கப் பயன் என்கிறார்.

''ஐயப் படா(அ) தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.''

இனி அடங்காமை—என்பது மனத்தை ஒரு நிலைப்படுத்தும் பயிற்சியில் அமைந்து கழிந்து போகும் உயிர்க்காற்றைக் கழிய விடாமல் ஊதிக் காட்ட முயன்றாலும், பல சூழல் காரணமாக, அலுவல் காரணமாக உயிர்க்கழிவு அடங்காமல் செல்லவும் கூடும். அவ்வாறு, அடக்கும் பயிற்சியில் ஈடுபட்டவர்க்கே (சித்த வித்தியார்த்திகள்) அடங்காமல் செல்லுவதும் உண்டு என்றால் இந்த உயிர்ப்படக்கப் பயிற்சி இல்லாதவர்க்கு எவ்வளவு விரைவாகக் கழியும்!! எண்ணிப் பார்க்கவேண்டும்!

அவ்வாறு அடக்கும் பணியில் ஈடுபட்டும் கவனக் குறைவால், சோம்பலால், நம்பிக்கை வராததால், அடங்காமல் உயிர்காற்று கழியும். அவ்வாறு கழியும் நிலைதான் ஆரிருள்—ஆர் + இருள் = நிறைந்த துன்

பத்துள், உய்த்து—செலுத்தி, விடும்—விட்டுவிடும். ஆர்—என்பது பலபொருள் ஒருசொல். ஆர்—சிறந்த தலையாய, நிறைந்த, அழகிய, ஒலி முதலிய பொருள் களைத் தரும். இங்கே, ஆர் + இருள் = தலையாய அல்லது பெரிய துன்பத்துள் செலுத்திவிடும் என்பதே பொருள்.

துன்பங்களுள் எல்லாம் பெரிய துன்பம் ஒன்று உண்டா? என்றால், "உண்டு" என்பார் வள்ளுவனார். அத்துன்பமே 'இன்னா' இன்னா-என்பதும் துன்பமே. காண்க.

"சாதலின் இன்னாததில்லை... ...... ..." என்று தொடங்கும் திருக்குறளை நோக்குங்கள். "சாவை விடப் பெரிய துன்பம் ஒன்றில்லை" என்பதாம். எனவே. ஆர் + இருள் = தலையாய—பெரிய துன்பம் என்பது சாவு தான். சாவில் செலுத்திவிடும் உயிர்ப் படக்கம் செய்து அடக்காவிட்டால், அடக்கம் தெரியாதாரும், அடக்க முயன்று விட்டவரும் கூடச் சாவுள் செல்ல வேண்டியதுதான். எனவே, உயிர்ப் படக்கத்தை முதலில் செய்தால்தான், பிற புற அடக்கம் தானே அமையும். அடுப்புத் தீ அடக்கமானால்தான் அடுப்புமேல் கொதிக்கும் சோற்று நீரும் அடக்கமாகும்.

அதை விடுத்து தீயை மடமடவென்று எரிய விட்டு, மேலே மட்டும் கரண்டியால் ஓயாமல் கிண்டிக்கிண்டி ஆற்றினால் போதாது! சிந்தும் கொதி நீர் சிந்தித்தான் ஆகும்! அதுபோல மனத்தில் அடக்க உணர்வு வந்து செயல்பட்டால்தான் தாமே பிற அடக்கங்கள் கைகூடும்.

வன்முறையால் சில வேளைகளில் சிலர் சில நாட்கள், வாரங்கள், மாதங்கள், ஆண்டு கூட வெறும் புற அடக்கத்துக்கு மட்டுமே பாடுபடுவார்கள். அதற்குக் கூட போதுமான சூழல் அமைவது கடினம் என்பார்கள். அவர்கள் எல்லாரும் உயிர்ப் படக்கமாகிய அக அடக்கத்திற்கு வந்து ஊன்றி உழைப்பாரே யானுல் புறனடக்கம் தன்னுல் நிகழ் வதைத் தூய்த்து உணர்வார்கள்.

அக அடக்கத்திற்குப் புற அடக்கமும் முதல் தேவையே என்ருலும் புறஅடக்கம் மட்டிலே இருந் தாலும் போதாது. ஆர் இருளைக் கடக்க தீயனவற் றைப் பழகுபவர் முதற்கண் அவற்றைத் துறத்தலே புற அடக்கமாகுப். அப் புற அடக்கத்தின் பயன் அக அடக்கத்திற்கு உதவ வேண்டும்!

---

## வினு விடைத் திருக்குறள்கள்.

அறவினை யாதுஎனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும். (321)

வாய்மை எனப்படுவ(து) யாதுஎனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (291)

அஃகாமை செல்வத்திற்கு யாதுஎனின் வெஃகாமை
வேண்டும பிறன்கைப் பொருள். (178)

அருள் அல்லது யாது எனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல். (256)

# 17. கேடில்லாச் செல்வம்?

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை." (400)

கேடுஇல்—கேடு இல்லாத—கெடுதல் செய்யாத

விழுச்செல்வம்—சிறந்த செல்வமானது

கல்வி—கல்வியாகும். (அதாவது, சுசடாகிய இழிவை அறவே இல்லாமல் செய்வது எதுவோ அதுவே கல்வியாகும்.

ஒருவற்கு—மாந்தராய்ப் பிறந்தார் ஒவ்வொருவருக்கும்

மற்றையவை—கல்வி எனக்கற்பித்துக்கொண்டு படிக்கின்ற பல்வேறு படிப்பெல்லாம் (போலிக் கல்வி)

மாடல்ல—(மாடு + அல்ல) சிறந்தவையல்ல.

(மாடு—செல்வம், சிறப்பு, எருது, ஆ)

இனி இக்குறட்பா விளக்கம் சித்த நெறிக்கு எவ்வாறு உடன்பாடாகும்? ஆராய்வோம். உலகில் கேடு இல்லாத செல்வம் ஒன்றுதான் கல்வி எனச் சொன்னதிலிருந்து கல்வி பல அன்று, கல்வி என்பது ஒன்றே ஒன்றுதான் என்பது நன்கு தெரிகிறது. "கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்றதும் கல்வி ஒன்றுதான் பலவல்ல என்றும் விளங்க இக்குறட்பா போதிய எடுத்துக்காட்டாகும்.

விழுச் செல்வம்:

கல்வியானது கோடில்லாத செல்வம் என்னுது விழுச் செல்வமெனச் சொன்னது ஏன்? சிறந்த செல்வமெனத் தேர்ந்தெடுத்துச் சொல்லவேண்டுமானுல் அது கல்விச் செல்வம் ஒன்றுதான். அதனுல்தான் அப்படிச் சொன்னுர்.

விழுச் செல்வம்—சிறந்த செல்வம் எனச் சொன்னதால், சிறப்பில்லாத செல்வங்களும் உள்ளன என்றும் விளங்க வைக்கிறது. மேலும், கேடும் தரலாம் நன்மையும் தரலாம் எனுங் கருத்தில் உள்ளவை மற்றைய செல்வங்கள். அதனுல்தான் கல்வியைக் கேடு இல்லாத செல்வம் எனக் குறிப்பாகச் சொல்லவேண்டியதாயிற்று.

இங்குக் குறிப்பிட்ட கல்விச் செல்வமானது தாளில் அச்சடித்த நூல் வடிவில் படிப்பதும் எழுதுவதும் மட்டுமல்ல. அதன்படி தெரிந்து தம்மிடமுள்ள கசடை நீக்கி—அறவே நீக்கிச் (செய்யவேண்டிய செயலைச் செய்து) பயனிலை எய்துதலே கற்றல். இப்பொருள் சித்தநெறியைச் சார்ந்ததே. சித்தத்தை நெறிப்படுத்திஞல்தான் கசடை அறவே நீக்கமுடியும். அவ்வழுக்கை நீக்கத் தடையாகப் பல விருக்கலாம். அவற்றில் ஒன்று, "அது வேண்டும், இது வேண்டும்" எனப் பேரவாக் கொள்ளும் தியுணர்வாகும். கண்டதெல்லாம் கேட்டதெல்லாம் கூட வேண்டும்! வேண்டும்! எனக் கருதும் வேண்டுகோள் அவா. அது இல்லாமல் இருக்கும் நிலையே சிறந்த செல்வமாகும். அச்செல்வத்திற்கு ஒப்பான செல்வம் இங்கு இல்லை. எப்பொழுதும் அதைப் போன்ற செல்வம் வேறொன்றும் இல்லை எனக் குறிப்பாகச் சொன்ன குறட்பாவையும் எண்ணிப் பார்த்தால் கேடில் விழுச் செல்வம் சித்தநெறிச் செல்வம்தான் எனப் புலனாகும்.

"வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்." —(363)

இன்னும் குறட்பாவில்,

"செல்வத்துட் செல்வம் அருட்செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள."

எனக் குறிப்பிடும் அருளாகிய செல்வமும் சித்த நெறி சார்ந்த செல்வமேயாம். கேடில் விழுச் செல்வம் அருள் உடையதாகத் தானே அமையும். பிற பொருட்செல்வம் எல்லாமே இழிந்தவரிடமும் இருக்கும். ஆனால் அருட்செல்வம் சித்தத்தை நல்ல ஒழுக்க நெறியில் ஈடுபத்திச் செயல்படுபவருக்கு மட்டுமே அமையும்.

இனி அடுத்து ஒரு குறளில்,

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

என்று குறிப்பிடுவதும் சித்தநெறியை ஒத்ததேயாம். கேடு இல்லாத விழுச்செல்வத்தைப் பெறுவதற்கும், அருட்செல்வத்தைப் பெறுவதற்கும் செவி வழியிற் கேட்கப்படும் வாய்ப்பும் சிறந்த பயனைத் தரவல்லது. செவியில் கேட்கப்படுவன எல்லாம் செல்வமாகுமா? சிறந்த கருத்துக்கள் மட்டுமே—தன்னைத் தூய்மைப்படுத்தும் கருத்து மிக்கக் கேள்வியறிவே தலையான செல்வமென்றார். அவ்வாறு தாம் கேட்ட செல்வக் கேள்வியின்படி செயல்பட்டுத் தேர்ச்சியடையும்பொழுது, அருட்செல்வமும் வேண்டாமையான நிறை நிலையும் கிடைக்கலாம். செவியில் சிறந்த கேள்விச் செல்வத்தை முதலில் பெறுவதற்கும், உயர்ந்தோரிடம் பழகும் வாய்ப்பும், அன்றி உயர்ந்தோரின் நூல்களைப் படிக்கும் வாய்ப்பும் ஏற்படவே டும். அறனறிந்து மூத்தாருடைய அறவுரை

களைக் கேட்கும் வாய்ப்பும் ஏற்பட வேண்டும். அவ்வாறு தம் மனங்கள் செல்வதே இன்று அரிது.

ஏதோ, பெயருக்கும் புகழுக்கும் பாராட்டிற்கும் கூட்டங்கள் நடத்திக் கருத்துக்களைக் கேட்பதும், ஒப்பனைக்காகவும் தனிப்பட்ட தன்னலங் கருதியும் உயர்ந்தோரைப் பழகத் தொடங்கி இடையில் கைவிடுவர் பலர். ஒரு சிலர் தொடர்ந்து பழகுவார்; உயர்ந்த கருத்துக்களைக் கேட்பதற்கும் தவற மாட்டார்கள். ஆனால், அக் கேள்விச் செல்வத்தைத் தாம் உய்வடையப் பயன்படுத்துவாரோ? என்றால் அரிது தான். இவ்வாறு சுட்டிக்காட்ட வேண்டிய காரணம் யாதோவெனின், பண்டைய நூல்களையும், கோவில்களையும், பூசைகளையும், விழாக்களையும், பட்டிமன்றங்களையும், ஆன்மிகச் சொற்பொழிவுகளையும், மிகவும் மலிவாகத் தத்தம் மதங்களுக்கேற்பப் பெருக்கி வரக் காண்கிறோம். ஆனால் அப்பெருக்கம் உண்மையிலே செயல்வழியே பெருகுமானால் இப்பொழுது பெருகிவரும் மருத்துவமனைகள், வழக்குமன்றங்கள்' சிறைக்கூடங்கள், காவலர் நிலையங்கள் சுருங்கிவர வேண்டும். இவை வளர்ந்து வருகின்றதே யொழியக் குறைந்தபாடில்லை. இதன் நிலை இவ்வாறே முற்றிக் கொண்டே போனால்-எத்தனை கேள்விச் செல்வங்கள் உருவாகி என்ன பயன்?

# 18. உயிர்க்கு?

உயிர்க்கு—உடலுக்கு—உடைக்கு—உறைவிடத்திற்கு — உலகுக்கு என்றெல்லாம் சொல்வதில் "உயிர்க்கு" என்பதே மூலம். அவ்வுயிரடக்கம் மிகவும் இன்றியமையாதது என்பது சித்தர் தம் கருத்து. அந்நெறியைச் சார்த்தியே குறட் கருத்தும் விளக்குகிறது.

சித்தர்களின் கருத்துக்கள் பெரிய பாடல் வடிவில் குறிப்பிட்டவர்கள் மட்டுமே படித்தறியக் கூடிய அளவில் அமைந்தன. அதனால்தான், திருமூலரை ஒட்டிப் பின் தோன்றியவராகக் கருதப் படுவர், திருவள்ளுவர். அவர் சித்தநெறி, மாந்தர் எல்லாரும் அறிய அறம், பொருள், இன்பம், வீடு என்றபடி பாடியருளினர். அதனாற்றான், இன்று சித்தர் பாட்டுப் பரவ முடியாத இடமெல்லாம் திருக்குறள் பரவிவர வாய்ப்பாக இருக்கிறது.

ஏதோ வெளிப்பொருள் கொண்டாவது, தெரிந்தோ, தெரியாமலோ தமிழ் நாடும் பிற நாடுகளும் போற்றிவருவது போற்றத்தக்கதே. ஆனால் உண்மை உரையை ஒத்துப் பார்த்து—பின் உற்றுப் பார்க்கத்தான் போதிய அறிவும் காலமும் அமையவில்லை பலர்க்கும்.

திருவள்ளுவர் குறட் கருத்துக்கு விளக்கம் அவருடைய பாடல்களிலேயே கூறப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியாவது முதலில் செய்ய இன்று திருக்குறள் பயன் படுத்தப்படுகிறதா? என்றால் ஐயமே! சான்றாக ஒன்றிரண்டைப் பார்ப்போமே!

அறம்—என்றால் என்ன பொருள்?

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்! இக்குறளே விடையாக அமைகிறது. இதை விடுத்து, அறம்—என்பது தருமம். தருமம் என்பது கொடை கொடுத்தல் என்றெல்லாம் கூறுவது ஏனோ? அடுத்து, அறவோர் என்பவர் யார்? அறவோர் என்பவர் அந்தணர். அந்தணர் என்பவர் யார்? எவ்வுயிர்க்கும் (தன்னுயிர்க்கும்) செந்தண்மை (பாதுகாப்புதவி) பூண்டு ஒழுகுபவர். இக்கருத்தை விடையாகக் கூறும் குறள் இதோ—

''அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.''

இவ்விடையைக் கூறாமல் அந்தணர் என்பவர், ''பிராமணர்'' என்று கூறி பிராமணர் என்ற சொல்லுக்குப் பொருளறியாமல்இக்காலச் சாதிப் பிரிவினையில் வாழும் பார்ப்பனரை பிராமணர் என்று சொல்லி, அவர்களே அந்தணர் என்றும் சொல்லி உரை கூறுவது ஏனோ? அடுத்து ஒரு குறளை மட்டும் நோக்குவோம்.

வாய்மை என்பது யாது என்றால் சொல்லைச் சொன்னவருக்கும், கேட்டவருக்கும் தீமை ஏற்படாதபடி கூறுவதுதான் வாய்மை. இதை ''வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்'' என்று விடை உள்ளது. இதை விடுத்து, வாய்மை என்பது சத்தியம் என்று சொல்வது ஏனோ? இனி தலைப்பிற்கு வ[illegible]வோம். அடக்கம் உடைமை அதிகாரத்தில் ஒரு பாட[illegible].

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின் ஊங்கில்லை உயிர்க்கு."

இந்தக் கருத்தினை நன்ருகப் படியுங்கள். இதில் உயிர்க்குத்தான் ஆக்கமாகக் கூறப்பட்டது. பொருளை—புறப்பொருள்களை நாம் செல்வமாக, தேடிய 'ஆக்கமாகப் போற்றுகிறோம்! காக்கிறோம்; வட்டிக்கு வேறு விட்டுப் பெருக்குகிறோம். செய்யாத கலப்படத் தீமைகளையும் செய்து, முறையற்ற கையூட்டுகளையும் (இலஞ்சம்) பெற்று வங்கிகளில் போட்டு நிலங்களையும், வீடுகளையும் வாங்கி மேலும் பொருள் பெருக்கிக் காக்கின்றோம்! அப்படிக் காப்பவர்களைப் பார்த்துத்தான் சொல்லுகிறுர் திருவள்ளுவர்: நீ புறத்தில் காக்கும் பொருளைப் போல (அல்லது) அந்தப் பொருளாகவே உயிர் அடக்க நிலையைக் காககவேண்டும். அவ்வாறு உயிர் அடக்கம் செய்வாயாஞல், உன் உயிர்க்கு வேறு ஆக்கம் அதைவிட மேலாக இல்லை. 'உயிர்க்கு' என்று சொன்னதை உயிர் வாழ விரும்பும் ஒவ்வொரு நெஞ்சமும் நினைக்க வேண்டும்.

"ஆக்கம்" என்பது இருந்த நிலையைவிட உயர்வதுதான். இருந்த நிலை தாழ்ந்து போகாமல் போராடித் தாழ்வைத் தடுத்துக் காப்பதும் ஒரு வகையில் ஆக்கம் தான். காக்க வேண்டும் என்று சொன்னதை ஆராய்ந்தால் அடக்கம் பறி போதல் இயல்பு என்றும், விழிப்பாகக் காக்க வேண்டிய மூலம் தான் உயிர்க் காப்பு என்றும் விளங்க வேண்டும்.

சொல்லளவில், உடல் செயலளவில் அடக்கமாக இருந்தால் மட்டும் உயிர்க்கு ஆக்கம் வருமா? வராது.

அதனுல்தான் 'உயிர்க்கு' என்று சொன்னது! உயிர் உடம்பில் உள்ள பல துவாரங்களின் வழியாகவும் குறிப்பாக அதிகமாக வாயின் வழியாகவும் ஆவியாகக் கழிந்துகொண்டே செல்கிறது. அதுபோக, மாந்தர் அவ்வுயிர் ஆற்றலைத் தீய செயல்களில் ஈடுபடுத்தியும் விரைவில் கழிந்துபோகச் செய்வதாலும் இளமையிலேயே பலர் இறந்து போகின்றனர். எனவேதான்—

திருவள்ளுவர் கூறிய அடக்கத்தை இளையோர் முதல் முதியோர்வரை உணர்ந்து பார்க்கவேண்டும். அடக்கத்திற்கெல்லாம் மூல அடக்கம் மன அடக்கம். அது உயிர்ச் சார்புடையது. எனவே கழிந்து தொலையும் உயிர்ப்படக்கம் ஏற்பட்டால் மற்ற புலனடக்கம் தானுக அமையும். இது சொன்னுல் முழுவதும் விளங்காது. செய்து பார்க்க பார்க்கத்தான் புலப்படும்; உயிரும் நலப்படும்; வாக்கும் ஒளிப்படும்; வன்மை வெளிப்படும். இக்கட்டுரை படித்தவர்களில் உயிர்ப்படக்கப் பயிற்சி (சித்த வித்தை) பெற்றவர் பெருதவர் என இரு சாராருமாக இருக்கலாம். வித்தை பெற்று இடையே விட்டு, நம்பிக்கை வராமலிருப்பவர் நன்கு ஊன்றி இத் திருக்குறளை ஆராய வேண்டுகிறேன். வித்தை பெருதவர்கள் வித்தை மீது நல்ல நம்பிக்கையும் நல்ல உழைப்பும் உள்ளவர்களை மட்டுமே நாடிப் பயன் பெற வேண்டுகிறேன்.

# 19. வருமுன் காப்போம்!

இந்தத் தலைப்பை நோக்குபவர் பலர்க்கு, பல வினக் குறிகள் எழலாம். ஏதேதோ வர வேண்டும் என்றெல்லாம் பற்பல விழைவுகட் கேற்ப வரவு களையே எதிர்நோக்கியிருக்கும் இக்காலத்தில் "வருமுன் காப்போம்!" என்றால், எது வரு முன்? எவை வரு முன்? எப்படி வருமுன்? ஏன் வருமுன் எப்படிக் காக்கவேண்டும்? என்றெல்லாம் வினவத் தோன்றும்.

அறிவுச் சித்தராகிய உயர்திரு வள்ளுவர் வாக்கையுணர்ந்தவர்க்கு உடனே அவர் கூறிய

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்." —குறள் நினைவிற்கு

வரும். சிலர்க்கு இக்குறள் விளங்காவிடினும், இக்குறட் பொருளுக்கேற்ப ஒவ்வொருவரும் சில சூழ்நிலைகளிலேனும் தத்தம்மைச் சில வேளைகளிலேனும் காத்துக்கொள்வார்கள். அங்ஙனம் அவர்கள் காத்துக் கொள்ளும் தொடர் எண்ணமும் சில வேளைகளில் நழுவி விடுவதுமுண்டு.

விலங்குகளைப் போல் வாழ்பவர் சிலர் தற்காப்பு என்பதற்கே பொருள் தெரியாமல், தமக்கு துன்பம் தொடர்ந்து வரும் செயல்களையே தமக்குத் துணை—காப்பு—என்றெண்ணி—தேவரனையராக எப்பொழுதும் எதையும் செய்து மாய்கிறார்கள்.

இப்படித் தற்காப்பு முயற்சி பிழைபட்டுப் போவதால் நாடு விரைவில் கெட்டழியும் என்பதை உணர்ந்துதான், இவ்வுலகில், பல இடங்களிலும்

பேரறிஞர்கள் தோன்றி—பரம அம்சர்களாக—புல வர்களாக—புராணத் தலைவர்களாக-சித்தர்களாகத் தத்தமக்கு ஏற்ற சூழ்நிலையில்-பொன்மொழிகளாக-பாடல்களாக—செய்யுள்களாக—வாயுரையாக—கல் வெட்டு, செப்பேடு எழுத்துச் செய்திகளாக அற வழிகளைத் தெரிவித்துச் சென்றார்கள்.

ஆனால், இன்று, அங்ஙனம் அற வழிகளை வகுத் துச் சென்றவர்களைப் போற்றுகிறோம்! அவர்கள் கருத்துக்களைக் கொண்ட ஏடுகளையும் — நூல்களையும் வைத்துக் கற்கிறோம் —கற்பிக்கிறோம்! விழாக்கள் நடத்துகிறோம். பாட்டரங்கம்-பட்டிமன்றம் முதலி யனவும் நடத்திச் சிறப்பிக்கின்றோம். இவ்வினைகள், முதன் முதலில் மனிதக் குழு தோன்றிய இலெமூரி யக் கண்டமாகிய தென் குமரிப் பகுதியில் முன்பே தொடங்கி இன்றுவரை தொடர்ந்து நடக்கின்றன. ஆனால், மதங்களுக்கும், மனித இனங்களுக்கும் ஏற்ப மறைகள் ஓதப்பட்டும்—கோவில் வழிபாடுகள் பெருக்கப்பட்டும் வரும் இந்நாளில், உலகப் போர் உணர்ச்சிகளைக் குறைக்கவோ—வளர்ந்து வரும் போர்ப்படைச் செலவுகளையும்—மா நி ல ங் க ள் தோறும் பெருகிவரும் காவல்துறைகளையும்--சிறைச் சாலைகளையும்—மருத்துவமனைகளையும் குறைக்கவோ முடியவில்லை! குறைக்கக்கூட முடியாதபோது மேற் கண்டவற்றை இல்லாமல் செய்வது எளிதா?

மக்கள் தம்மைத் தற்காக்க வழி சொல்லும் நூல்களோ, படிக்க மட்டும் பயன்படுகின்றன. படிப் பிப்பதும் பிழையாகவும் படிப்பிக்கப்படுகின்றன.

மாண்புமிகு மறைகளும், முறையற்ற செயல் களால் போற்றப்படுகின்றன. "உயிர்களைக் காக்க உதவ வேண்டும்" என ஏசு—நபி போன்றவர்கள்

சொல்லிய மறை கற்பவர் சிலரும் ஆடு-கோழி-முத லியவற்றை வழிபாட்டு விழாவில் கொன்றுண்ணப் பயன்படுத்துகின்றனர். பிறவுயிர் நீக்கித் தம்முயிர் காத்தலா தற்காத்தல்? "அவி சொரிந்(து) ஆயிரம் வேட்டலின், ஒன்றன் உயிர் செகுத்(து) உண்ணாமை நன்று!" என்று அறங்கூறும் திருக்குறள் ஒன்று போதுமே அவ்விடத்திற்குச் சான்று பகர! "தன் னூண் பெருக்கற்குத் தான்பிறி(து) ஊனுண்பான் எங்ஙனம் ஆளும் அருள்?" என வினவும் குறளும் விடை கூறுமே!!

அணியும்-அருமையும்-பெருமையும்-பேரும் புக ழும்-பெரும் பொருளும் சேர்த்து பீடுடைய விழாக் கள் நடத்தும் கோவில்கள் தாம் இயங்கப்படு கின்றனவே-அவைகளாவது இன்று ஒருவர்க்கு வரும் கேட்டிலிருந்து தப்பிக்கச் சரியான - நெறியான - முறையான-துறையை வகுத்துரைக்க வல்லதாக- நல்லதாக-திகழ்கின்றனவா?

கோட்டை மறைவில் பதுங்கியிருந்து திருடு பவர்கள் கோவில்களில் திருடவும்—கும்பிடப்போன இடத்துக் கூட்டத்தில் இடித்து—மிதித்துக்கொன்று பிணமாக்கிச் செல்லவும் — காவல் துறையினரைக் கொணர்ந்து நிலையாக வைத்துக் கோவில்களை வளர்க்கவும் தானே பெரிதும் பயன்படுகின்றன கோவில்கள்!

மனிதர்க்கு வரும் துன்பங்களை, வாராமல் அவை வருமுன் காக்க வேண்டுமானால், அவரவர் தனியே பாடுபட வேண்டுமே யொழிய—அற நூல்களால் மட்டுமோ—அறவோராகப் பாராட்டப்படுவதால்

மட்டுமோ பெறமுடியாது! இதற்குச் சான்ருக ஒரு திருக்குறளை எண்ணிப் பார்ப்போம்.

"உற்றநோய் நீக்கி, உறுமல் முற்காக்கும்
பெற்றியார் பேணிக் கொளல்!" —திருக்குறள்

இதன் பொருளாவது:- "ஒருவர்க்கு உற்ற துன்பங்களை நீக்குபவராகவும் நீக்கியபின், மேலும் அத் துன்பம் அவரை அணுகாமலும் காப்பவராகவும் உள்ள திறமை சார்ந்த பேரறிஞரைப் பணிந்து, அவர் அன்பைப் பேணிக்கொள்ள வேண்டும்!" என்பதாகும்.

இங்கே—உற்ற நோய் என்பது—ஒருவருக்கு நேரும் துன்பம். நோய்-துன்பம். உற்ற நோய் என்பது ஏற்கனவே பெற்ற நோய். (இந்த காலம்)

தனக்குத் துன்பங்கள் எப்படியெல்லாம் வருகின்றன? என்ற வினாவிற்குப் பொதுவாக விடை காண முயன்ருல், (1) தன்னறிவு பிழைபட்டபோதும் (தன்ஞலும்) துன்பம் வரும். (2) தான் சேர்ந்து வாழும் சுற்றத்தார் சார்ப்பிலும் துன்பம் வரும்.

இயற்கை சூழ்நிலையான குளிர், வெப்ப மாற்றங்களாலும் உடலளவிலும் துன்பம் வரும். முன் பிறவித் தீவினையாலும் வருமென்று சொல்வாருமுளர். இவ்வாறே துன்பங்கள் வருகின்றன எனத் தெரிகிறது. மேற்கண்ட வழிகளில் துன்பங்கள் நம்மைத் திண்டாமல் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். இஃது எல்லாரும் விரும்பக்கூடியது தான்.

ஆண்டி முதல் அரச வாழ்வு வாழ்பவர் வரை- அவரவர் தகுதிகட்கேற்ற துன்பங்களைத் துய்க்காதார் இலர். காரணம்? அவரவர் நிலைகளில் இருந்து

மேநிலை எய்தப் பேரவாக் கொண்டு தேவைகளைப் பெருக்குவதே துன்பத்திற்கு அடிக்கல்! தேவையைப் பெருக்கப் பெருக்கத் துன்பமும் பெருகுவது இயல்பு தான்.

துன்பமே இல்லாதவர்தான்—துன்பமே வரப் பெறுதவர்தான்—துன்பத்திற்குத் துன்பம் செய்ப வர்தான்—துன்பத்தை வெல்பவர்தான்—பிறர் துன் பம் போக்க வல்லார்! அல்லவா? அவர்தான் உற்ற நோய் (துன்பம்) நீக்குபவர். அவரையல்லவா தேடிப் பிடிக்கவேண்டும்! யார்? துன்பப்படுவோர்! அதிலும் துன்பம் வேண்டாமல் உண்மை இன்பமே காண வல்லார்தான் முயலவும் தகுதியுடையவர்கள் ஏனை யவர்-வாயளவில்-துன்பம் வந்து தொல்லையில் அகப் பட்டு விழிக்கும் அளவில்தான்ꞏ உற்ற நோய் நீக்கு பவரை தேடியலைவார்கள்.

மற்றும் பலர் அறியாமல் இன்பவழி என் றெண்ணி, பழமென மயங்கி விளக்கில் விழும் விட் டிலைப்போல் வீழ்ச்சியுறுவர். வீழ்ச்சியுறுவார் பல ராகியும்—விழிப்புணர்வுடையார் சிலராகியும் திக ழும் காலம் நிகழ் காலம். அதனுற்றான் இவ்வாறு விளக்கவேண்டியதாயிற்று.

இனி, வருமுன்! ஆம்! துன்பம் வருமுன் நம்மை நாம் காக்கத் துணை வேண்டியது மிக இன்றியமை யாததாகும். முன்கண்ட நான்கு வழிகளில் நம்மைத் துன்பமானது எவ்வழியிலும் வந்து ஆட்கொள்ளா மல் காக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

சிறந்த மறைகளைக் கற்கவேண்டுமா? கற்கி ேறும்! ஆனல் கற்றபடி நிற்க முடியவில்லையே! ஏன்? அப்படியானுல் கற்றுப் பயன் என்கொல்? அதைப்

போலவேசிறந்த சொற்பொழிவுகளைக்கேட்கிறோம்! ஆனால் ஒழுக முடியவில்லையே! கேட்டென்ன பயன்? அப்படியானால், வேறுவழி? இவ்வாறு வினவித்தான் இறுதியில் உடன்பாடான முடிவைக் கொண்டார் விவேகானந்தர். அவர்க்கு உற்ற நோய் நீக்கியவர் இராமகிருட்டிணர். அவர் பெற்றியார். துன்பம் வெல்லும் வெற்றியார். வெற்றியார் வழியில்-உலையாது-தாழாது உழைத்தார் விவேகானந்தர்! வெற்றி பெற்றார். அவர்கள் உழைத்து வென்ற வழியைவிட மிக எளிய வழியைக் கண்டுபிடித்தார் மாபெரும் முயற்சியுடைய பெரியார்!

துன்பந் துடைக்கும் பெரியார் பலரில் அவர் ஒருவரே, எளிய பயிற்சி முறையால் துன்பம் துடைக்க வாராமல் தன்னைக் காக்க வழி செய்தார். அவர் வழிப் பயிற்சியால் பலர் இன்றும் துன்பம் துடைத்தோராகத் திகழ்கிறார்கள். துன்பம் வாராமல் காக்கப் பல்நூறு சித்தவித்தியார்த்திகள் முயல்கிறார்கள். அவ்வழி செய்தவரே நமக்கு உற்ற நோய் நீக்கும் உயர் பெரியார்! அவர் காட்டிய துணையே வாசியோகப் பயிற்சி! அப்பயிற்சியை விளக்கும் நூலே சித்த வேதம். துன்பம் வருமுன்னர்க் காக்க வைத்த பெரியாரே வாழ்வாங்கு வாழும் பெரியார்! வடகரைப் பெரியார்! சாவென்னும் தலையான துன்பத்தையே வாராமல் செய்ய வழிகாட்டிய துணைமிகு பெரியார்! அவரே நம் சிவானந்த அறிவுத் தந்தையார்! அவர் வழி நின்று—அயராது உழைத்தோமானால், வருந்துன்பம் வாராமல் நம்மைக் காக்கலாம்! இன்ப நிலை சேர்க்கலாம்! உலக நலம் ஏற்கலாம்! தெரிவோம்! தெளிவோம்! முயல்வோம்! வெல்வோம்! *

# 20. வாழ்வாங்கு வாழ்தல்!

இந்த உலகத்தில் எத்தனையோ வகையான படிப்புகள் உள்ளன. எத்தனையோ வகையான பதவிகளும் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலான படிப்பும், மேலான பதவியும் ஒன்று உண்டு! அது எது? என்றால், எல்லாவற்றையும்— எல்லாரையும் சேர்த்தாளப்படும் நாட்டை ஆள்வதற்கு உரிய படிப்பு தானே அந்த மேலான படிப்பு? அப்படியே நாட்டையோ, உலகத்தையோ ஆளும் பதவிதானே அரச பதவி? இதைவிட வேறு உயர்பதவி யாது உள்ளது? என்று வினவத் தோன்றும அன்றோ!

வாருங்கள் திருவள்ளுவரிடம்! அவரிடம் வினவுவோம்.

"உயர்திரு வள்ளுவப் பெருந்தகையே! இந்த உலகத்திலே பெரிய படிப்பும், பெரிய பதவியும் உண்டா? அப்படியானால் அவற்றை விளக்க வேண்டும."

தி. வ:— ஆம்! பெரிய படிப்பு! அரிய படிப்பு! அதுவே மாந்தருக்கு உரிய படிப்பு! அப்படிப்பே உயிர்ப்படிப்பு! மற்ற படிப்பெல்லாம் உயிரற்ற உடற்படிப்பு! உயிர் நெறிப் படிப்பே உயர் படிப்பு! உயிர்ப்படிப்பை ஒத்தறிவான் மட்டுமே உயிர் வாழ்வான். மற்றையான் செத்தாருள் வைக்கப்படுவான். அப்படிப்பில் தேர்ச்சி பெறறவனே பெறுதற்கரிய பதவியை அடைகிறான்!

"பெறுதற்கரிய பதவி என்றால்', அமைச்சர் பதவியா? அரசர் பதவியா? இவைதானே இப்போது பெறுதற்கரிய பதவியாக இருக்கிறது! இவற்றில் எதைச் சொல்கிறீர்கள்?"

தி வ:—அமைச்சர் பதவியும் இப்பொழுது யார் முயன்றாலும் பெற்று வருகிறார்கள். அப்பதவிகளை நாங்கள் பெரிய பதவி என ஒப்புக்கொள்ள மாட்டோம். அப்பதவியில் உள்ளவர்களும் பெறுதற்கரிய பதவி ஒன்றாகும் அதுவே தெய்வப்பதவி! இறைமைத் தன்மையுடைய பதவி!

''அப்படியா, அப்பதவியைப் பெற மாந்தனால் முடியுமா?''

தி. வ:— ஏன் முடியாது! முடியும் என்பதனால் தானே என் குறள் நூலில் சொல்லிவைத்திருக்கிறேன்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும'' இதைப் படிக்கவில்லையா?

''படித்திருக்கிறோம். ஏதோ பதவுரை கருத்துரை எழுதிப் பள்ளிக்கூடத்தில் தேர்வெழுதித் தேர்ச்சி பெறப் படித்ததாக இப்பொழுதுதான் நினைவு வருகிறது.

இதற்குரிய மெய்ப்பொருள் தெரியவில்லையே. வாழ்வாங்கு வாழ்பவன் என்றால் வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்று தெரிந்தால்தானே வாழ! அதற்குரிய உரைகளைச் சான்றுகளுடன் காட்டுவார் இலரே! வெறும் பதவுரை, கருத்துரை, தெளிவுரை, மதிப்புரை, தொகுப்புரை யெனப் பலவுரை போட்டு வணிகம் நடத்துகின்றனரே தவிர வாழ்வாங்கு வாழ்வது பற்றிச் சொல்லக் காணோமே!''

தி. வ:— நீங்கள் உண்மையான உயிர்நெறிப் பயிற்சியாளர்களைத் தேடி விளக்கம் வினவினால் விளக்கம் கிடைத்திருக்கும்.

''தாங்களே சொல்லுங்களேன்.''

தீ வ:— வாழ்வாங்கு வாழ்தல்—என்பது முதிராச் சாவு (அகால மரணம்) சாவாமல் நிலமிசை நீடுவாழுப்படி தன் உயிரைக் கழிய விடாதபடி தன்னுள் கட்டும் பயிற்சி (சித்தவித்தை) செய்து கொண்டே வந்தால் நெடுங்காலம் வாழும் நிலை உண்டாகும். அதுவே வாழ்வாங்கு வாழ்தலாகும். அப்படி வாழத் தலைப்படும்பொழுதே பிற மாந்தர்க்கில்லாத தனியாற்றல்கள் உண்டாகும். நிலமிசை நீடுவாழும் சான்றோர்களால் பலர் பல குறைகள் நீங்கப்பெறுகிறார்கள். எனவே அப்படிப்பட்ட சான்றோர்கள் தாம், முனிவர் — சாமி—குரு—தேவன் — யோகி—தவசி—சந்நியாசி — பிரமச்சரியன் — என்றெல்லாம் அழைக்கப் பெறுகிறார்கள். வெறுமனே சற்பனைசெய்து வானத்திலும், தண்ணீரிலும், நிலத்திலும், கல்லிலும், செடியிலும் கடவுள் நிறைவடையும் மாந்தர் பலராக இருப்பதால்தான் நீ வணங்கும் வானுறையும் தெய்வத்துள் வாழ்வாங்கு வாழ்பவனை வைத்து மதி என்று திசை திருப்ப இவ்வாறு சொன்னேன். இப்படித்தான் எண்ணி எழுதினேன். இதன் பொருள் இதுதான். எனவே, நீங்களும் எல்லாரையும் போல் சொல்லாமல் சாவதுபோல் சாகாமல, வாழ்வாங்குவாழ முயலுங்கள். அதுவே மாந்தராகப் பிறந்தவர் தம் பிறவிப் பயன்.

ஆம்! திருவள்ளுவர் தந்த விளக்கத்தை ஆய்ந்தால் முற்றிலும் பொருத்தமேயாம். இனியேனும், புறவாழ்வில் ஓங்குவாரைக் கண்டு பொறுமை கொண்டு, போதுமென எண்ணும் நிலையிருந்தும் மேலும் சேர்க்க எண்ணி உயர் வாழ்வுக்கு முயலாமல் உண்மையாக வாழ வேண்டிய வழி தெரிந்து வாழ்வோமாக! வழிகாட்டியான சித்தவேத நூலைத் துணைக்கொள்வோமாக.

# 21. உண்மை வழிபாடு எது?

அழிவு நிலைகளையே நோக்கிச் செல்லும் ஆடம்பரச் செயல்களில் போலிச் செயல்களே மலிவாக நடைபெறுகின்றன எனலாம். அவற்றில் வழிபாட்டு முறையும் ஒன்று. 1) இந்தியர்மரபில் தோன்றிய பெரியார்கள் அறிவித்துச் சென்ற வழிபாட்டுமுறைகளிலும், 2) முஸ்லிம் மத, 3) கிறித்துவ மத வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் இன்று பெரும்பாலும் போலி நிலைகளே உள்ளன. இந்தக் கட்டுரையைக் கற்போர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருப்பினும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். எப்படி என்றால்,

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும அறிவு''

என்று ஞான சித்தனாகிய உயர் திருவள்ளுவர் சொன்னபடி எவ்வளவிற்குச் சிந்திக்கின்றீர்களோ அவ்வளவிற்குப் பயன் தரும். சிந்தனையுடன் கற்கத் தொடங்கி விட்டீர்களா! இந்தக் குறளைப் படித்திருப்பீர்கள் அல்லது கேட்டிருக்கலாம். இல்லையெனில் இப்போதேனும் கற்றுத் தெளிய வாய்ப்பாகும். இதோ—

''அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்''

மேலே சொன்ன எல்லா மதத்தினர்க்கும் இக்குறள் பொதுவாக உள்ள அறவழி சொல்கிறது. மற்ற எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் அறவோராவார். அவர்க்கு மறு பெயர்தான் அந்தணர். ''மற்ற எவ்வுயிர்க்கும்'' என்றது. அறவோராக விளங்கும் அந்தணர் தம்மைச் சார்ந்த

உயர்திணை உயிர்களையன்றி ஏனைய (மற்ற) எல்லா அஃறிணை உயிர்கட்கும் சிறப்புத்தன்மை செய்பவராக (செந்தண்மை) விளங்க வேண்டும். அவ்வாறு விளங்குபவர் எந்த மதத்திலும் தோன்றலாம் அல்லவா? முஸ்லிம் மதத்திற்கு ஒரு முகமது நபியும், கிறித்துவ மதத்திற்கு ஏசுவும், புத்த மதத்திற்கு, சித்தை + ஆர்த்தான் (ஒலித்தான்) சித்தார்த்தன் என்னும் கவுதம புத்தனும் அறவோராகத் தானே திகழ்ந்தார்கள். அவர்களைப் போல பல மதங்களில் அறிஞர்கள் தோன்றி உயிரியல் தன்மை ஒன்றையே சுட்டிக்காட்டிப் போந்தது போல, சித்தர் சிவானந்தரும் தோன்றி அறவோராக (அந்தணராக) விளங்கி உயர்ந்து வாழ உரிய உயிர்வழி வழிபாட்டைக் கற்பித்தார்.

இதிலிருந்து பொதுவாக என்ன தெரிந்துகொள்கிறோம். அந்தணர் என்பவர்தான் அறவோர். அறவோர் என்பவர்தான் எல்லா உயிர்கட்கும் சிறப்புச் செய்பவர். நான் வேறு சாதி உயிர், நீ வேறு சாதி உயிர், அவன் வேறு சாதி உயிர் என்று பாகுபாடு பேசாத பகுத்தறிவுக் கொள்கை விளங்குகிறது. அத்துடன், உயர்ந்த சாதியாகிய பிராமணர் (ஆரியர்) நாங்கள் தான் அந்தணர் என்று சொல்லி ஏய்த்துப் பிழைக்கும் இழி நிலையும் விளங்குகிறது அல்லவா? அந்தணர் என்றால், உடனே பிராமணர்—பார்ப்பனர்—என்றுதான் பெரும்பாலோர் எண்ணுவர். அவர்கள், உயர் திருக்குறளை ஆய்ந்து சிந்தனையில் தோய்ந்து பார்த்தால் நம் பக்கம் சாய்ந்து வருவார். எதிர்ப்போராயின் ஓய்ந்து போவார். விளங்காதவர் காய்ந்து (சினந்து) போவார். மாய்ந்து போகா மருந்து பெற்ற மக்களாகியவர்கள் அவ்வறியாமையாளர் பற்றிக் கவலமாட்டார்.

எல்லா மதங்களிலும் அறவோர்க் குரிய இலக்கணம் சொல்லப்படுகின்றன. அதாவது அந்தணர்க் குரிய சிறப்பு பேசப்படுகிறது. எவ்வுயிர்க்கும் செந்தண்மை சேர்க்கும் சீர்சால் பெருமை எல்லா மரபினர் மறைகளும் கூறுகின்றன. அங்ஙனமிருக்க அம் மறையின் பெயரால், இந்து, முஸ்லிம், கிறித்து மதங்களில் செய்யும் வழிபாடுகளில், பிற உயிர்களைப் பிரித்து அவற்றின் உடல்களை உணவாக்கி உண்டு நிறைகாணும் உயிர் வதை வழிபாடுகள் அறவோர் செய்வனவா? அந்தணராக இயங்கி மதத் தொண்டர்களாக விளங்குநர்கள் செய்யும் உயர் செயலா? இறை நெறிக்கு முறையாகுமா? இருக்கு (மறை) வேதத்தில் (ஆ) பசுவை வெட்டி வழிபடச் சொல்லி வழிபாடாற்றி வன்முறைக் கொலை வழிபாட்டுக் கூற்றுப் போல் செய்யலாமா?

'கோவில்' என்ற பெயரால், 'அறநிலையம்' என்ற பெயரால் ஆங்காங்கே சென்று, கைப்பொருளைக் கொண்டு பூசைப் பொருளாக மாற்றி, மெய்ப் பொருளை நினையாமல், பொய்ப் பொருளாக உள்ள, கோயிற்கடைப் பொருள்களையும், அவற்றை விற்கு நரையும் வாங்குநரையும் விழி நோகாமல் நோக்கி நோக்கி கொட்டோசை, மணியோசை, குமரிகளின் சிரிப்போசை, பட்டாடை கட்டு முடல் பாவையரின் விழி வீச்சை, இமை—கொட்டாமல் நோக்கி நோக்கி எட்டுக் கோடி எண்ணமிட்டு, அகப் புறட் சிக்காட்சிகளை ஆராயும் மானிடர்கள், அர்ச்சனைக்குக் காசு தந்து, ஐயர்களை ஓதவிட்டு ஆற்றிவரும் மானிடரின் சுகபோகக் காட்சிகண்டு, பொய்மை வழி பாட்டுப் போலியிலே நிறைவுறுவோர், (அங்கே) உண்மை வழிபாட்டை ஒராமல் — நேராமல் —

வீணுக்குழைக்கின்ற வீணர்களே யாவார்கள். இவ்வதை உணர்ந்த தாயுமானவரும், மற்றவரைப் போல் கோவிலிற் புகுந்து, தன்னலங் கருதி வழிபட வில்லை. மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் சிறப்பைத் தா! தா! எனப் பெரிய அருள் நோக்குடன் வழிபடுகின்றார். இதோ படித்துப் பொருள் நோக்குங்கள்.

"எவ்வுயிரும் என்னுயிர் போல்
எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட் கருணை
செய்யாய் பராபரமே!"

"வஞ்சனையும் பொய்யும் உள்ளே வைத்(து) அழுக்காறுய்உளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ நெறிதான் பரா்பரமே!"
"ஞாலத்தை மெய்யெனவே நம்பிநம்பி நாளும்என்றன்
காலத்தைப் போக்கி என்ன கண்டேன் பராபரமே!"
"கொலை, களவு, கள், காமம கோபம் விட்டால் அன்றோ
மலையிலக்காம் நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே"
"தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையிலே நடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற் கீற்றிலே
பொட்டிலே அவர்கட்டு பட்டிலே, புனைகந்த
பொடியிலே அடியிலே மேற்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழைய விட்டு,
நெட்டிலே யலையாமல் அறிவிலே பொறையிலே
நின்னடியார் கூட்டத்திலே
நிலைபெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
நேயத்திலே உனிருதாள்
மட்டிலே மனதுசெல நினதருளும் அருள் வையோ!"

என்று வழிபடுகின்றார். "உயிர் வதை செய்து வழி படும் வழிபாடே உயர் வழிபாடு" என உரையாடு வார்க்காகவே உயர் திரு வள்ளுவனார்,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்(து) உண்ணாமை நன்று."

என்று அருளினார். மேலும்,

"கொல்லான், புலாலை மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்!" என்றார்.

"தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி(து) ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?"

என்றும் வினவுகிறார்.

எனவே, போலி வழிபாட்டைச் சொல்லவேண் டுமானால் கணக்கில் அடங்கா. ஆயிரம் தீமைகளை அடுக்கி அடுக்கிப் பல சான்றுகளைச் சொல்வதை விட, ஓரிரண்டு நன்மைகளைச் செயல் அளவில் கடைப்பிடிக்கச் சொன்னாலே போதும். என்றாலும், இன்றைய உலகிற்குத் தீமைகளையும் அவற்றை விளக்கும் சான்றுகளையும் காட்டித்தான் எழுத வேண்டியுள்ளது. நல்லவற்றைக் காட்டத்தான் ஒரே ஒரு சித்தவேத நூல் போதுமே! அதைப் பயி லத்தான்—அதன்படி உண்மை வழிபாடு செய்து உயரத்தான்—உலகம் நலமுறத்தான்—இவ்விதழில் எல்லா வகையிலும் எழுதித் தெரிவிக்கவேண்டிய இன்றியமையாமை வேண்டியிருக்கிறது.

எனவே, இவ்விதழைக் கண்ணுறும் அன்பர்கள் வழிபாடு செய்பவர்களாயின் போலி வழிபாட்டைச் செய்யாதீர்கள். அதனால் நன்மையில்லை. வேண்டு மானால் தீமையே பெருகும். வழிபாடே செய்தறி யாதவரா? அப்படியானால், தம் பிறவி வீண் பிறவி

யாகி விடாமல் பயனுடைய பிறவியாக உண்மை வழிபாடு செய்து உய்வடைய வேண்டும். உண்மை வழிபாட்டின் உயர்வு—நன்மை—அதன் முறைகள் பயன்—எல்லாவற்றையும் சித்தவேத நூலில் காணலாம். சித்த வேதம் பலாக்கனி போன்றது. மற்ற கனிகளைப் போல் எடுத்ததும் எளிதிற் கடித்துச் சுவைக்க முடியாது பலாக்கனி முரடாக இருக்கும். முள்ளாகவும் இருக்கும். ஆனால் பக்குவமாகப் பிளந்து, சடைத் தசைகளை விலக்கிச் சுளையெடுத்துத் தின்றால் அதன் மணமும் சுவையும் ஏனைய பழங்களை வென்றதாகும். அதுபோல, சித்தவேத நூலை எடுத்ததும் எளிதிற் கற்க முடியவில்லையே என்று ஒதுக்கி வைத்துவிடாதீர்கள் அப்படிச் செய்வது, பலாக் கனியை அப்படியே சுவைக்க முயன்று, முடியாமல் ஒதுக்கி வைத்தது போலாகும்.

எனவே, அறிவு வளர—நல்ல அன்பு வளர—உயிர்கள் வளர—மனிதராய்ப் பிறந்த அனைவரும் உண்மை வழிபாடு செய்வோமாக. உலகம் நலமுற உய்வோமாக.

---

## சொல் வன்மை!

சொல் வன்மை—என்றால் அழகாகப் பேசுவதா? வெறும் மேடைப் பேச்சு மட்டுமா? அல்ல! சொல்லைக் கேட்டவர் கட்டுண்டு வரவும், பகைமையுடையவரும் விரும்புமாறும் பேசும் வன்மையே சொல் வன்மை. போட்டியிலே பேசி வெல்வது மட்டுமே சொல்வன்மையாகாது! உலகமே விரைந்து ஏவல் செய்யும் அளவிற்குப் பேசுதலே சொல்வன்மை!

**இவ்வாறு கூறியவர் யார் தெரியுமா? திருவள்ளுவர். குறள் எண்கள்:— 643, 645, 646.**

# 22. வாழும் உயிர்க்கு?

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

இந்தத் திருக்குறளை எல்லாரும் ஓரளவாவது படித்திருக்கலாம். திருக்குறளில் அதிகார வைப்பு முறைகளும், பாடல் அடுக்கி வைத்த முறைகளும் சில இடங்களில் பொருந்தாமல் உள்ளன. மேலே கண்ட பாட்டு உயிர்நெறிப் பாட்டு. உயிர் காக்கும் பகுதியில், அறத்தில் சேர்க்கவேண்டும். முறையாகப் பார்ப்போம். இங்கே 'வாழும் உயிர்க்கு' என்று சொன்னதை எண்ணவேண்டும்.

வாழ்ந்த—இறந்த காலம்.
வாழ்ந்துகொண்டு—நிகழ்காலம்.
வாழும்—எதிர்காலம் (வருங்காலம்)

வாழும் உயிர்க்கு—நேற்று வாழ்ந்த உயிர், இன்று வாழ்ந்துகொண்டிருக்கிற உயிர், நாளைக்கும் உடலை விட்டு நீங்காமல் வாழும் உயிர்க்குத்தான் சொல்லப் பட்டது அத்திருக்குறள். இனியாவது தெளிவாகப் புலப்படுமல்லவா? செத்துக்கொண்டே இருப்பவர்க்குச் சொன்னதன்று இது. வாழத் தெரிந்த உயிர்க்கே சொன்னது. இதை, வாழத் தெரியாதவர்களும் தெரிந்து இவ்வழி வாழவே இக்குறள் விளக்கிச் சொல்லும் நோக்கமாகும். வாழும் உயிர்தான் வாழத் தெரிந்த உயிர்தான் நிலமிசை நீடுவாழும். அவ்வுயிர்க்கு இரண்டும் கண்ணாகும். எது இரண்டும்? என்று வினவத் தோன்றும். முதலில் இரண்டு என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பன்மையாகும் என்றும், கண் — என்பது ஒருமையாகுமென்றும் நினைவில் நிறுத்தவேண்டும். இனித் திருவள்ளுவர் சொன்னதை முறைப்படி எண்ணவேண்டும். எண் என்ப—

எண்ணிக்கையைக் குறிக்கும் சொல்லாகவும் சொல்வார்கள்; ஏனை—மற்ற மொழிகளில் உள்ள; எழுத்து என்ப—மொழி முதல் எழுத்து (அ) எனவும் சொல்வார்கள்; இவ்விரண்டும்—இந்த இரண்டு கூற்றுப் படி சொல்லப்படுவதை (நன்கு உணர்ந்தவர்கள் ஒன்றாகக் கருதி); கண் என்ப வாழும் உயிர்க்கு—இது வாழும் உயிர்க்குக் கண்ணாகும் என்பார்கள். கண்—இது ஒருமை. எண்ணும் எழுத்தும்—இவ்விரண்டும்—என்பது பன்மையாகும். அவ்வாறு பன்மையானால், இவ்விரண்டும் கண்ணாகும் — என்று சுட்டிக் கூறாமல் கண்களாகும்—என்றல்லவா கூறியிருக்க வேண்டும்? எண்ணுங்கள்! தமிழில் மொழி இலக்கண அறிவுடையார் அ—இவ்வெழுத்தைத் தமிழ்க் கணக்குப்படி எட்டு என்றே எழுதுவார்கள். எட்டு—என்பதன் மதிப்புத்தான்—அ. இனி, தமிழ் மொழிக்கு மட்டுமல்லாமல் ஏனைய மொழிகட்கும் முதல் எழுத்து அகரத்தையே தலை எழுத்தாகத் தொடங்குவதால்—அ—இவ்வெழுத்தை "எழுத்து" என்றும் கூறுவர்.

ஆனால், வெளிப்படையான கணக்கில் இவ்வாறு கூறப்படும் இவ்விரண்டு வகையும், கற்றவர்க்கோ, படித்தவர்க்கோ, செல்வர்க்கோ, அரசனுக்கோ, அறிஞனுக்கோ கண்ணாகுமென்று சொல்லாமல் 'வாழும் உயிர்க்குத்தான் கண்ணாகும் என்று கூறினால் செத்துக்கொண்டேயிருக்கும் உயிர் எத்தனையோ மாந்தர் வடிவில் எத்தனையோ நிலையில் வாழ்ந்து கொண்டே இருக்கிறதுபோல பாவனை செய்து இறப்பை நோக்கி விடுகிறதே. அவ்வுயிர் எல்லாம் வாழும் உயிர் ஆகுமா? ஆகா. இனி, அ—இவ்

வெழுத்து எண் என்றும்—எழுத்து என்றும் சொல்லப்பட்டாலும் கண் என்று எப்படிப் பொருள்படும்? வினவிப்பார்த்தால், உயிர்க் காப்புப் பயிற்சி விவரமே தோன்றும்.

அ—இது எண்ணுகக் குறிக்குப்போது எட்டு என்ற பொருள் தானே. எட்டு விரற்கடை மூச்சுத் தான் நாம் மேலே இழுக்கும் மூச்சுக் கணக்கு. இறக்கிவிடும்போது 12 விரற்கடை (அங்குலம்)யும், அதற்கு மேலும் உயிர்க் காற்று கீழே நசித்துப் போகிறது. அவ்வாறு அதைப் போகவிடாதபடி இழுத்த அளவே (எட்டு) வெளியில் கசிய, வீணுகும் உயிர்க்காற்று இழப்பாகாமல் உள்ளே சித்த வித்தையை எப்பொழுதும் (வாய் பேசாத பொழுதெல்லாம்) நடத்த அந்த எட்டு வீரற்கடை தான் நடக்கும். இதனல் உயிர்ப்பாற்றல் வீண் ஆகாதபோழ்து அவ்விடத்தில் அது வாழும் உயிர் ஆகிறது. அவ்வுயிர்க்கு எட்டு கணக்கு. கண்ணுக நின்று நீடு வாழும் வழி ஒளியை உதவுகிறது. இதுதான் எண் வடிவில் வந்த பொருள்.

இனி அ—எழுத்து வடிவில் நோக்கினுலும், எல்லா எழுத்துக்களுக்கும் மூலமானது அகரம். அகரத்தை முதலாகக் கொண்டே எல்லா மொழிகளும் நடைபெறுகின்றன. அதுபோல வாழ வேண்டுமென்று வகை தெரிந்து வாழும் உயிர்க்கு இவ்வகரமே (அ) அகத்தின் அடிப்படை உயிர் என்ற பொருளில் (புறத்தின் அடிப்படை உடம்பு) சொல்லப்பட்டது.

"உண்ணும்போது உயிரெழுத்தை உயர வாங்கி" என்று தொடங்கும் சித்தர் பாடலிலும் உயிர் எழுத்து என்று குறித்தது அ—இதுவே.

உணவை உண்ணும்போது கூட உயிர்க் காற்று (பிராணன்) வீணுகாமல் உயிர்க்காற்றை மேலே இழுத்துக்கொண்டே உண்ண வேண்டும் என்பதே கருத்து. இக்கருத்து, சித்த வித்தை பெற்றவர்க்கே எளிதில் புலனுகும். எனவே, வாழும் உயிர்க்கு என்றது, சித்த வித்தை பெற்ற உயிர்தான். இவ்வாறு தெளிவிக்க வேண்டியது எதற்காக என்ருல், சித்தவித்தை பெற்றும்,இன்னும் போதுமான நிறைவு (நம்பிக்கை) கொள்ளாமல் ஐயப்பட்ட நிலையிலும், சிலர் மாறுபாடான நிலையிலும் இருப்பதால்தான் இவ்வாறு இடித்துரைக்கும் பொருட்டே இத்திருக்குறளின் உண்மைப் பொருளைக் கூறினேன். இக்குறளுக்கு வெளிப்படையான பொருளில் உரை சொல்லி, புலவர், மேதை என்றெல்லாம் திகழ்ந்தாலும், மெய்யுணர்வுக்குப் பொருத்தமிராது.

“எண்ணும் எழுத்தும் கண்களைப் போல முக்கியமானது! படித்தவர் கண்களே கண்கள் மற்றவை புண்கள்!” என்று கூறப்படும் கருத்துப் பொருந்தாது!

உடம்பில் உள்ள உறுப்புகளில் தலைசிறந்தன கண்கள். எண்ணையும், எழுத்தையும் படித்துவிட்டால் அவ்வாறு படித்தவர்கள் கண் போன்று— தலைசிறந்தவராக விளங்க முடிகிறதா? எண்ணும் எழுத்தும் படிக்காத—தெரியாதவன் செய்யும் குற்றங்களையும் துணிந்து செய்து, அதை மறைக்கத் தம் படிப்பையே போர்வையாக வைத்துக்கொள்ளுகிருனே படித்தவன்! அவ்விடத்தில் அவன் படித்த

எண்ணும் எழுத்தும் கண்ணாக உதவுகிறதா? புண்ணாக உதவுகிறதா? வீழும் உயிர் எல்லாம் வாழும் உயிராக மாற்ற வந்ததே சித்த வேதம்! உயிர்ப் படக்கப் பயிற்சி! முயலுவோம்! வாழ்வோம்!

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல." —திருக்குற

## பச்சை மண் குடமும் நீரும்!

வஞ்சனையால் பொருள் சேர்த்து வைத்து அது நிலையாய் உதவும் என்று கருதியிருப்பது பேதைத் தன்மையாகும். எது போல என்றால், பச்சை மண் குடத்தில் நீர் நிரப்பி வைத்துப் போற்றியது போலாகும்.

—திருக்குறள்

"சலத்தாற் பொருள்செய்(து) ஏம்ஆர்த்தல் பசுமண்
கலத்துள் நீர்பெய்(து) இரீஇயற்று." —660

சுந்தர் அச்சகம், பந்தல்குடி சாலை, அருப்புக்கோட்டை.



## சுவாமி சாந்தானந்தர்


(மலேசியா)

இவர் இடத்தால் கடல் கடந்தும், தொடர்பால் உடல் கடந்தும், திடத்தால, வித்தைத் திட்பத்தால் பெரியாராகவும் பலர்க்கு உயிர் நெறித் தொண்டராகவும், வாழ்பவர்! என்றும் குன்றாக் குன்றனைய வாழ வாழ்த்துகிறோம்.

---

## டாக்டர் சி. சங்கரனார்

**சித்த வித்யா வைத்தியசாலை,**
**74, பெல்ஸ் ரோடு,**
**சென்னை-5.**



இவர் சென்னை மாநில சித்த வித்தைப் பயிற்சி யில்ல (ஆலயம்) கழகத் தலைவர். மாபெரும் உயிர்நெறித் தொண்டர்! வாழிய இவர் தம் சித்த நெறித் தொண்டு!

வாழ்க பல்லாண்டு!

---

### : அடுத்து வெளிவரும் நூல்கள் :

1. குறள் நெறி வினா விடை.
2. திருக்குறளும் அவ்வைக் குறளும்.

(சித்தநெறிக் கட்டுரைகள்)

---

சித்த வித்தியார்த்திகள் தங்கள் முகவரிகளைப் பசுமபொற்கீழார்

# இந்நூல் கிடைக்கும் இடம்.

**டாக்டர் S. சங்கரனுர்,**
74, சித்தவித்யா வைத்தியசாலை,
பெல்ஸ் ரோடு, சென்னை-5.

**B. R. கிருஷ்ணராம்,**
148-A, ஜீவா நிலையம்,
திண்டுக்கல் ரோடு, மதுரை-1

**நாவலர் புத்தக நிலையம்,**
39-A, மேலாவணி மூல வீதி,
மதுரை 625001.

**குளத்துமணிசாமி,**
சிவானந்தா தபோவனம்,
கோவில்பட்டி.

**பு. பால்ராஜ் கடை,**
மாதா கோவில் பக்கம்,
மதுரைச் சாலை, இராஜபாளையம்.

**கு. நடராசன்,**
சிவானந்தா சித்தநெறிப்
பயிற்சிக் கழகம்,
பசும்பொன்.

**புலவர் S. பிச்சை,**
85, ஜோசியம் சண்முகஞ்
செட்டியார் தெரு,
நேரு மைதானம்,
அருப்புக்கோட்டை.

**சிவானந்தா சித்தநெறிப்
பயிற்சிக் கழகம்,**
பாலையம்பட்டி.

**வடகரை, சித்த சமாஜ
நூல்கள்.**

1. சித்த வேதம் ரூ. 4—||
2. வித்தியார்த்தி நடவடிக்கை ரூ. 0—5
3. உலக க்ஷேம பிரகாசிகை ரூ. 0—50
4. உலக சாந்தி ஜீவிதம் ரூ. 0—50
5. கேரளா அனுச்சாரம் ரூ. 0—50

தனித் தனியாகவும்,
மொத்தமாகவும் கிடைக்கும்
—: இடங்கள் :—

**சிவானந்தா சித்தநெறிப்
பயிற்சிக் கழகம்,**
பாலையம்பட்டி.
இராமநாதபுரம் மாவட்டம்.

THE EDITOR
**S. CHIDAMBARAM,**
SIDDHA SAMAJ (P. O.)
BADAGARA,
KOZHIKODU (Dt.)
KERALA.

மேற்கண்ட முகவரிகளில்
தேவையான நூல்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.